# தமிழர் திருமணத்தில் தாலி

டாக்டர் மா. இராசமாணிக்கனார், M. A. L. T., M. O L., Ph. D.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

செல்வி பதிப்பகம்
காரைக்குடி

செல்வி 2

இரண்டாம் பதிப்பு - அக்டோபர் 1957

Y 73 P 31 Q : 4271
J 7

விலை ரூ. 1—50

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# பதிப்புரை

இன்று நம்மிடையே உள்ள குறிப்பிட்ட ஒரு வழக்கம் தொன்றுதொட்டே இருந்துவருவதா அல்லது இடைக்காலத்தில் தோன்றியதா என்பதை எவ்வாறு அறிவது? நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியமுதல் இன்றளவும் உள்ள இலக்கியம்வரை இருந்துவரும் நூல்களில் காணப்படும் வழக்கங்களை விடாது குறித்துவரின், ஒரு குறிப்பிட்ட வழக்கம் எந்த நூலில் முதன் முதலாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்; பின்னர் அந்நூலின் காலத்தை அறியவேண்டும்; அறியவே, இக்குறிப்பிட்ட வழக்கம் இன்ன நூற்றாண்டிலிருந்து வழக்கிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று கோடலே நடுவு நிலை தவறாத ஆராய்ச்சியாகும். நூல் வழக்கோடு வேறு சான்றுகளும் இருக்குமாயின் அவற்றை ஆராய்தல் ஏற்புடையது. இப் பலவகைச் சான்றுகளையும் துணையாகக் கொண்டே "தமிழர் திருமணத்தில் தாலி" என்னும் இவ்வாராய்ச்சி நூல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சித்துறையில் எம். ஓ. எல். (M. O. L.) பி. எச். டி. (Ph. D.) என்னும் ஆராய்ச்சிப் பட்டங்கள் இரண்டினைப் பெற்றவரும், பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி என்னும் ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியருமாகிய உயர்திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் இந்நூலை எழுதியுள்ளனர். இவ்வாராய்ச்சி நூலை வெளியிடவேண்டுமென்று எம்மைத் தூண்டிய அறிஞர்களுக்கும், இதனை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கும் தமிழ்ப் பெருமக்களுக்கும் எமது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக.

காரைக்குடி,
17—2—55

**வீர. சிவராமன்**
செல்வி பதிப்பகம்

# முகவுரை

இன்றுள்ள தமிழருள் பல வகுப்பாரிடம் திருமணத்தின்போது தாலிகட்டும் வழக்கம் இருந்துவருகிறது. இப்பழக்கம் இல்லையெனில், அப்பண்டைகாலத்தில் மணவணியாகக் கருதப்பட்டு வந்தது யாது? எப்பொழுது மங்கலநாண் வந்தது? எப்பொழுது மங்கலநாணில் தாலி இடம் பெற்றது? மலையாளத்திலுள்ள தாலிகட்டுக் கல்யாணம் என்பதன் கருத்து யாது? பத்தொன்பதாம் நூற்றுண்டு முடிய, தமிழர் வகுப்புக்களிலும், ஏனைய திராவிட வகுப்புக்களிலும் தாலிகட்டும் பழக்கம் இருந்து வந்ததா? தாலியென்னும் சொல்லுக்குப் பொருள் யாது? என்பன போன்ற பல கேள்விகட்கு இலக்கியம், இலக்கணம், வழக்காறு, வரலாறு, ஆராய்ச்சியாளர் இதுபற்றிக் கூறும் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு விடையளிப்பதே இவ்வாராய்ச்சி நூலின் நோக்கமாகும்.

(யான் 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் "தென்னிந்திய வரலாறும் தமிழிலக்கியமும்" என்ற பொருள்பற்றி ஆறு சொற்பொழிவுகள் செய்தேன். அப்போது, வளரும் சமுதாயத்தில் காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு என்பதைக் கூறுமிடத்து, "சங்க காலமுதல் கி. பி. 10ஆம் நூற்றுண்டு வரையில் தமிழர் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்றும், பின்னரே மங்கலநாணும், தாலியும் வந்தன என்றும் கருதத்தக்க நிலையில் இலக்கியச் சான்றுகள் உண்டு" என்பதைக் குறிப்பிட்டேன். இச்செய்தி 'தினத்தந்தியில்' வெளி வந்தது.) தமிழரசுக் கட்சித் தலைவரும் என் மதிப்பிற்குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் ம. பொ. சிவஞானகிராமணியார் அவர்கள் யான் கூறிய செய்தி 'உண்மைக்கு மாறுனது' என்று 'தினத்தந்தி' தீபாவளி மலரில் ஒரு கட்டுரை எழுதினர்கள். அவர்களது கட்டுரையை

மறுத்துத் 'தென்றல்' ஆசிரியரும் என் மதிப்பிற்குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் **கண்ணதாசன்** அவர்கள் மறுப்புக் கட்டுரை எழுதினர்கள்.

இந்நிலையில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் தாலிபற்றி யான் பேசியது என்ன என்பதை அறியத் தமிழ் மக்கள் பலர் ஆவலுற்று எனக்குப் பல ஊர்களி லிருந்து கடிதங்கள் எழுதிவந்தனர். அப்பொழுது, எதனிலும் உண்மை காண்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள உயர்திரு. கருமுத்து-தி. சுந்தரஞ்செட்டியார் பி. காம். அவர்கள், இப்பொருள்பற்றித் தொடர்ச்சியாகத் தங்கள் 'தமிழ்நாடு' என்னும் செய்தித்தாளில் எழுதும்படி பணித்தார்கள். அவர்கள் பணித்தபடி இப்பொருள்பற்றி ஒன்பது கட்டுரைகள் 'தமிழ்நாடு' ஞாயிறு மலரில் வெளி யிடப்பட்டன. இவ்விதழின் ஆசிரியராகவுள்ள உயர்திரு **கருமுத்து - தி. மாணிக்கவாசகஞ் செட்டியார் பி. ஏ.** அவர்களும் இத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை மனமு வந்து வரவேற்ருர்கள். இவ்விரு பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி உரியது

இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்து, எனக்கு அடிக்கடி ஊக்கமும் உதவியும் உவப்புடன் அளித்த எங்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் அனை வருக்கும்-சிறப்பாகச் சித்தாந்த கலாநிதி பேராசிரியர் **ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை** அவர்களுக்கும், இந்நூலை உடனிருந்து எழுதுவதிலும் பேருதவிபுரிந்த எங்கள் கல்லூரித் தமிழ்த் துறையைச்சேர்ந்த உயர்திரு. **சி. கனகசபாபதி** பி. ஏ. ஆனர்சு. அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

யான் எக்கட்சியையும் சேர்ந்தவனல்லன்; ஆதலின் எல்லாக் கட்சியினரிடமும் பழகும் வாய்ப்புப் பெற்றவன்; எதிலும் உண்மை காணவேண்டும்-கண்ட உண்மையை உள்ளவாறு உரைக்கவேண்டும் என்பதே எனது குறிக் கோள். இக்குறிக்கோளைத் துணையாகக்கொண்டு, தமிழர் சமுதாய வரலாற்றை மேற்சொல்லப்பட்ட இலக்கியம்

முதலிய சான்றுகளைக் கொண்டு விரிந்த நூலாக எழுத வேண்டும் என்பது எனது விருப்பம். அவ்விருப்பத்தைத் தொடங்குவிக்கும் முறையில் இத்துறையில் எனக்கு ஊக்கமூட்டியவர் அறிஞர் சிவஞான கிராமணியார் ஆவர். அக்கெழுதகை நண்பருக்கு எனது நன்றி உரியதாகுக.

பண்டை இலக்கியங்களில் மங்கல நாணோ, தாலியோ தமிழர் திருமணத்தின்போது கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால், இப்போது கட்டவேண்டா என்று யான் கூறவில்லை; இதுகாறும் கட்டிவந்தது தவறென்றும் சொல்லவில்லை. தாலி பற்றிய வரலாற்றைத் தமிழ் மக்கள் அறியவேண்டும் என்னும் ஆர்வம் ஒன்றே இதனை எழுதத் தூண்டியது. இலக்கியங் கொண்டு காணத்தகும் இத்தகைய பழக்கவழக்கங்களும், சடங்குகளும், பிறவும் எத்தகைய கட்சி நோக்கமும் இன்றி, நடுவுநிலையிலிருந்து ஆராய்ச்சி செய்யப்படுதல் வேண்டும் என்பதே எனது தாழ்மையான கருத்து.

இந்நூலில் கூறப்பட்டுள்ள பல நூல்களின் காலங்கள் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ள "தமிழ் இலக்கிய வரலாற்றில்" கூறப் பெற்றவை. இந்நூலினை வரவேற்றுச் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ள காரைக்குடி செல்வி பதிப்பகத்தாருக்கு எனது நன்றி என்றும் உரியது. இவ்வாராய்ச்சியைப் பாராட்டி நேரிலும் கடித வாயிலாகவும் எனக்கு ஊக்கமளித்த தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கு எனது அகங்கனிந்த நன்றி உரியதாகுக.

தியாகராசர் கல்லூரி
மதுரை

மா. இராசமாணிக்கனார்

## உள்ளுறை


1. சங்க காலம் — I (கி. மு. 300 — கி. பி. 300)

2. சங்க காலம் — II (கி. மு. 300 — கி. பி. 300)

3. இடைக் காலம்— I (கி. பி. 300 — 1600)

4. இடைக் காலம்— II (கி. பி. 300 — 1600)

5. இடைக் காலம்— III (கி. பி. 300 — 1600)

6. இடைக் காலம்— IV (கி. பி. 300 — 1600)

7. மலையாளத்தில் தாலிகட்டுக் கல்யாணம், (கி. பி. 1400 — 1600)

8. கி. பி. 19-ஆம் நூற்றாண்டுச் செய்திகள்

9. தாலி — சொற்பொருளாராய்ச்சி

# தமிழர் திருமணத்தில் தாலி

## 1. சங்க காலம் - I

### முன்னுரை

குறிப்பிட்ட ஒரு பொருளைப்பற்றிய உண்மையை அறிய அவாவுவோர் நூல்களில் அது பேசப்படும் இடங்களைக் கண்டறிந்து, அதன் பொருளுணர்ந்து தெளிதல் வேண்டும். குறிப்பிட்ட அவ்வொன்றைப் பற்றி நூலாசிரியர் கூறுவது யாது, அவர் காலம் யாது என்பன அறிதல் இன்றியமையாதது. நூலுக்கு உரையாசிரியர் என ஒருவர் இருப்பாராயின், அவர் கூறும் உரை யாது, அவரது காலம் யாது என்பவற்றை அடுத்து அறிதல் வேண்டும்.

நூலாசிரியர் காலத்துப் பழக்க வழக்கங்கள் ஒரு வகையினவாக இருக்கும். அவருக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பின்வந்த உரையாசிரியர் காலத்துப் பழக்க வழக்கங்கள் வேருக இருக்கும். வளரும் சமுதாயத்தில் இத்தகைய வேறுபாடுகள் உண்டாதல் இயல்பு. மேலும் உரைகாரர்களுடைய உரையில் அவர் காலப் பழக்க வழக்கங்கள் காணப்படல் இயற்கை. மேலும் உரையாசிரியர்கள் தத்தம் சமயச் சார்பு பற்றியும் உரை கூறுதலும் உண்டு. பரம வைதிகராகிய பரிமேலழகர் திருக்

குறளுக்கு வகுத்த உரையும், பரம சமணராகிய மணக்குடவர் அதே திருக்குறளுக்கு வகுத்த உரையுமே இதற்கு ஏற்ற சான்ருகும். மேலும் இன்று திருக்குறளுக்குவெளிவந்துள்ள பரிமேலழகர் உரை, மணக்குடவர் உரை, பரிதியார் உரை, காலிங்கர் உரை என்னும் நான்கையும் படிக்கும் அறிஞர்க்குச் சில இடங்களில் திருவள்ளுவர் கொண்ட உண்மைக் கருத்துக்கள் இன்னவை என்பன புலனுகவில்லை. இதற்குக் காரணம் ஒவ்வொருவர் உரை ஒவ்வொரு சார்பு பற்றி இருத்தலே ஆகும்.

✓ (எந்தச் சமுதாயத்திலும் பண்டைக்காலம் முதல் ஒரே வகையான பழக்க வழக்கங்கள் நிலைபெற்று வந்திருக்கின்றன என்று அறிஞர் கூருர். எந்த நாட்டுச் சமுதாய வரலாறும் இவ்வுண்மையை நன்குணர்த்தும்.) மலைக்குகைகளில் வாழ்ந்த முதல் மனிதன் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்த அறிந்த பின்னரே, மண்வீடு கட்டிக் கூரைவேய்ந்து வாழத்தொடங்கினன்; மண்ணைக்கொண்டு செங்கல் செய்ய அறிந்த பின்னரே செங்கல்வீடு தொன்றிற்று. இவ்வாறே அவனது வாழ்வில் தோன்றிய ஒவ்வொரு தொழிலும், கலையும், பிறவும் படிப்படியான வளர்ச்சிபெற்றன என்பதை மனிதனது வரலாறு தெளிவுறுத்தும்.

✓ மேலே கூறப்பெற்ற மனிதன் படிப்படியாக அறிவு பெற்ற வரலாற்றையும், நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் உள்ள கால வேறுபாட்டினையும், இவ்விடையீட்டுக் காலத்தில் தோன்றிய சமுதாய வேறுபாட்டினையும் நன்கு உளத்தில் பதித்துக்கொண்ட பின்னரே, ஒருவர் தாம் ஆராயப் புகும் பொருள்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துதல் முறை

யாகும். இங்ஙனம் ஆராய்ச்சி நிகழ்த்துவோர் மற்றொன்றையும் கருத்தில் இருத்துதல் வேண்டும். அஃதாவது, பெரும்பாலும் மூல நூல்கள் கூறும் உண்மைகளைத் துணையாகக்கொண்டு முடிவுக்கு வருதல் என்பது. இங்ஙனமின்றி, முடிவை முன்னரே மனத்தில் நிறுத்திக்கொண்டு, அதற்கேற்ப மூலங்களுக்கு உரை கூறுதலோ, உரையாசிரியர் துணையை நாடுதலோ, அல்லது 'இதுதான் பொருள்; வேறில்லை' என்று அழிவழக்குப் பேசுதலோ சான்றோர் மதிக்கும் சாத்திரிய ஆராய்ச்சி (Scientific Research) ஆகாது.

✓இம் முகவுரையை உளத்திற்கொண்டு, இன்று உள்ள தமிழர் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருத்தல் போலச் சங்க காலத்திலும், பிற்பட்ட நூற்றாண்டுகளிலும் (ஏறத்தாழக் கி பி. 10-ஆம் நூற்றாண்டுவரை) நடைபெற்ற தமிழர் திருமணங்களில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததா என்பதனை இங்கு ஆராய்வோம்.

### சங்க நூல்கள்

சங்க காலம் என்பது ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 3-ஆம் நூற்றாண்டுவரை என்று கூறலாம். இப்பரந்துபட்ட காலத்தில் பல நூறு புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர்; அரசர்களையும், வள்ளல்களையும் பாடினர்; அகம், புறம் பற்றிய பாடல்களைச் செய்தனர். இக்காலத்தில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், திருக்குறளும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் செய்யப்பட்டன. இப்பரந்துபட்ட சங்க காலத்திலேயே தொகைநூற் பாடல்களில் காணப்படும் திருமணச் செய்திகள்

சிலவாகவும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் செய்திகள் பலவாகவும் இருத்தலைக் காணலாம்.

## அகநானூறும் திருமணமும்

அகநானூற்றில் 86-ஆம் செய்யுளும் 136-ஆம் செய்யுளும் இரண்டு திருமணங்களைக் கூறுவனவாம். அவற்றுள் 86-ஆம் பாடல் பின்வரும் செய்திகளைத் தெரிவிக்கின்றது :

(1) மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றது ; (2) மணப்பந்தலின்கீழ் மணல் பரப்பப்பெற்று விளக்கு வைக்கப்பட்டது ; (3) இளங் காலைப் போதில், திங்கள் உரோகிணியுடன் கூடிய நல்லோரையில், முதுபெண்டிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்திவந்தனர் ; (4) அந்நீர்க்குடங்களில் மலரும் நெல்லும் தூவிப் பிள்ளைபெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளை, " கற்புநெறியினின்றும் வழுவாமல் பல நலங்களைச் செய்து கணவன் விருப்பத்தக்க மனைவி ஆகுக," என்று வாழ்த்தி மணநீராட்டினர். இவற்றுடன் " வதுவை நன்மணம் களிந்தது. "

செய்யுள்-136 கீழ்வரும் விவரங்களைத் தருகின்றது ; (1) இறைச்சி கலந்து ஆக்கப்பட்ட வெண் சோற்று விருந்து நடைபெற்றது ; (2) திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில், மணமனை அலங்கரிக்கப்பட்டு இறைவழிபாடு நடைபெற்றது ; (3) மணமுழவும் முரசமும் முழங்கின ; (4) தலைவிக்கு மணநீராட்டு நடைபெற்றது ; (5) வாகையிலை அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பெற்ற வெண்ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது ; (6) தமர் தலைவிக்குத் தூய உடை

களை அணிவித்தனர்; (7) தமர் தலைவிக்குப் பல அணிகளை அணிவித்து, அங்ஙனம் அணிவித்ததால் உண்டான வியர்வையை ஆற்றினர். இவ்வளவே மணச்செய்திகளாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்விரண்டு திருமணச் சடங்குகளிலும் மணமக்கட்கு மணநீராட்டுதலே சிறப்புச்சடங்காக இருத்தல் காணத்தக்கது. பலர் அறிய விருந்து நடத்தி, மணமகளுக்கு நீராட்டிப் புத்தாடை உடுத்து அணிகலன்கள் அணிவித்து, மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் உட்காரவைத்துப் பலர் அறியச் செய்தலே திருமணவினையாக அக் காலத்தில் இருந்தது என்பது இவற்றால் அறியலாகும். "இவற்றுள், (1) எரிவளர்த்தல் இல்லை; (2) தீவலம் வருதல் இல்லை; (3) தட்சிணை பெறப் புரோகிதர் இல்லை. **இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமணங்களாகும்,**" என்று காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியரான திரு. *பி. டி. சீநிவாச ஐயங்கார்* அவர்கள் தாம் வரைந்த "தமிழர் வரலாறு" (பக். 80) என்னும் ஆங்கில ஆராய்ச்சி நூலில் கூறி யிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது. இவ்விரு திருமணங்களிலும், தாலி கட்டுதல் சிறப்புடைச் சடங்காகச் சங்க காலத்தில் இருந்திருக்குமாயின், இவ்விரு பாக்களில் ஒன்றிலேனும் — நீராட்டு, விருந்து முதலியவற்றைக் கூறும் புலவர் —தாலிகட்டும் சடங்கினைக் குறியாதிருத்தல் கூடுமா என்பதை அறிஞர் எண்ணித் தெளிவாராக.

**கண்ணகி திருமணம்**

கண்ணகி திருமணம் பற்றிக் கூறும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப்பாடலில் கீழ்வரும் திருமணச்

செய்திகள் இடம்பெற்றுள்ளன: (1) திருமணப் பந்தலில் (சந்திரனும் உரோகிணியும் கூடிய நல் லோரையில்) மாமுதுபார்ப்பான் மறைவழி காட் டிடக் கோவலன் கண்ணகியுடன் தீவலஞ் செய் தான்; (2) பெண்டிர் பலர் வாசனைப் பொருள்களை ஏந்தி நின்றனர்; சிலர் மலர்களை ஏந்தி நின்றனர்; சிலர் உரையால் வாழ்த்தினர்; சிலர் பாட்டால் வாழ்த்தினர்; சிலர் பலவகைச் சாந்துகளை ஏந்தி நின்றனர்; வேறு சிலர் நறும்புகைப் பொருள் களைத் தாங்கி நின்றனர்; மற்றுஞ் சிலர் மாலைகளை ஏந்தி நின்றனர்; சிலர் பலவகைச் சுண்ணங்களை ஏந்தி நின்றனர்; சிலர் விளக்குகளையும், வேறு சிலர் கலங்களையும், மற்றுஞ்சிலர் முளைப்பாலிகை யையும் ஏந்தி நின்றனர். (3) கொடிபோன்ற மகளிர், "இக்கண்ணகி தன் தலைவனைப் பிரியா தவள் ஆகுக: இவள் காதலனும் இவளைத் தழுவிய கை நெகிழாமல் சேர்ந்திருப்பானாக; இருவர் அன்பும் தீதற்று விளங்குக," என்று தம் வழிபடு கடவுளை வணங்கினர்; சிலர் மலர்களைத் தூவினர்.

இத் திருமணத்தில், அகநானூற்றுத் திரு மணங்களில் குறிக்கப்படாத மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டலும், தீவலம் வருதலும், பாலிகை முதலியன மகளிர் ஏந்தி நிற்றலும் புதியனவாக வந்திருத்தல் காண்க. இவற்றுள் சிறப்பாகக் குறிக் கத்தகுந்தது, கோவலன் கண்ணகியின் கையைப் பற்றி (பாணிக்கிரகணம்) தீவலம் வருதல். இவ் வாறு கோவலன் கண்ணகியின் கையைப்பற்றி யிருந்தமையே சிறப்புடையது என்பது "கவ வுக்கை ஞெகிழாமல்" என்னும் மங்கல மகளிர் வாழ்த்தால் வலியுறும். இத் திருமணத்தில்

கோவலன் கண்ணகியின் கையைப் பற்றியவண்ணம் 'தீவலம் செய்தவதைக் கண்டவர் நோன்பு செய்தாராயினர்' என்று இளங்கோவடிகள் கூறுதலால், பாணிக்கிரகணமே கண்ணகியின் திருமணத்தில் சிறப்புடைச் சடங்காக இருந்தமை தெளியலாம்.

## இத்திருமணத்தில் தாலிக்கு இடமுண்டா?

மேலே சொல்லப்பட்ட கண்ணகியின் திருமணச் சடங்குகளுக்கு முன்பு "அகலுள் மங்கல அணி எழுந்தது" என்று ஒரு வரி இளங்கோ அடிகள் பாடியுள்ளார். இதனில் வரும் 'மங்கல அணி' என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், 'மாங்கலிய சூத்திரம்' என்று பொருள் கூறியுள்ளார். ஆனால் சிலப்பதிகாரத்திற்கு விளக்கமான உரை எழுதப்புகுந்த அடியார்க்கு நல்லார், 'மங்கல அணி-மங்கல அணி' என்றே பொருள் கூறினர். 'அரும்பத உரையாசிரியர் கருத்துப்படி மாங்கலிய சூத்திரம் இருந்திருக்குமாயின், அது திருமணச் சடங்கில் கூறப்படாமைக்குக் காரணம் யாது?' என்ற கேள்வி எழுமன்றோ?

மனையறம்படுத்த காதையில் கண்ணகியின் நலத்தைப் பாராட்டத் தொடங்கிய கோவலன்,

"மறுவின் மங்கல அணியே அன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை எவன்கொல்"

என்று கண்ணகியை நோக்கிக் கேட்பதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். இதில் வரும் 'மங்கல அணி' என்பதற்கு அதே அரும்பத உரையாசிரியர் '*இயற்கை அழகு*' என்று பொருள் கூறியுள்ளார். இவ்வடிகளின் பொருள், 'குற்றமற்ற நினது

புனையாத அழகன்றியும் வேறு சில அணிகளை அணிந்ததினுல் பெற்ற உதவி யாது ' என்று அடியார்க்குநல்லார் கூறியுள்ளார். இங்ஙனம் அவர், 'மங்கல அணி-புனையாத அழகு' என்று கூறி, மேலும், 'மங்கல அணி - மாங்கலியம் என்பாரும் உள்ர்' என்று கூறிமுடித்தார். எனவே, 'மங்கல அணி—மாங்கலிய சூத்திரமன்று' என்பது அடியார்கது நல்லார் கருத்தாதல் தெளியலாம். அரும்பத உரையாசிரியாரும் இவ்விடத்தில் 'இயற்கை அழகு' என்றே கொண்டார்.

இனி அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில், கோவலன் பிரிவால் வருந்திய கண்ணகி,

"மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்" (வரி 50)

என்று இளங்கோவடிகள் குறித்துள்ளார். இங்கும் அதே அரும்பத உரையாசிரியர், 'மங்கல அணி-இயற்கை அழகு' என்றே பொருள் கூறினர். அடியார்க்கு நல்லார், 'மங்கல அணியிற் பிறிதணி-மங்கல அணியின் வேருன அணி' என்று பொருள் கூறியுள்ளார். கணவன் பிரிவால் வாடிய கண்ணகி எவ்வித நகையும் இல்லாமல் இயற்கை அழகோடு இருந்தாள் என்பதே இவ்வரியின் பொருள் என்பது தெரிகிறது. இம் மூன்றிடங்களில் முதலிடத்தைத் தவிர, ஏனைய இரண்டிடங்களில் 'மங்கல அணிக்கு '-' இயற்கை அழகு' என்று பொருள் கூறியதே பொருந்தும். முதலிடத்தில் 'ஊரில் மாங்கலிய சூத்திரம் வலஞ் செய்தது' என்று இவர் கூற, அடியார்க்கு நல்லார், 'மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது' என்று கூறியுள்ளார். திருமணத்திற்கு முன் மாங்கலிய சூத்திரம் ஊரில் வலம்

வருதல் என்பது இலக்கியம் காணுத ஒன்று. இளங்கோக்களாகிய பெருங்குடி வணிகர் திருமணம் ஆதலின், முரசம் முதலிய பல வாத்தியங்கள் ஒலித்தலால் திருமணச் சிறப்பு எழுந்தது எனப் பொருள் கொள்ளலாம். இன்னும் திருமணம் நடப்பதற்குச் சற்றுமுன் மணமக்களைச் சேர்ந்த நெருங்கிய உறவினர் தம் உற்றூர் உறவினர் வீடுகட்குச் சென்று மணநேரத்தை நினைவூட்டி மணத்திற்கு வருமாறு அழைத்தல் மரபாக இருக்கின்றது. இங்ஙனம் உறவினர் செய்தலை "வீடு சொல்லுதல்" என்னும் தொடரால் இன்றளவும் தமிழ் மக்கள் வழங்கி வருகின்றனர். இம்மங்கலச் செய்தியைக் கூறுவோர் ஒருவர் பின் ஒருவராக முறையாக (அணியாக)ச் சென்று மீள்தலை, "அகலுள் மங்கல அணி எழுந்தது" என்ற அழகிய தொடரால் இளங்கோவடிகள் குறித்தனர் என்று கூறல் மிகவும் பொருந்தும். இந்நிகழ்ச்சிக்கு முன்னரே பொதுப்பட ஊரார் அனைவருக்கும் யானைமீது சென்று மகளிர் கண்ணகியின் திருமணத்தை அறிவித்தனர் என்பதும் இங்கு அறியத்தகும்.

## தொடி களைதலும் உடைத்தலும்

இனி, கணவன் மதுரையில் கொலையுண்ட பின்பு மதுரையை எரித்த கண்ணகி துர்க்கையின் கோயில் வாசலில் "*பொற்றொடி தகர்த்தாள்,*" 'கிழக்கு வாசல் வழியாகக் கணவனோடு வந்தேன்; இப்பொழுது மேற்குவாசல் வழியே (கணவனை இழந்து) தனியே செல்கின்றேன்,' என்று கூறி, வையைக்கரை வழியே சென்றாள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

கண்ணகி, கணவன் இறந்த பிறகு தன் கைவளையல்களை உடைத்தாள் என்பது கவனிக்கத் தக்கது. அது வாழ்வரசியின் (சுமங்கலி) அறி குறியா? இதற்குரிய விடையைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தருகின்றது: ('வெளிமான் என்ற வள்ளல் இறந்தனன்; அவன் உரிமை மகளிர் தொடி கழிக்கப்பட்டார்.''

'' தொடிகழி மகளிர் '' (புறம். 238)

என வரும் இடம் நோக்கத்தக்கது. இவ்விரண்டா லும் கணவனை இழந்த மகளிர் தமது கைம்மை நிலைக்கு அறிகுறியாகத் தொடியை (வளையலை)க் களைதல் மரபு என்பது தெரிகின்றதன்றோ?

கண்ணகி, கணவனை இழந்த பின்பும், வெளிமான் மனைவியர் தம் கணவனை இழந்த பின்பும் 'தொடி களைந்தனர்' என்பது நினைவில் இருத்தத் தக்கது. அகநானூறு 208-ஆம் செய்யுளில் வெளியன் வேண்மான் பகைவரோடு போரிட்டு மாண்டான்; அவன் உரிமை மகளிர் தாம் அணிந் திருந்த மலர்மாலையைப் பிய்த்தெறிந்து அழுகை ஆரவாரம் செய்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. மலர் அணிதல் வாழ்வரசியர்க்குச் சிறந்த அடை யாளம் என்பதும் அதனை நீக்குவோர் அமங்கலி களே என்பதும் நாடறிந்த செய்தியாகும். இங் ஙனமே கணவனை இழந்த மகளிர் (பிற்காலத்தில் நுழைந்த தாலியைக் களைதலோடு) வளையல்களைக் கழற்றி உடைத்தல் தமிழ்ச் சமுதாயத்தில் பல வகுப்பினரிடம் காணலாம். கழற்றி வறிதே எறிந்து விட்டால், அறியாச் சிறு பிள்ளைகள் அவற்றை எடுத்து அணிதல்கூடும்; அங்ஙனம் அணிதல்

அமங்கலம் எனக் கருதி அவற்றை அம்மகளிர் தகர்க்கின்றனர் என்பது இங்கு அறியத்தகும்.

## இழை களைதல்

புறநானூறு 127-ஆம் பாடலில் ஆய்வள்ளல் தான் கொடுக்கத்தகுந்த எல்லாப் பொருள்களையும் பரிசிலர்க்குக் கொடுத்துப் பின் தன் மனைவியர் பாலுள்ள கொடைக்குரிய பொருள்களை எல்லாம் கொடுத்து வறியவன் ஆனான்; இந்நிலையில் அவன் மனைவியரிடம் "ஈகை அரிய இழை மட்டும் எஞ்சி நின்றது" என்பது காணப்படுகிறது. இச்செய்யுள் வரிக்கு 'கொடுத்தற்கரிய நகை' என்பது நேரான பொருள். ஆனால், புறநானூற்று உரையாசிரியர், 'கொடுத்தற்கரிய மாங்கலிய சூத்திரம்' என்று பொருள் கூறினார், 'இழை' என்னும் சொல்லுக்கு 'மாங்கலிய சூத்திரம்' என்னும் பொருள் கூறிய இவ்வுரையாசியரே, மற்றொரு பாடலில் இது போன்ற இடத்திலேயே அங்ஙனம் கூறாமை நோக்கத்தக்கது. புறநானூறு 224-ஆம் பாடலில், சோழன் கரிகாலன்,

> "இறந்தோன் தானே அளித்திவ் வுலகம்
> .........................................
> மெல்லியல் மகளிரும் இழைகளைந் தனரே."
>
> (புறம்-224)

இங்கு, "கரிகாலன் இறந்தான்; அதனால் அவன் மகளிர் 'இழை களைந்தனர்' என்பது நேரான பொருள். இங்கு வந்துள்ள 'இழை' என்பதற்கு அருங்கல அணி முதலவாகிய அணிகள்" என்று அதே உரையாசிரியர் பொருள் தந்துள்ளார். புறம்,

127-ஆம் பாடலில், 'இழை-மாங்கலிய சூத்திரம்' என்று பொருள் கூறிய உரையாசிரியர், புறம்-224-இல் 'இழை-அருங்கல அணி முதலவாகிய அணிகள்' என்று கூறியது ஏன்? இங்ஙனம் உரையாசிரியர்களின் தடுமாற்ற உரைகளைக் கண்டு, ஆராய்ச்சியாளர் ஊக்கங்கொண்டு உண்மை காண்பதே உறுபயன் விளைப்பதாகும்.

**'அருங்கலம்' யாது?**

'*கலம்*' என்பது நகையென்னும் பொருளையும் உடையது. 'நன் கலம்' என்பது சாதாரண நகையைவிட ஓரளவு உயர்ந்த மதிப்புடையது.

"*நன் கலம்* பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கி" (புறம்—6) என வருவது காண்க, '*அருங்கலம்*' என்பது 'அரிய நகை' (Precious Ornament) எனப் பொருள்படும். அதுவே இல்லக்கிழத்தியை அழகு செய்யும் பொருளாம். 'அருங்கலம்' என்பதற்கு 'அழகு செய்வது' என்னும் பொருளுண்மையை,

"பூவினுக்கு **அருங்கலம்** பொங்கு தாமரை"

என்னும் அப்பரது வாக்கால் அறியலாம். பல கலன்களை அணிந்த தலைவி ஒருத்திக்குக் கணவன் திருமணக் காலத்தில் தங்கள் திருமணத்தின் அடையாளமாக வழங்கும் விலையுயர்ந்த நகையே 'அருங்கலம்' என்னலாம். அதுவே அவளை வாழ்வரசியாக வைத்திருக்கும் அருங்கலமாகும். அதனை எத்தகைய துன்ப நிலையிலும் அவள் கழற்றுதல் செய்யாள். அது பிறர்க்கு ஈயமுடியாத அருங்கலம். அதனாற்றான் அது 'ஈகையரிய இழை' எனப்பட்

டது. கணவன் வாழும்வரை அவள் உடம்பிலேயே இருந்து, கணவன் இறந்த பிறகு கழற்றப்படுவது அப்பேரணி. அதனுற்ருன் கரிகாலனை இழந்த மனைவியர் 'இழை களைந்தனர்' என்பது கூறப் பட்டது. கண்ணகி கழற்றிய தொடியையும், வெளி மான் மனைவியர் கழற்றிய தொடியையும், கரிகாலன் மனைவியர் கழற்றிய இழையையும், ஆய்வேள் மனை வியர் அணிந்திருந்த ஈகையரியவாகிய இழையை யும் 'அருங்கலம்' என்னும் பொதுப் பெயரால் குறிக்கலாம். இங்ஙனம் மணமகன் அருங்கலம் கொடுத்து மணம் புரிதல் இறையனுர் அகப்பொருள் உரையில் "தலைமகன் பார்ப்பார் சான்ருேரை முன்னிட்டு அருங்கலங்களோடு வரைதற்குப் புகு வன்" என்று குறிக்கப்பட்டுள்ளது. அவ்வுரையில் மேற்கோளாக வரும் பாண்டிக் கோவையில் 'அருங் கலம் அணிதல்' என்பதற்குப் பதிலாகப் 'பொன் அணிதல்' என்பது ஆளப்பட்டுள்ளது. நம்பி யகப்பொருளுக்கு இலக்கியமாக இலங்கும் தஞ்சை வாணன் கோவைச் செய்யுளிலும் 'பொன் புனை தல்' என்பது ஆளப்பட்டுள்ளது. (செய்யுள் 359)

இங்ஙனம் மணமகன், அந்தணர் சான்ருேர் முன்னிட்டு அருங்கலம் தந்து மணத்தல், நம்பியகப் பொருள் விளக்கத்திலும் தெளிவாகச் சுட்டப்பட் டுள்ளது.

"தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோன்
அந்தணர் சான்ருேர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைதல் தகுதி யென்ப" (நம்பி - 198)

இந்நம்பியகப்பொருள் ஏறத்தாழக் கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் இறுதியில் செய்யப்பட்டது

என்பது அறிஞர் கருத்து. இதனில் அருங்கலம் கொடுத்து மணம் முடித்தல் என்னும் வழக்கம் சூத்திர வாயிலாக வெளிப்படுதலும், இதற்கு முற்பட்ட இறையனுரைகப்பொருள் உரை வகையால் வெளிப்படுதலும் காண, இவ்வழக்கையும், 'அருங்கலம்' என்னும் தொடரையும் நினைவிற்கொண்டவராய்க் கி. பி. 11-ஆம் நூற்ருண்டிற்குப் பின் தோன்றிய உரையாசிரியருள் ஒருவரான இப்புறநானூற்று உரையாசிரியர், கரிகாலன் மனைவியர் இழை களைந்தனர் என்னும் இடத்தில், 'அருங்கல அணி முதலவாகிய அணிகளை ஒழித்தார்,' எனப் பொருள் எழுதினுர் என்று கொள்ளுதலே பொருத்தமுடையது.

இவ்வுரையாசிரியர் இப்பன்னூல்களுக்குப் பிற்பட்டவராதலின், தாம் பயின்ற இவற்றின் அறிவைக்கொண்டு சங்கச் செய்யுள்களுக்கு மேற்காட்டியவாறு உரை கூறினர் என்று கோடலே இங்குப் பொருத்தமுடையது.

## சங்க நூல்களும் தாலியும்

இதுகாறும் கூறப்பெற்ற அருங்கலமாகிய இழை அல்லது தொடி திருமணத்தின்போது கட்டப்படும் தாலி அன்று என்பது விளக்கப்பட்டது. கணவனை இழந்த மனைவி அல்லது மனைவியர் 'இழை களைந்தனர்,' 'தொடி களைந்தனர்,' 'தொடி தகர்த்தாள்' என்று பண்டை இலக்கியங்களில் தொடர்கள் வந்துள்ளனவே தவிரத் 'தாலி களைந்தனர்' என்று யாண்டும் கூறப்படவில்லை. ஆனல்

அச்சங்க நூல்களில் பல இடங்களில் 'தாலி' என்னும் சொல் சுட்டப்படாமலில்லை.

(1) "தாலி களைந்தன்றும் இலனே" (புறம்-77). பாண்டியன் நெடுஞ்செழியன் சேர சோழரையும் அவர்கட்குத் துணையாகவந்த ஐம்பெருவேளிரையும் தனியனாய் நின்று வென்று மீண்டபொழுது, இடைக்குன்றூர்க்கிழார் என்ற புலவர் அவன் இளமையுடையவன் என்பதைக் குறிக்க இங்ஙனம் கூறினார். அவர் கூறிய தாலி, கண்ணேறு முதலியன (திருஷ்டி தோஷாதிகள்) தாக்காதிருக்கும் பொருட்டுக் குழந்தைகட்குத் திருமாலின் ஐந்து படைகளின் வடிவமாகச் செய்யப்பட்டு அணிவிக்கப்படுவது ; ஆதலின் ***ஐம்படைத்தாலி*** எனப் பெயர் பெறும். "பொன்னுடைத்தாலி என் மகன்" (அகம்–54) என வருதலும் காண்க.

(2) "புலிப்பல் தாலிப் புன்றலைச் சிறார்" (புறம்-374)

இது, வீரன் தான் கொன்ற புலியின் பற்களைத் துளைத்து மாலையாகச் செய்து தன் மக்களுக்கு அணிவிப்பது. வீரரல்லாத பிறரும் தங்கம், வெள்ளி இவற்றால் புலிப்பற்கள் செய்து கோத்து அணியும் நகையாகும்.

இப்புலிப்பல் தாலி ஆண்பிள்ளைகளே அன்றிப் பெண் பிள்ளைகளும் இளமை முதல் அணிவது மரபு. பருவமடைந்து களவொழுக்கத்தை மேற்கொண்டு தலைவனோடு உடன்போக்கு நிகழ்த்திய தலைவி, இப்புலிப்பல்தாலியை அணிந்திருந்ததை அவளது செவிலித்தாய் குறிக்கும் செய்யுள் ஒன்று அகநானூற்றில் வந்துள்ளது.

"........................... பொன்னொடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
.................................................
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே".
(அகம் - 7)

(3) "வரிவெண் தாலி வலை செத்து வெரூம்"
(ஐங்குறுநூறு - 166)

என வரும் இடத்தில் 'தாலி' என்பது பலகறையை (சோழியை)க் குறிக்கின்றது. இவற்றால், 'தாலி' என்னும் சொல் சங்ககால வழக்கில் இருந்ததேனும், அச்சொல் அக்காலத் தமிழர் சமுதாயத்தில் மணமகன் ஒருவன் தான் மனைவியாக ஏற்கும் ஒருத்திக்குத் திருமணத்தின்போது கழுத்தில் கட்டும் தாலியைக் குறியாதது ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

# 2 சங்க காலம்-II

## தொல்காப்பியம்-கற்பியல்

'வளரும் சமுதாயத்தில் காலத்திற்கேற்பவேறு பாடுகள் உண்டாதல் இயல்பு' என்பது முன்பே கூறப்பட்டது. இவ்வுண்மையை முன்னர்க் கூறப் பெற்ற அகநானூற்று 86–ஆம் பாடலும், 136-ஆம் பாடலுமே நன்கு உணர்த்துகின்றன. அகம் 86-ஆம் பாடலில், திருமணத்தின்போது நிகழ்ந்தன வாகக் கூறப்படும் சடங்குகளை (கரணங்களை) விட, அகம். 136–ஆம் பாடலில் கூறப்பட்டுள்ள சடங்கு கள் பலவாகக் காண்கின்றன. இவ்வேறுபாடு கால வளர்ச்சியால் உண்டானது. இதனை ஊன்றிக் கவனித்த நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் – பொருளதிகாரம் – கற்பியலில் வரும்,

" கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

என்னும் கற்பியல் முதற்சூத்திரத்திற்கு அகம். 86–ஆம் பாடலை எடுத்துக்காட்டி, அதன்கீழ், 'இத னுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்த வாறும், தமர் கொடுத்தவாறும் காண்க,' என்று கூறியுள்ளார். இதனால் *வதுவைக்கு ஏற்ற கரணங் கள்* இவை என்பது தெரிகின்றது. இந்நச்சினார்க் கினியரே கற்பியலில் வரும்,

(4) "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப,"

என்னும் நான்காம் சூத்திரத்திற்கு அகம் 136-ஆம் செய்யுளை மேற்கோளாகக் காட்டி, 'தொல்காப்பியர் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறு கூறினர், களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கென்று உணர்க,' என்று குறித்துள்ளார். இவற்ருல், ஐயர் (சான்ருேர்) கரணம் யாத்தற்கு முன்னர், அகம். 86-ஆம் செய்யுளில் கண்ட திருமணச் சடங்குகள் தமிழகத்தில் நடைபெற்றுவந்தன என்பதும், ஐயர் கரணம் யாத்த பின்னரே, அகம். 136-ஆம் செய்யுளில் கண்ட புதிய சடங்குகள் போன்றவை தோன்றின என்பதும் நச்சிஞர்க் கினியர் கருத்தால் தெளியலாம். தெளியவே, வளரும் சமுதாயத்தில் புதியன புகுதலாக நாளடைவில் பல சடங்குகள் புகுதல் இயல்பு என்ற பொது உண்மையை நச்சிஞர்க்கினியரும் நன்கு உணர்ந்திருந்தார் என்பது அறியப்படும்.

இங்ஙனம் ஐயர் கரணம் விதிப்பதற்கு முன்னர் நடந்தனவாகக் கூறப்படும் திருமணச் சடங்குகளில் (அகம் 86-இல்) தாலிபற்றிய பேச்சு வரவில்லை. ஐயர் கரணம் விதித்த பின்னர் நடந்தனவாகக் கூறப்படும் திருமணச்சடங்குகளிலும் (அகம். 136-இல்) தாலிகட்டும் சடங்கு (கரணம்) குறிக்கப் படாமை கூர்ந்து கவனித்தற்குரியது.

'ஐயர்' என்ற சொல்லுக்கு 'இருடிகள்' (ரிஷிகள்) என்று நச்சிஞர்க்கினியர் பொருள் கூறி யுள்ளார். உச்சிமேற் புலவர்கொள் நச்சிஞர்க்

கினியர் வடமொழியிலும் தென்மொழியிலும் திப்பிய புலமை சான்றவர்; இருடிகள் வடமொழி வல்லுநர். வடமொழியில் எழுதப்பெற்ற வேதங்களிலும், வான்மீகி இராமாயணத்திலும், வியாச பாரதத்திலும் '**கைப்பிடித்தல்**' (பாணிக்கிரகணம்) ஒன்றே திருமணத்தில் நடைபெறும் சிறப்புச் சடங்காகக் கூறப்பட்டதேயன்றித் தாலிகட்டுதல் குறிக்கப்படவில்லை என்பதை நச்சினார்க்கினியரும் நன்கு அறிவர்.

## புறநானூற்றில் 'கழிகலம்

ஆவூர் மூலங்கிழார் தம்மை ஆதரித்த வள்ளல் இறந்த பின், அவன் மனைவி தலையை மொட்டையடித்துக் கைம்மைக் கோலத்தில் கலக்கமுற்று **அணிகலத்தை ஒழித்தாள்** என்று பாடியுள்ளார்.

"கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉ". (புறம். 261)

இங்குக் "கழிகலம்" என்பதற்கு, முன்பு 'ஈகையரிய இழை' - 'மாங்கலிய சூத்திரம்' என்று உரையெழுதிய அதே புறநானூற்று உரையாசிரியர், '**ஒழிக்கப்பட்ட அணிகலம்**' என்று உரை கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது. இவ்வுரையாசிரியர் புறம், 127-ஆம் செய்யுளில் 'இழை - மாங்கலிய சூத்திரம்' என்றும், புறம். 224-ஆம் பாடலில் 'இழை - அருங்கல அணி முதலவாகிய அணிகள்' என்றும், கணவனை இழந்த கைம்மை நிலையைக் குறிக்கும் புறம். 261-ஆம் பரடலில் 'கழிகலம் - ஒழிக்கப்பட்ட அணிகலம்' என்றும் மூன்று இடங்களில் மூன்று விதமாகப் பொருள் கூறியிருத்தல் கண்டு தெளிக. கணவனை இழந்த மனைவி தலையை மழித்தல் என்

பது சங்க காலச் சமுதாயத்தில் சிலரிடமேனும் இருந்ததுபோலும்! இப்புறநானூற்று உரையாசிரியரும் பிற ஆசிரியர்களும் ஏறத்தாழக் கி. பி. 12-ஆம் நூற்ருண்டு முதல் 14-ஆம் நூற்ருண்டு வரை வாழ்ந்தவராவர். இவர்கள் காலத்தில் 'மங்கல நாண்' திருமணத்தில் கட்டப்படும் வழக்கம் வந்து விட்டது என்பதைக் கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் இறுதியில் எழுதப்பெற்றதாகக் கருதப்படும் கந்த புராணத்திலும், கி. பி. 12-ஆம் நூற்ருண்டில் செய்யப்பட்ட பெரிய புராணத்திலும் கம்பராமாயணத்திலும் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கண்டு எளிதில் உணரலாம். (இது அடுத்த கட்டுரையில் நன்கு விளக்கப்படும்.) இங்ஙனம் தமது காலத்தில் தோன்றிய 'மங்கல நாண்' பூட்டும் வழக்கினை உளங்கொண்டு, தாம் உரை கூறப்புகுந்த நூல்கள் தமக்குப் பல நூற்ருண்டுகட்கு முந்தியவை என்னும் பேருண்மையை ஒரோவழி மறந்து, இவ்வாறு தடுமாற்ற உரை வரைவாராயினர்.

## நெடுநல்வாடையில்

நெடுநல்வாடை என்பது மதுரைக் கணக்காயஞர் மகஞர் நக்கீரஞர் பாடினது. பாண்டியன் நெடுஞ்செழியன் போர்க் காரணமாகப் பிரிந்திருந்த போது அவனது கோப்பெருந்தேவி அநுபவித்த துன்பநிலையை விளக்கிக் கூறுகிறது இப்பாடல். கணவன் வாராமையால் கலக்கமுற்ற அக்காரிகை, தன் கட்டில்மீது மல்லாந்து படுத்துக்கிடந்தாள் என்று கூறிய நக்கீரர், அடுத்து,

> "ஆரந் தாங்கிய அலர்முலை யாகத்துப்
> பின்னமை நெடுவீழ் தாழத்," (136 - 137)

துணை துறந்து வருந்தினுள் என்று குறித்தார். இதற்கு உரை கூறப்புகுந்த நச்சினார்க்கினியர், ‘பின்னமை நெடுவீழ் - குத்துதல் அமைந்த நெடிய **தாலி**’ என்று பொருள் கூறியுள்ளார்; இங்ஙனம் கூறி, ‘பின்னுதல் அமைந்த **மயிர் என்பாருமுளர்**,’ என்று கூறி முடித்தார். இக்கூற்றிலிருந்து, நச்சினார்க்கினியர் காலத்திலேயே ‘வீழ்’ என்பது ‘தாலி’ யைக் குறியாது என்று கருதிய அறிஞரும் இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது அன்றோ? முதுகின்மேல் (பின்புறம்) இருக்கத் தக்க பின்னுதல் அமைந்த நீண்ட சடை, தலைவன் இல்லாமையால் மார்பின்மீது (முன்பிறம்) தாழ்ந்து கிடைந்தது. அஃதாவது, கணவன் பிரிவால் கலங்கிய காரிகை, அச்சடை இருக்கவேண்டிய இடத்தில் இல்லையே என்று கவலைப்படவில்லை. முத்தாரம் கிடந்த மார்பில் அச்சடை கிடந்தது என்பதே இங்கு உரிய பொருள். இதற்கு இதுவே பொருள் என்பதை,

> “ உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
> பிடிக்கை யன்ன *பின்னுவீழ் சிறுபுறத்து*.”
> (190 - 191)

என்னும் சிறுபாணாற்றுப்படை அடிகளைக் கொண்டு உறுதிசெய்யலாம். இவ்வரிகளில் ‘பின்னுவீழ் சிறுபுறம்’ என்னும் தொடர் வந்திருத்தல் காண்க. இது ‘பின்னுதல் அமைந்த மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகு’ எனப் பொருள் படும். இப்பின்னப்பட்ட மயிர் (சடை) ‘பிடிக்கை அன்னது,’ (பெண்யானையினது துதிக்கை போன்ற உருவ அமைப்பை உடையது) என்று புலவரே உவமை வாயிலாகச் சிறப்பித்திருத்தல் கவனிக்கத் தக்கது.

எனவே, நெடுநல் வாடையில் வந்துள்ள பின்னு தல் அமைந்த நெடிய வீழ்-நீண்ட சடையையே குறிப்பது என்பது தெளியலாம். 'நெடுவீழ்-நெடிய தாலி' என நச்சினர்க்கினியர் பொருள் கூறியிருத் தல் பொருட்பொருத்த மற்றதும் சிறப்பற்றதும் ஆகும் என்பது ஆராய்ந்து தெளியற்பாலது. மேலும், 'வீழ்' என்னும் சொல் 'தாலி' என்னும் பொருளில் சங்கப் பாக்களில் வழங்கப்படாமை இங்கு உணரத்தகும்.

இங்ஙனமின்றி, நச்சினர்க்கினியர் கூறிய வாறே 'வீழ்' என்பது 'தாலி' எனக் கொள்ளினும். அஃது அக்கோப்பெருந் தேவியின் திருமணத்தின் போது பாண்டியன் கட்டினன் என்பதற்குச் சான்று யாது? களவு மணவாழ்க்கையில் நங்கை யரும் 'தாலி அணிந்திருந்ததாக அகநானூற்று 7-ஆம் செய்யுள் கூறுகிறதன்றே? கூறவே, அப்பெருமாட்டி இளமை முதலே அத்தாலியை அணிந்திருக்கலாம் அன்றே? எனவே, இவ்வரிக்கு நச்சினர்க்கினியர் கூறும் உரையை மட்டும் கொண்டு, சங்ககாலத் திருமணங்களில் தாலி கட்டப் பட்டது என்று கூறுதல் பொருத்தமுடையதன்று.

## சிலப்பதிகாரத்தில்

சிலப்பதிகாரம் - அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் கோவலனைப் பிரிந்த கண்ணகியின் துயர நிலையை விரிக்கப்புகுந்த ஆசிரியர்,

> " கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
> மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
> ..................................
> கையறு நெஞ்சத்துக் கண்ணகி ...... (49-57)

என்று கூறியுள்ளார். இதில் வரும் 'மங்கல அணி யிற் பிறிதணி மகிழாள்' என்பதற்குத் 'தாலியைத் தவிர வேறு அணிகளில் கண்ணகி மகிழ்ச்சி கொள்ளவில்லை' என்று பொருள் கொள்ளல் பொருந்துமா? கண்ணகியின் திருமணச் சடங்கு களில் தாலி குறிக்கப்படாமையாலும், 'உனக்குக் குற்றமற்ற இயற்கையழகு (மங்கல அணி) இருக்க, இப்புற அணிகள் உனக்கு யாது பயனைத் தரும்?'

"மறுவின் மங்கல அணியே அன்றியும்
பிறிதணி அணியப் பெற்றதை எவன்கொல்?"

என்று கோவலன் கண்ணகியின் இயற்கையழகைப் பாராட்டிக் கூறியதாலும், அவன் பிரிவால் வாடிய கண்ணகி எத்தகைய அணிகளையும் அணிந்து கொள்ளாமலும், வேறு ஒப்பனைகளைச் செய்து கொள்ளாமலும் தன் இயற்கையழகோடு விளங்கி ஞள் என்றே மேற் கூறப்பெற்ற அடிகள் (49-57) பொருள்படுதலாலும், 'தாலியைத் தவிர வேறு அணிகளில் கண்ணகி மகிழ்ச்சி கொள்ளவில்லை' என்று பொருள் கூறுதல் பொருந்தாது. மேலும், இவ்வரிக்கு அரும்பத உரையாசிரியரும், விளக்க வுரை வரைந்த அடியார்க்கு நல்லாரும் இப்பொருள் கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அடி யார்க்கு நல்லார் கருத்தினை அறிய விரும்புவோர் கீழ்வரும் அவரது விளக்கத்தினைக் காண்க:

"சீறடி தன்னையணியுஞ் சிறப்பைச் சிலம்பு பெருதொழிய, அல்குல் தன்னையணியுஞ் சிறப்பை மேகலை பெருது நீங்க, முகம் தன்னையணியும் சிறப் பைச் சிறுவியர் பெருது பிரிய, சிவந்து நெடிதான கயல்போலுங் கண் தன்னையணியுஞ் சிறப்பை அஞ் சனம் பெருது மறப்ப, நுதல் தன்னையணியுஞ்

சிறப்பைத் திலகம் பெருமலிழப்ப, தன்னைக் கூடி ஞற்பெறுந் தவளவாணகையைக் கோவலன் பெருது இழப்ப, தன்னை அணிந்தாற் பெறுங் கூந்தலின் மணத்தை புழுகுநெய் பெருது மறப்ப, இவை இங்ஙனமாம்படி தான் எழுதாளாய், *மகிழாளாய்*, காதினளாய்க் கையற்ற நெஞ்சத்தை யுடையவளாகிய கண்ணகி,

"............(பாதம் முதலிய) உறுப்புக்கள் அவன் பிரிவுக்கு உடம்பட்டன என்று முனிந்து ஒழிய, *நீங்க, பிரிய, மறப்ப*, இழப்ப இவற்ருேடு குழையையும் துறந்த காதினள் எழுதாள் *மகிழாளாதலான்* இவையும் பயனிழப்பத் தானும் அழகும் இன்பமும் இழத்தலால்கையற்ற நெஞ்சினை யுடைய கண்ணகி."

இவ்விளக்கவுரையில் 'தாலி' பற்றிய குறிப்போ, 'கழுத்து' என்னும் உறுப்புப் பற்றிய குறிப்போ வாராமை கண்டுகொள்க;மூலத்திலும் இவையிரண்டும் கூறப்படாமை கண்டு தெளிக.

மேலே காட்டப்பெற்ற விளக்கத்தைக் கொடுத்த அடியார்க்கு நல்லார், அதனையடுத்துச், சிந்தாமணியில் வரும் ( சீவகனைப் பிரிந்த) பதுமையின் துன்ப நிலையை மேற்கோளாகக் காட்டியுள்ளார். சிந்தாமணி கி. பி. 10-ஆம் நூற்ருண்டில் செய்யப்பட்டது. சீவகனைப் பிரிந்த பதுமை, துன்பப்படுவதை 13 பாடல்களில் சிந்தாமணி ஆசிரியர் விரித்துள்ளார். அவள் 'தோளணி வாட்டீனுள்'; 'முற்றிழை சிந்தினுள்'; 'நகிற் காம்பினை அதுக்கினுள்', என்று பலபடியாக ஆசிரியர் கூறியுள்ளார். ஆனுல் இப் பதின்மூன்று செய்யுட்களிலும் தோளணி முதலிய அணிகள் கூறப்பட்டுள்ளனவே தவிரத் தாலி கூறப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

## பின்தாலி

தன்னிடம் ஊடல் கொண்டிருந்த கோவலனை மகிழ்விக்க விரும்பிய மாதவி நீராடி அலங்கரித்துக் கொண்ட விவரத்தை இளங்கோவடிகள், 34 வரிகளில் அழகுற விளக்கியுள்ளார்: அவள் காலணி முதல் தலையணி வரை பலவகை அணிகளை அணிந்துகொண்டாள். அவற்றுள் கழுத்தணிகள் சில; அவை வீரச் சங்கிலி, நுட்பமான தொழிலையுடை ஞாண் (சரடு), முத்துமாலை என்பன சில. இவற்றோடு, 'கொக்கிவாய் முத்தாரமாகச் செய்து அதிலே நவரத்தினங்களைக் கோத்து முதுகு மறையவிடும் அணி விசேடம்' ஒன்று. இவ்வணியை அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும், 'முதுகு மறையவிடும் பின்தாலி என்ற பெயரால் குறித்தனர். இப்பின்தாலி, என்றும் கழுத்தில் இருப்பதன்று என்பதும், தேவைப்படும்போது போட்டுக் கொள்ளத்தக்கது என்பதும் இங்குக் கூறப்பட்ட சந்தர்ப்பத்தைக்கொண்டு நன்கு உணரலாம்.

## முடிவுரை

இதுகாறும் கண்ட உண்மைகளை நடுவுநிலையிலிருந்து ஆராயின், சங்ககாலத் திருமணங்களில் (இக்காலத் திருமணங்களில் உள்ளது போல) தாலி கட்டும் வழக்கம் இல்லையென்பதைத் தெளிவாக உணரலாம். மேலும், அங்ஙனம் மணத்தில் தாலி இருந்திருப்பின், அஃது ஐம்படைத்தாலி, புலிப்பல் தாலி, வரிவெண்தாலி முதலிய பிற தாலிகளிலிருந்து வேறுபட்டன என அறிதற்கு, 'மணத்தாலி' என வழக்குப் பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் இல்லை என்பது தெளிவு.

மேலும், சங்க காலத் தமிழ்மக்களிடம் திரு மணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்திருக்கு மாயின், அதற்கென்று ஒரு தமிழ்ச் சொல்லோ, தொடரோ இருந்திருக்கவேண்டுமே ? அங்ஙனம் இல்லாமல் 'மங்கல நாண்', 'மங்கல அணி' என்ற கலவைத் தொடர்களாலே (Hybrids) சங்ககாலத்தில் வழங்கி வந்தது என்று கூறுதல் அறமாகுமா ? இவ் வழக்கம் தமிழரிடைத் தொன்றுதொட்டு இருந்து வருவதாயின், தனித் தமிழ்ச்சொல்லால் அல்லது தனித் தமிழ்த் தொடரால் குறிக்கப்பட்டிருக்கும். மேலும், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் முதல் நச்சினார்க்கினியர் ஈருகத் தோன்றிய உரை யாசிரியர் அனைவரும் ஒத்த கருத்தினராய்ப் பொருள் கூறியிருப்பர். அங்ஙனமின்றி, ஒவ்வொரு வர் ஒவ்வொரு வகையாகப் பொருள் கூறியிருத் தலும், ஒருவரே ஒரு சொல்லுக்குப் பல இடங்களில் பலவாறு பொருள் கூறியிருத்தலும் ஆகிய குழப் பங்கள் நேர்ந்திரா. தாலி விளையாட்டுப்பொருள் அன்று. அங்ஙனம் இருப்ப, 'மாங்கலிய சூத்திரம் என்பாருமுளர்' என்று தமக்கு அது உடம்பாடு அன்று என்பதை அடியார்க்கு நல்லார் கூறுதலும், 'பின்னுதல் அமைந்த நெடிய மயிர் என்பாருமுளர்' என்று நச்சினார்க்கினியர் கூறுதலும் கூர்த்த மதியோடு ஆராய்தற்குறியன. இங்ஙனம் உரை யாசிரியர்களே தம்முள் குழப்பிக்கொண்டு எழுதிய இடங்களில் எல்லாம் 'தாலிதான் இருந்தது' என்று நாம் அழிவழக்குப் பேசுதல் அறமாகாது. இங்குக் கூறிய அனைத்தையும் 'நுண்மாண் நுழைபுலம்' உடையார் நுணுகி ஆராய்ந்து தெளிவாராக.

இனி, இடைக்கால இலங்கியங்களை அடுத்து ஆராய்வோம்.

# 3. இடைக் காலம் - I

(கி. பி. 300 – 1600)

## I

### முகவுரை

சென்ற இரண்டு கட்டுரைகளிலும் கண்ட உண்மைகளை நோக்கச் சங்ககாலத் திருமணத்தில் தாலி பற்றிய பேச்சுக் குறிக்கப்படவில்லை என்பதும், 'தாலி' என்பது சிறுவர் சிறுமியர் அணியும் அணிவிசேடம் என்பதும் நன்கு தெளிவாகும். மேலும், அக்கால வாழ்வரசியர் தம் கணவர் இறந்த பின் 'தொடி' களைந்தனர் என்பதும், 'இழை' (அருங் கலம்' களைந்தனர் என்பதும் தெரிகின்றன. எனவே, சங்ககாலத்தில் திருமணத்தின் போது 'தாலி' என்னும் ஒன்று இருந்ததாகத் தெரிய வில்லையாயினும், வாழ்வரசித் தன்மைக்கு அறிகுறி யாகத் தொடி அல்லது இழை (அருங்கலம் ஒன்று) மணவணியாகக் கருதப்பட்டது, அதனை நீக்குதலே அமங்கலத் தன்மைக்கு அறிகுறி என்பன தெளி வாகின்றன.

இனி, இச்சங்க காலத்திற்குப் பிற்படத் தோன்றிய இடைக்கால இலக்கியங்களை (கி. பி. 300 - 1600) ஆராய்வோம்.

### பழமொழி

இது கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண் டைச் சேர்ந்தது என்பது அறிஞர் கருத்து. இந்நூலில்,

"மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு-நீருலையுள்
பொன்தந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுரு முன்றிலோ இல்." (பழமொழி-381)

என்னும் செய்யுள் காணப்படுகிறது, கொடிய பஞ்சகாலத்தில் உணவளிக்கும்படி தன்னை வேண்டிய பாணனுக்குப் பாரிமகள் நீரையுடைய உலையுள் பொன்னைப் பெய்து, அதனைக் கொண்டுவந்து உணவாகக் கொடுத்தாள் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருள். இதில் வந்துள்ள 'பொன்' என்பது தாலியைக் குறிப்பது என்று சிலர் கூறுவர். பாரிமகள் சங்க காலத்தவள்; சங்க காலத்தில் திருமணத்தாலி இல்லை என்பது முன்னரே நன்கு விளக்கப்பட்டது. ஆதலின் இப்பொருள் பொருந்தாது. அவள் அகநானூற்று 7-ஆம் செய்யுளில் கண்டவாறு இளமை முதலே அணிந்திருந்த (அதுவும் ஐயமே) திருமணச் சின்னம் அல்லாத தாலியை மாற்றி அவனுக்கு உணவு படைத்தாள் என்று கொள்ளலாம். பண்டைக் காலத்தில் 'பொன்' என்பது பொற்காசுக்கும் பொற்கட்டிக்கும் பெயராக இருந்தது. தான் அரிதின் முயன்று வைத்திருந்த அப்பொற்காசினைப் பாணனது பசித்துன்பத்தைப் போக்க உதவினாள் என்று கோடலும் பொருந்தும். இங்ஙனம் பொன்னைச் சேமித்துவைத்தல் சங்க கால மகளிர் வழக்கம் என்பது பெரும்பாணாற்றுப் படையால் அறியலாம், அங்கு. 'ஆய்மகள் நெய்யை விற்கின்ற விலைக்கு ஈடாகக் கட்டிடப்பசும்பொன்னை வாங்காள்,' என்பது கூறப்பட்டுள்ளது.

"ஆய்மகள்,
நெய்விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளாள்"
(வரி. 164)

இதனால் இக்குறிப்பிட்ட ஆய்மகள் தவிர, பிறமாதரிடம் பொன் சேமிக்கும் வழக்கம் பண்டு இருந்தது என்பது தெளிவாகும். இக்காலத்திலும் இவ்வாறு பொன் சேமித்தல் மகளிரிடைக் காணும் வழக்கமாகும். "ஒரு குண்டுமணிப் பொன்னாவது அவளிடம் இல்லாமலிருக்குமா ?" என்று மகளிர் தம்முள் பேசுவது இன்றும் பெருவழக்காகும் இக் 'குண்டுமணிப் பொன்' தாலியாகத்தான் இருக்கவேண்டும் என்னும் கட்டாயமில்லை என்பதும் அறியத்தக்கது. எனவே, மேற்கூறப்பெற்ற காரணங்களை நோக்க, 'பொன்' என்பது எவ்வகையானும் திருமணத் தாலியைக் குறியாது என்பது தெளிவு. 'பொன்' என்னுஞ்சொல் சங்ககாலத்தில் 'தாலி' என்னும பொருளில் வழங்கப்படாமையும் இங்கு அறியத்தகும்.

**பெருங்கதை**

குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் இயற்றிய 'பிருகத்கதா' என்னும் நூலைக் கி. பி. ஆரும் நூற்றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்த துர்விநீதன் என்ற கங்க அரசன் வடமொழியில் பெயர்த்தெழுதினான். அதனைக் கொங்குவேளிர் என்பவர் தமிழில் 'பெருங்கதை' என்னும் பெயரில் விரிந்த நூலாகச் செய்தார். எனவே, இதன் காலம் கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டு என்னலாம். இந் நூலிற் கூறப்படும் தலைவனான உதயணன் என்பவன் வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரி

சிகை என்னும் நால்வரை மணந்துகொண்டான். இவர்தம் திருமணங்கள் குறிக்கப்பட்ட இடங்களை முறையே காண்போம் :.

(1) வாசவதத்தையின் திருமணத்தில் (வரி 78-133) எரிவளர்த்தல், அம்மி மிதித்தல், பொரி அட்டுதல், முன்கை பற்றி வலம் வருதல், அந்தணர் ஆசி கூறுதல், அருந்ததி காட்டல், "நாவலும் மேருவும் பிரியாது விளங்குவது போல மணமக்கள் இருவரும் பிரியாது விளங்குக," என்று பெரியோர் வாழ்த்தல் என்பனவே குறிக்கப்பட்டுள்ளன. இத்துணைச்சடங்குகளைக் கூறிய ஆசிரியர் தாலியைக் குறியாதது கவனிக்கத்தக்கது.

(2) உதயணன் பதுமாவதியை மணந்ததைக் கூறும் இடத்திலும் (வரி 271-285) எரியோம்பல், தீவலம் வருதல் முதலியன கூறப்பட்டனவே தவிர, உதயணன் பதுமாவதியின் கழுத்தில் தாலி கட்டினான் என்னும் செய்தி கூறப்படவில்லை.

(3) உதயணன் மானனீகையை மணமுடித்ததை,

"நான்மறை யாளர் நன்மணம் காட்டத்
தீவலம் செய்து கூடிய பின்றை" (180-181)

என ஆசிரியர் இரண்டு வரிகளில் அடக்கிவிட்டார். இப்பகுதி,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டத்
தீவலம் செய்வாரை......................."

என வரும் சிலப்பதிகார அடிகளோடு ஒப்பு நோக்கத்தக்கது.

(4) முனிவன் மகளான விரிசிகையை உதயணன் மணந்த செய்தியை ஆசிரியர்,

" கூட்டமை தீமுதல் குறையா நெறிமையின்
வேட்டவள் புணர்ந்து..................." (113-114)

எனச் சுருங்கக் கூறித் திருமணத்தின் சிறப்புப் பகுதியை விளங்கவைத்துள்ளார்.

## சின்மணித் தாலி

தன் மனைவியான வாசவதத்தை தீயில் அகப்பட்டு மாண்டாள் என்று எண்ணிய உதயணன் அவளை நினைந்து புலம்பினான்; அப்பொழுது அவன் அவளுடைய பலதிறப்பட்ட நகைகளையும் உறுப்புக்களையும் எண்ணிப் புலம்பியதைக் கூறும் வரிகள் பல (வரி 67-159). அவளுடைய பொன்னரி மாலை, நெற்றிப்பட்டம், திலகம், காதணி, கண்கள், நகில்கள், பலவகை அணிகள், தோளணிகள், இடையணி முதலியவற்றை எண்ணி உதயணன் புலம்பினான். ஆனால் இப்பகுதியில் மணத்தாலி பற்றிய குறிப்பே இல்லை. 'பலவகை அணிகள்' என்னும் தலைப்பில் சுளிகை (கழுத்தணி), நன்முத்தாரம், பன்மணிப்பூண், *சின்மணித்தாலி*, முத்தணிவடம், நாண், (சரடு), தொடர் (சங்கிலி) என்பன கழுத்தணிகள் என்று கருதும்படி குறிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஐம்பத்தைந்து வரிகளில் காந்தருவதத்தையின் திருமணச் சடங்குகளை விவரித்த ஆசிரியர் அங்கு மணத்தாலி கூறாமையின் மேலே கூறப்பெற்ற கழுத்தணிகளுள் ' நாண் ' என்பதும், ' சின்மணித் தாலி ' என்பதும் திருமணத்தின்போது கட்டப்படும் தாலி அன்று என்பதும், இவை அக்

காலக் கழுத்தணிவகைகளைச் சேர்ந்தவை என்பதும் அறியக் கிடத்தல் காண்க. இப்பெருநூலை அரும் பாடுபட்டுப் பதிப்பித்து அரும்பதவுரை வரைந்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும் இவ் விரண்டு அணிகளையும் 'மணத்தாலி' என்று குறியாமையும் நோக்கத்தக்கது.

## குதிரையும் தாலியும்

உதயணன் ஏறிய குதிரை 'தாலி' என்னும் ஒருவகை நகையை அணிந்திருந்தது என்று ஆசிரி யர் கூறியுள்ளது படித்துச் சுவைத்தற்குரியது.

"கலினங் கவவிக் கான்றுநுரை தெவிட்டும்
வலியுடை யுரத்தின் வான்பொற் றாலி."
(கோயில் வேவு, வரி. 12-13)

## மங்கலப் பேரணி

வாசவதத்தையின் திருமணச் சிறப்பில் 'உதய ணன் வருதல்' என்ற தலைப்பின்கீழ், அவனது திருமணக் கோலத்தை ஆசிரியர் இரண்டடிகளில் அழகிய நடையில் கூறியுள்ளமை காண்க :

"குறைவின் றமைந்த கோல நுட்பத்து
மறுவின் றமர்ந்த மங்கலப் பேரணி
மன்ன குமரன் தன்னோர் சூழ"
(உடன்மயிர் களைந்தது, வரி 104-106)

இதில் வந்துள்ள 'மங்கலப் பேரணி' என்பது, இவ்விடத்தில் மணமகனது திருமணக் கோலத் தினைச் சுட்டி நிற்றலைக் காணலாம்.

அடுத்தபடி, பதுமாவதியின் திருமணம் பற்றிய இடத்தில் 'பதுமாவதியைக் கோலஞ்செய்தல்' என்

னும் தலைப்பில், பதுமாவதியைப் பெண்கள் திருமணக்கோலம் செய்ததை ஆசிரியர் 34 வரிகளில் விவரித்துள்ளார். அவளுக்கு அணியப்பட்ட பல வகை அணிகள் இங்குக் குறிக்கப்பட்டுள்ளன.

"... ... ... ... ... ... ... ... ...
சின்மயிர் முன்கைப் பொன்வளை முதலாக்
கண்ணுர் கடகமொடு கைபுனை ந் தியற்றிய
சூடகத் தேற்ற சுடரொளிப் பவளமொடு
பாடக நூபுரம் பரட்டுமிசை யரற்ற
ஆடமைத் தோளியை யணிந்துமுறை பிறழாது
வதுவைக் கேற்ற மங்கலப் பேரணி
அதிநா கரிகியை யணிந்தனர் அமைய,"
(பதுமாவதி வதுவை, வரி 232-238)

இங்கு, முன்கையில் பொன்வளையல் அணிதல் முதலாகப் பாடகம், நூபுரம், என்ற காலணிகள் ஈருக அணிவித்து, இவையெல்லாம் கூடிய திருமண ஒப்பனை (வதுவைக்கேற்ற மங்கலப்பேரணி) செய்து முடித்தனர் என்பதே இங்குப் பொருள் கூறத்தக்கது. இங்ஙனம் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் மணப்பெண்ணுக்கு ஒப்பனை செய்தலும், அங்ஙனம் செய்த பின்னர் அநுபவம் பெற்ற முதுபெண்டிர் வந்து மணமகள் கோலத்தை நன்கு கவனித்து, அவ்வொப்பனையைப் பார்வையிட்டுக் குறையை நிறைவாக்குதலும் இன்றும் மண வீடுகளில் நடக்கும் வழக்கம். இங்ஙனம் *நிறைவு எய்திய திருமணக்கோலமே 'மங்கலப் பேரணி'* என்னும் தொடரால் குறிக்கப்பட்டது என்பது பொருத்தமாகும். வாசவதத்தையை மணக்கும் முன்னர் உதயணன் செய்துகொண்ட திருமணக் கோலத்தையும் இத்தொடரால் ஆசிரியர் குறிப்பிட்டனர்

என்று கொள்ளுதலே, இவ்விரண்டையும் நோக்கப் பொருத்தமாகத் தெரிகின்றது. ஆகவே, மணமக னும் திருமணச் சடங்கிற்கு முன்னரே மங்கலப் பேரணி கொண்டான், மணமகளும் 'மங்கலப் பேரணி' கொண்டாள் என்பன நன்கு கவனிக்கத் தக்கவை. இங்கு 'மங்கலப் பேரணி' என்று ஈரிடங் களில் வரும் தொடரையும், அவை கூறப்பெற்ற சந்தர்ப்பத்தையும் நன்கு உளங்கொண்டு, இது போலவே திருமணச் சடங்குகளுக்கு முன்னர்ச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட 'மங்கல அணி' என்னும் தொடருக்கு உரிய பொருளைக் காண்பது நடுவுநிலை வழாத அறிஞர்களுக்குக் கடனாகும்.

## ஒப்பனை கூறும் முறைமை

சிலப்பதிகாரத்தில் அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் கணவனைப் பிரிந்து தனித்திருந்த கண்ணகியின் துன்பநிலையைக் கூறப்புகுந்த ஆசிரியர், கண்ணகியின் காலணி முதலாகக் கூறத் தொடங்கி,

> "கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
> **மங்கல அணியிற்** பிறிதணி மகிழாள்
> கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்,"
> (அந்தி. 49-15)

என்று ஏறுமுறையில் சொல்லிச் செல்வதால், கொங்கைக்கும் காதிற்கும் இடையிலுள்ள 'கழுத்து' என்னும் உறுப்பில் அணியும் தாலியையே மங்கல அணி' என்பது குறித்தாதல் வேண்டும் என்று சிலர் கூறுவர், அப்படி இளங்கோடிவகள் ஏறு முறையிலேயே முற்றிலும் சொல்லவில்லை. அவ்

வாறு கூறுவது அவர் கருத்தாயின், காதைக் குறிப் பதற்கு முன்பு கழுத்துக்கு மேல் உள்ள வாயையும், பிறகு கண்களை அல்லது காதுகளைக் குறித்துப் பின்னரே நெற்றியைக் குறித்திருத்தல் வேண்டும். ஆனால் இளங்கோவடிகள் அங்ஙனம் கூறாமல், முதலில் காதையும், அடுத்து முகத்தையும், அதன் பின்பு கண்களையும், அவற்றிற்குப் பின்னர்க் கண் களுக்கு மேலுள்ள நெற்றியையும், அதனையடுத் துக் கண்களுக்குக் கீழுள்ள வாயையும் அதற்குப் பின்பு கண்ணுக்கும் நெற்றிக்கும் மேலுள்ள கூந்தலையும் முறை பிறழக் கூறியுள்ளார்.

"கொடுங்குழை துறந்த வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகஞ் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி.........
(அந்தி. வரி. 51-56)

இம் முறைபிறழ்ச்சியை நோக்குங்கால், கால் முதல் தலைவரையில் முறைப்படிக் கூறவேண்டும் என்னும் நோக்கத்தோடு இவ்விடங்களை ஆசிரியர் குறிக்கவில்லை என்பது நன்கு தெளிவாகும்.

இவ்வாறு முறைபிறழ்ந்து நூலாசிரியர் கூறு தல் இயற்கை என்பதைப் 'பதுமாவதியைக் கோலஞ் செய்தல்' என்னும் தலைப்பின்கீழ்ப் பெருங்கதை ஆசிரியரான கொங்குவேள் கூறி யுள்ள விவரங்கள் நன்குணர்த்தும்; மகளிர் பதுமா வதிக்கு முதலில் கூந்தல் ஒப்பனை செய்தனர்;

அங்கு அணிகளை அணிவித்தனர்; பிறகு மார்பில் பல அணிகளை அணிவித்தனர்; அவற்றின் பின் முகத்தில் திலகமோடு பட்டம் அணிவித்தனர். (இங்கு ஒப்பனை கழுத்திற்குமேலே சென்று விட்டது காண்க) பிறகு காதணி அணியப்பட்டது. உடனே ஆசிரியர், அல்குலை அணிசெய்யும் மேகலையைக் குறிக்கின்றார். (இங்குக் காதிலிருந்து இடைக்கு வந்தமை காண்க.) பின்னர் இடையிலிருந்து ஆசிரியர் தோளுக்குச் சென்று தோளணிகளைக் குறித்திருத்தல் காண்க; பின்பு முன்கையணிகளைக் குறிப்பிட்டு உடனே பாதங்களுக்குச் சென்றுவிட்டமை காணத்தக்கது. தலையிலிருந்து கால்வரை இறங்கு முகமாகவோ, அல்லது காலிலிருந்து தலைவரை ஏறுமுகமாகவோ மகளிர் மணமகளுக்கு ஒப்பனை செய்ததைப் பெருங்கதை ஆசிரியர் முறைப்படுத்திக் கூருமல், தம் மனம் போனவாறு கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது. நாம் இந்த முறை பிறழ்ச்சியை நன்கு ஊன்றிக் கவனியாமல், இரண்டோர் இடங்களில் அவர் ஒழுங்காகச் சொல்லுதலைக் கவனித்தவுடன், 'இவர் இம்முறை பற்றியே ஒன்றன்பின் ஒன்ருகக் கூறிச் செல்கிருர்' என்று நம்பி ஏமாறுதல் ஆகாது. இந்த நிலையைக் கொண்டு, இளங்கோவடிகள் கூற்றினை நோக்குவோமாயின், அவர் கழுத்தென்னும் உறுப்பினையும், அதன் கண் தொங்கும் தாலியையும் குறித்தார் என்று கொள்ள இடமின்மை காண்க. சிலப்பதிகாரத்திற்கு விளக்கவுரை வரைந்த அடியார்க்குநல்லார் தந்துள்ள உரையிலிருந்து இவ்வுண்மை தெளியப்படும். அவ்வுரையை ஊன்றிப் படிக்கும் அறிஞர் இவ்வுண்மையை உணர்வர்.

## இறையனார் அகப்பொருள் உரை

இறையனார் அகப்பொருள் உரை கி. பி. எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதென்பது அறிஞர் கருத்து. அவ்வுரையில் (23-ஆம் சூத்திர உரை) "பிறரும் வரைந்து எய்துவதற்கு முலை விலையோடு புகுந்து **பொன் அணிவான்** நின்றாரும் உளரெனப் படைத்து மொழிந்து சொல்லும்" என்னும் வாக்கியம் வந்துள்ளது. அதன்கீழ்ப் பாண்டிக் கோவைச் செய்யுள் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. அதனுள்,

> "கன்னியன் னாள்தன்னைப் **பொன்னணிவான்**
> காரணி வார்முர சார்ப்பப் பிறரும் கருதி
> வந்தார்."

என்பது கூறப்பட்டுள்ளது. இச்செய்யுளை அடுத்துப் 'பொன்னணி உரைத்தல்' என்னும் தலைப்பில் இரண்டு செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள், மணமுரசு கொட்டலும், காப்பு அணிதலுமே கூறப்பட்டுள்ளன. எனவே, இங்குப் **பொன்** அணிதல் என்பது, 'காப்பு அணிதல்' போல, திருமணத் திற்குரிய **சிறப்பு அணி** ஒன்றனை அணிவித்தலையே குறிக்கும்.

சூத்திரம் 28-இன் உரையில், "தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு **அருங்கலங்களோடு** வரைவு வேண்டிவிட்ட இடத்து," என வருவதும், சூத்திரம் 29-இன் உரையில், "தலைமகன் தமர் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடு வரை தற்குப் புகுவர்," என வருவதும் காண, 'பொன்' என்பதும், '**அருங்கலங்கள்**' என்பதும் மணத்திற் குரிய **சிறப்பு அணி** அல்லது **அணிகளைக்** குறித்தன

வாதல் வேண்டும். இவ்வெட்டாம் நூற்றுண்டு வழக்கில் திருமணத்தாலி இருந்திருக்குமாயின், களவியலுரையோ, பாண்டிக்கோவையோ அதனைத் தெளிவாகக் கூறுதிருத்தல் இயலுமா ?

## பெரியாழ்வார் திருமொழி

கி. பி. எட்டாம் நூற்றுண்டினர் என்று கருதத் தகும் பெரியாழ்வார் பாடிய திருமொழியில் **ஆமை** வடிவிற் செய்த **தாலி** ஒன்று பிள்ளைப் பருவத்தை உடைய திருமால் அணிந்திருந்ததாகக் குறிப்பிடப் படுகின்றது.

" அக்கு வடமுடுத்து **ஆமைத்தாலி** பூண்ட அனந்த சயனன்
தக்கமாமணி வண்ணன் வாசுதேவன்
தளர்நடை நடவானோ " (1, 7, 2)

மற்றொரு செய்யுளில் பெரியாழ்வார்,

" தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு "
(2, 6, 1)

கண்ணன் கையில் விளையாட்டு வில்லேந்தி கன்று காலிகளின் பின் போதலைக் குறிக்கின்றார். அஃதாவது, கண்ணன் தன் இளம்பருவத்தே **தாலிக் கொழுந்து** என்னும் கழுத்தணியை அணிந்திருந்தான் என்பது இதனால் பெறப்படுகின்றது. இத் தாலிக்கொழுந்து ஆமைத்தாலி என்றும், பனை வெண்குருத்தால் இயன்ற ஒருவகை நகை என்றும் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி கூறுகின்றது. எனவே, பெரியாழ்வார் காலத்தில் **ஆமைத்தாலி** என ஒன்றும், **தாலிக்கொழுந்து** என ஒன்றும் வழக்கில் இருந்தன என்பது தெளியலாம். இவை இரண்டும்

இளம்பருவப் பிள்ளைகள் அணிந்திருந்தனவாகக் கோடலே பொருந்தும்.

## நாச்சியார் திருமொழி

பெரியாழ்வாரின் திருமகளாரான ஆண்டாள் அம்மையார் தாம் கண்ணனைக் கனவில் மணந்த தாகக் கூறும் பாடல்களில் திருமணச் சடங்குகள் பலவற்றை விளக்கமாகக் கூறியுள்ளார். அப்பாடல் களில் (1) இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் வந்து மகள் பேசுதல், மணமகள் புத்தாடை உடுத்தல், திருமாலின் தங்கையான அந்தரி (துர்க்கை) மண மகளுக்கு மணமாலை சூட்டல், (2) மணமகளுக்குக் காப்புநாண் கட்டுதல், (3) மணமகன் மணப்பந்த லுக்கு வருதல், (4) வாத்தியங்கள் முழங்கக் கண் ணன் ஆண்டாளின் கையைப் பிடித்தல், (5) வேதி யர் மந்திரம் ஓதக் கண்ணன் ஆண்டாளின் கையைப் பற்றித் தீவலம் செய்தல், (6) கண்ணன் தனது திருக்கையால் ஆண்டாளின் பாதத்தை அம்மிமேல் வைத்தல், (7) ஆண்டாளின் உடன் பிறந்தார் கண்ணன் கைமேல் ஆண்டாளின் கையை வைத்துப் பொரிமுகந்து அட்டுதல், (8) குங்குமம் அப்பிச் சாந்து பூசி மங்கல வீதி வலம் செய்வித்து மணமக்கள் இருவரையும் மஞ்சனம் ஆட்டல் என்னும் சடங்குகள் முறையே கூறப்பட் டுள்ளன. ஆனால், கண்ணன் தனக்குத் தாலிகட்டிய தாக ஆண்டாள் கூறாமை நோக்கத்தக்கது. ஆண்டாள் அம்மையார் காலத்தில் இச்சடங்கு இருந்திருக்குமாயின், இத்துணைச் சடங்குகளை விரித்துக்கூறும் அவர், தாலி கட்டுதலைக் கூறாது விடுவரோ ?

**சூளாமணி**

இந்நூல் சமண நூல். இது கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்டதென்று அறுஞர் கூறுவர். இதில் 8-ஆம் பகுதி ‘ கல்யாணச் சருக்கம் ’ என்பது. அதனில் திவிட்டன் என்ற அரசனுக்கும் சயம்பவை என்னும் அரசமகளுக்கும் நடந்த திருமணம் பல செய்யுட்களில் (273-280) விவரிக்கப்பட்டுள்ளது. இதனில், (1) பெண்ணின் தந்தை தன் மகளை மணமகனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தல், (2) எரிவளர்த்தல், (3) மணமக்கள் தீவலம் வருதல், (4) அம்மி மிதித்து அருந்ததி காட்டல் என்னும் சடங்குகளே குறிக்கப்பட்டுள்ளன. இத் திருமணத்திலும் தாலியைப்பற்றிய பேச்சு வாராமை நோக்கத்தக்கது.

இனிக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டிலும் அதற்குப் பின்னரும் தோன்றிய சிந்தாமணி போன்ற இலக்கியங்களிற் கூறப்படும் திருமணச் செய்திகளை அடுத்து ஆராய்வோம்.

# தமிழர் திருமணத்தில் தாலி

## இடைக்காலம் - II

[ கி. பி. 300 - 1600 ]

### முகவுரை

கி. பி. 4-ஆம் நூற்றுண்டு முதல் 9-ஆம் நூற்றுண்டு முடியத் தோன்றிய பழமொழி முதல் சூளாமணி ஈருக உள்ள தமிழ் நூல்களில் திருமணத்தின்போது தாலிகட்டுதல் என்னும் சடங்கு கூறப்படவில்லை என்பது தெரிவிக்கப்பட்டது. அத்துடன், 'சின்மணித்தாலி' என்ற பெயருடன் ஒரு கழுத்தணி வழக்கில் இருந்தது, 'நாண்' என்ற பெயருடன் மற்ருெரு கழுத்தணி இருந்தது, குதிரையின் கழுத்தில் அணியப்படும் 'தாலி' என்னும் ஒருவகை அணியும் இருந்தது என்பன பெருங்கதை கொண்டு சுட்டப்பட்டன. இனிக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டிலிருந்து 16-ஆம் நூற்றுண்டுவரையில் தோன்றிய தமிழ்ப் பெருநூல்களில் மணத்தாலி பற்றிக் கூறப்பட்டுள்ள விவரங்களைக் காண்போம்.

### சிந்தாமணியில்

சீவக சிந்தாமணி ஏறத்தாழக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் செய்யப்பட்டது என்று அறிஞர் கருதுகின்றனர். இப்பெருநூல் ஏறத்தாழ 3,200 பாடல்களைக் கொண்டது; பலவகைச் சுவைகளையும் தன்னகத்தே கொண்டது; கம்ப ராமாயணத்

திற்கு உயர்வு உண்டாக்கிய தமிழ் நூல்களுள் தலைசிறந்தது. இதனை இயற்றியவர் திருத்தக்க தேவர் என்ற சமணமுனிவர். சமணர் செய்த இந் நூலும் சூளாமணியும் வடநாட்டுக் கதைகளைக் கூறுவன. ஆதலின் அவற்றில் தமிழர் திருமணச் செய்திகளைக்காணுதல் முறையன்று என்று சிலர் கருதலாம். இராமன் வரலாறு வடநாட்டுக் கதை தானே! அங்ஙனமிருப்பினும், 'தமிழ்ப் பெரும் புலவராகிய கம்பர் தமிழ்நாட்டு வளத்தையும் தமிழர் பண்பாட்டையும் அப்பெருநூலில் குறித்துச் சொல்வதால் அது போற்றத்தக்க பெருநூல்' என்று இக்காலப் புலவர் பெருமக்கள் ஏற்றிப் போற்றுகின்றனர் அல்லவா? சிந்தாமணி நூல் திருத்தக்க தேவர் என்னும் தமிழ்ச் சமண முனிவரால் செய்யப்பட்டமையாலும், இதன்கண் கூறப்படும் நாட்டுவளம் முதலியனவும் பலவகை அணியின் பெயர்களும் பிறவும் தமிழ்நாட்டிற்கு இயைந்த முறையில் அமைந்திருத்தலாலும், கம்பரது செய்யுட் பெருமைக்கே அடிப்படை நூலாக இஃது அமைந்திருத்தலாலும், இதன்கண் கூறப்படும் திருமணச் செய்திகளை ஆராய்தல் குற்றமாகா தெனக் கூறலாம். இப்பெருங் காவியத்தில் ஒன்பது திருமணங்கள் கூறப்படுகின்றன. இவற்றை முறைப்படி இங்கு ஆராய்வது சுவை பயப்பதாகும்.

## 1. கோவிந்தையார் திருமணம்

இஃது ஆயர் மகள் திருமணம். இதில் 1. மணமகளை நீராட்டுதல், 2. அவள் முன்னர் அணிந்திருந்த பசும்பொன் தோட்டையும், மணிகள் பதித்த குழையையும் நீக்கிவிட்டு அவளுக்கு

மங்கலக் கடிப்பு (கடிப்பு - காதணி) அணிவித்தல், 3. மலர் மாலை அணிவித்தல், 4. இவ்வாறு மணமகளுக்குக் கோலஞ் செய்த பின்னர் அவள் தந்தை தாரை வார்த்தல் - மணமகன் ஏற்றல் என்னும் சடங்குகளே (செய் 81-84) குறிக்கப்பட்டுள்ளன. இச் சடங்குகளுள் தாலி கட்டுதல் கூறப்படவில்லை.

## 2. காந்தருவ தத்தையார் திருமணம்

இது அரசமகனும் கந்தருவ மகளும் செய்து கொள்ளும் மணம். இத்திருமணத்தில், 1. எரி வளர்த்தல், 2. பெண்ணின் தந்தை தாரை வார்த்தல் - மணமகனை சீவகன் ஏற்றல், 3. சீவகன் மணமகளின் முன் கையைப் பற்றித் தீவலம் வருதல் என்னும் சடங்குகளே (செ. 345–346) கூறப்பட்டுள்ளன.

## 3. குணமாலையார் திருமணம்

இது வணிகர் மகளுக்கும் சீவகனுக்கும் நடைபெற்ற திருமணம். இதனில், 1. சீவகனைச் சேர்ந்தவர் மகள் பேசி முடித்தல், 2. திருமணத்திற்குரிய நல்லநாள் பார்த்தல், 3. குறித்த நாளில் முரசம், முழவு, சங்கம் ஒலிசெய்ய மணமகன் மணமகளை மணந்து கொள்ளல் என்பனவே (செ. 213 - 215) குறிக்கப்பட்டுள்ளன. திருமண அறையில் நடைபெற்ற சடங்குகள் கூறப்படவில்லை.

## 4. பதுமையார் திருமணம்

இது அரச மகளுக்கும் அரச மகனுக்கும் நடைபெற்ற திருமணம். இதனில், 1. மணமகள் முன்

ங்கையில் காப்புக் கட்டுதல், 2. இருவர்க்கும் மணக் கோலம் செய்வித்தல், 3. இருவர்க்கும் திருமணம் நடைபெறல் என்பனவே (செ. 179 - 181) கூறப் பட்டுள்ளன. இங்கும் திருமண அறையில் நடை பெற்ற சடங்குகள் கூறப்படவில்லை,

## 5. கேமசரியார் திருமணம்

இது சீவகனுக்கும் வணிகர் மகளுக்கும் நடை பெற்ற திருமணம். இதனில், குறித்த நன்னாளில் இருவர்க்கும் பல வாத்தியங்கள் ஒலிக்கத் திருமணம் நடைபெற்றது என்பது ஒன்றனையே ஒரு செய்யுள் (செ. 79) கூறுகின்றது.

## 6. கனகமாலையார் திருமணம்

இது அரசரிடை நடைபெற்ற திருமணம். இத் னில், 1. வதுவை நன்னாளை அனைவர்க்கும் கூறல், 2. முரசு ஒலித்தல், 3, தீவேட்டு மணம் புரிதல் என் பனவே (செ. 131) கூறப்பட்டுள்ளன.

## 7. விமலையார் திருமணம்

இது வணிகர் மகளுக்கும் சீவகனுக்கும் நடை பெற்ற திருமணம். இங்கு எத்தகைய சடங்கும் கூறப்படவில்லை.

> " பைம்பொன் நீள்நகர்ப் பல்லியம் ஆர்த்தெழ
> இம்பர் இல்லதோர் இன்பம் இயற்றினர் "
> (செய். 92)

என்னும் இரண்டுவரிகளில் ஆசிரியர் திருமணத்தை முடித்துவிட்டார்.

## 8. சுரமஞ்சரியார் திருமணம்

இது வணிகர் மகளுக்கும் சீவகனுக்கும் நடை பெற்ற திருமணம். இதனில் திருமணச் சடங்குகள் குறிக்கப்படவில்லை. பல வாத்தியங்கள் ஒலிக்கச் சுரமஞ்சரியின் தந்தை தன் மகளைச் சீவகனுக்குக் கொடுத்தான் என்பதே கூறப்பட்டுள்ளது.

## 9. இலக்கணையார் திருமணம்

இது அரசமகளுக்கும் அரசமகனுக்கும் நடை பெற்ற திருமணம். இதனில், 1. மறையோர் வேத விதிப்படி எரிவளர்த்தல், 2. பல வாத்தியங்கள் முழங்குதல், 3. மணமகள் தந்தை தாரை வார்த் தலைச் சீவகன் ஏற்றுக்கொள்ளுதல், 4. சீவகன் இலக்கணையின் இடக்கையைப் பற்றிக்கொண்டு தீயை வலம் வருதல், 5. அருந்ததி காட்டுதல் என் பன குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வொன்பது திருமணங்களில் மூன்று அரசர் திருமணங்கள்; நான்கு வணிகர் திரு மணங்கள்; ஒன்று வித்தியாதரப் பெண்ணின் திரு மணம்; மற்ருென்று ஆயர்மகளின் திருமணம். இவற்றுள் மூன்று திருமணங்கள் மணச் சடங்கு களைத் தெளிவாகக் குறிக்கின்றன. அவற்றுள் ஒன்றிலேனும் திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குத் 'தாலி கட்டினுன்' என்பது கூறப் படாமை கவனிக்கத்தக்கது.

## மாணிக்கத் தாலி

சிந்தாமணியின் இறுதிப் பகுதியாகிய முத்தி யிலம்பகத்தில் சீவகனும் அவன் மனைவியரும்

முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்னும் பருவங்களில் இன்பந்துய்த்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. அவர்கள் இளவேனிற் பருவம் வந்தவுடன் இளமரச் சோலையில் இனிது விளையாட விரும்பினர். அப்பொழுது சீவகன் மனைவிமார் நீராடித் தம்மை அலங்கரித்துக்கொண்டனர்; கூந்தலுக்குப் புகையூட்டினர்; நகங்களுக்கு வண்ணம் தீட்டினர்; கூந்தலை முடித்தனர்; பட்டு உடுத்தினர்; பாதங்களுக்குக் கிண்கிணி, சிலம்பு, பரியகம் என்ற காலணிகளை அணிந்தானர்; தொடையில் மகரம் என்னும் அணியும், மார்பில் சாந்தும் அணிந்தனர்; கைவிரலில் மணிகள் பதித்த மோதிரக்களை அணிந்தனர்; தோளில் சலாகை என்னும் நகையை அணிந்தனர்; காதில் மகரகுண்டலமும் தோடும் அணிந்தனர். இங்ஙனம் தம்மை அலங்கரித்துக்கொண்ட அம்மகளிர், ஒளிவீசும் மாணிக்கக் கற்கள் பதித்த தாலியொன்றனை விரும்பிக்கழுத்தில் அணிந்துகொண்டனர். பிறகு விழிகளுக்கு மையூட்டினர்; பின்பு புறப்பட்டுச் சோலை சென்றனர். இவ்வருணனையை ஆறு செய்யுட்களில் (93 - 99) ஆசிரியர் அழகுறக் கூறியுள்ளார். பிற அணிகளை மேற்கூறியவாறு நீராடி அணிந்து கொண்டபடியே, அம்மகளிர் மாணிக்கத்தாலியையும் கழுத்தில் அணிந்துகொண்டனர் என்பது,

> " நாணுள் ளிட்டுச் சுடர்வீசு
> நன்மா ணிக்க(ம்) நகுதாலி
> பேணி நல்லார் கழுத்தணிந்து " (செ. 99)

என்னும் அடிகளால் தெளிவாகும். அதாவது, முன் சொல்லப்பட்ட சிலம்பு,பரியகம், மோதிரம், சலாகை,

குண்டலம், தோடு முதலிய அணிகளைப் போலவே அம்மகளிர் மாணிக்கத் தாலியையும் அப்போதுதான் விருப்பத்துடன் கழுத்தில் அணிந்துகொண்டனர் என்பது மூலத்தால் தெரிகிறது. முன்பு திருமணங் களைப் பற்றிய பல இடங்களில் எல்லாம் திருமணத் தாலியைக் குறியாத ஆசிரியர், இங்கு மாணிக்கத் தாலியைப் பல அணிகளோடு கூறியிருத்தலைக் கொண்டு, தாலியென்பது இங்குக் கழுத்தணிகளுள் ஒன்று என்பதும், பிறஅணிகளைப்போல, வேண் டாதபோது கழற்றிவைக்கவும், வேண்டும்போது அணியவும் தக்கநிலையில் இருந்தது என்பதும் இச்சந்தர்ப்பத்தில் அறியத்தகுவன. மாதவி 'முதுகு மறையவிடும் 'பின்தாலி'யை அணிந்தாள் என்று அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் கூறியுள்ளனர் என்பது இரண்டாங் கட்டுரையிற் கூறப்பட்டதன்றோ? இங்குமாணிக்கத்தாலிபின்தாலி எனக் கூறப்படாததால் அதனின் வேருய 'முன்தாலி' யையே ஆசிரியர் குறித்ததாகக் கோடல் பொருந்தும்.

மேலே கூறப்பெற்ற செய்யுள் இவ்வுண்மை யைத் தெளிவாக வற்புறுத்தியிருந்தும், இவ்வடி கட்கு உரையெழுதிய பெரும் புலவரான நாச்சினர்க் கினியர், தமக்குப் பல நூற்ருண்டுகட்கு முன்பு சீவகன் வாழ்ந்தான் என்பதையும், அவன் காலத் தில் திருமணத்தாலி அணியும் வழக்கம் இல்லை யென்பதையும் இவ்விடத்தில் மறந்தவராய், தமது காலத்தில் (கி. பி. 14-ஆம் நூற்ருண்டில்) தாலி மனைவியின் கழுத்தில் நீங்காதிருந்த நிலையையே உளங்கொண்டு, "தாலியைப் பழைய நிலையிலே கிடக்கும்படிப் பேணி", என உரை கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியர் 'பேணி' என்பதற்குப் ''பழைய நிலையிலேயே கிடக்கும்படிப் பேணி'', அதாவது, ''இயல்பாகவே கழுத்தில் கிடந்த அத்தாலியை நன்னிலையில் திருத்தி' என வலிந்து பொருள் கொள்ளுவர். இப்பொருளுக்கு மாறாக, '*அணிந்து*' என்னும் சொல் மூலத்தில் வந்திருப்பது நோக்கத் தக்கது, 'அணிந்து' என்பதனால், அணிவதற்கு முன் அத்தாலி ஏனைய அணிகளைப் போலவே தம் உடம்பிலன்றிப் பிறிதோரிடத்தில் வைக்கப்பட்டிருந்தமை நன்கு புலனாகும். பரிமேலழகர், சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர், புறநானூற்று உரையாசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய தமிழ்ப் புலமை சான்ற பெருமக்கள் பலரும் இது போலவே சிற்சில இடங்களில், காவியத் தலைவன் வாழ்ந்த கால உணர்ச்சியின்றித் தம்கால வழக்கையொட்டி இங்ஙனம் பொருள் கூறியிருத்தல், மூலத்தையும் உரையையும் ஊன்றிப் படிப்பவர்க்கு நன்கு விளங்கும். ஆதலால் பேரளவு மூலத்தையே பற்றுக் கோடாகக் கொள்ளுதல் நல்லது; மூலத்திற்குப் பொருந்திய உரையிருக்குமேல் ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும். சில இடங்களில் பொருந்தா உரை கூறி யிருத்தலைக்கொண்டே உரையாசிரியரது முழு உரையையும் பயனற்றதெனத் தள்ளுதல் அறமன்று; பொருந்தும் இடங்களிற் போற்றிப் பொருந்தா இடங்களில் பொருந்தாமைக்குரிய காரணத்தை ஆராய்ந்து அப்பகுதியை மிக்க மரியாதையோடு விட்டுச்செல்லலே அறிஞர்மேற்கொள்ளத்தகுவது. ஒரே நூலுக்கு உரையாசிரியர் இருவரோ பலரோ அமைவாராயின், அவர்தம் உரைகளைக் கூர்ந்து நோக்கிக் *காலவழு* (Anachro-

nism) போன்ற வழுக்கள் இல்லாத உரையையே ஏற்றுக்கொள்ளுதல் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகும்.

**பொன் ' என்பது ' தாலி 'யா ?**

பதுமையார் வாழ்ந்த நகரத்தின் கோட்டைச் சுவரும் கிடங்கும்பற்றிக் கூறப்பட்ட செய்யுள் ஒன்று உண்டு. அது,

" அன்னமு மகன்றிலும் அணிந்து தாமரைப்
பன்மலர்க் கிடங்குசூழ் பசும்பொற் பாம்புரிக்
கன்னிமூ தெயில்கட லுடுத்த காரிகை
பொன்னணிந் திருந்தெனப் பொலிந்து
தோன்றுமே."

(பதுமையாரிலம்பகம், செய். 85)

இதன் கடைசி அடியில் வந்திருக்கும் ' பொன் ' என்பது ' தாலி ' என்று சிலர் கூறுவர். அன்னமும் அகன்றிலும் (நீர் வாழ் பறவைகளுள் ஒன்று) அணியப்பட்டுக் கிடங்கு சூழ்ந்த பாம்பு உரியை உடைய பழைய மதிற்சுவர், கடலை ஆடையாகக்கொண்ட நிலமகள், ' பூண் ' (நகைகள்) அணிந்திருந்ததன்மைத்து என்று சொல்லும்படி விளக்க முற்றுத் தோன்றியது என்பதே இச்செய்யுளின் பொருள். இங்கு எயிலுக்கு நிலமகளும் அதனைச் சூழ்ந்த கிடங்கு முதலியவற்றிற்கு ஆடையாகிய கடலும் பிற நகைகளும் உவமைகள். அன்னமும் அகன்றிலும் நிலமகள் நகைகளெனத் தோன்றின என்பதே இங்குப் பொருள். ' பொன்-பூண் ' என்னும் நச்சினார்க்கினியர் உரையும், ' பொன் - நகை ; ஆகு பெயர் ' என்னும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அடிக் குறிப்பும் இங்கு ஒப்புநோக்கத்தக்கவை. எனவே, இச்செய்யுளில் வந்துள்ள

'பொன்' என்பது 'தாலி' என்னும் ஒன்றைக் குறியாமல், பல அணிகளைக் குறித்து நிற்றலைக் காண்க.

**கந்த புராணம்**

இது கி. பி. 11-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்டது என்று அறிஞர் கூறுவர். இதனைச் செய்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். இந் நூலில் மூன்று திருமணங்கள் கூறப்பட்டுள்ளன, சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடந்த திருமணம் ஒன்று; முருகனுக்கும் தெய்வயானை அம்மைக்கும் நடந்த திருமணம் ஒன்று; முருகனுக்கும் வள்ளியம்மைக்கும் நடந்த திருமணம் ஒன்று.

**உமாதேவியார் திருமணத்தில்**

திருக்கல்யாணப் படலத்தில் இறைவன் திருமணச் சடங்குகள் மூன்று செய்யுட்களில் கூறப்பட்டுள்ளன. 1. உமாதேவியின் தாய் நீர் வார்க்கத் தந்தையான இமவான் மணமகனை சிவ பெருமானுடைய திருவடிகளை விளக்கினன்; 2. பிறகு உமாதேவியின் கையை மணமகன் கையில் வைத்து, , நேசமொடு அளித்தேன்' என்று தாரை வார்த்துக்கொடுத்தான். சிவபெருமான் மணமகளை மங்கல முறையால் கொண்டான் (செ. 6 9- 71) இத்திருமணத்தில் சிவபெருமான், உமாதேவியைப் பெற்றோர் தரக் **கைப்பிடித்தல் ஒன்றே** (பாணிக் கிரகணம்) கூறப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. பதினாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்ட இந்நூலைப் பாடிய கச்சியப்பர் தாலியைப் பற்றிக் கூற இடமில்லாமையால் விட்டுவிட்டார் என்று கூறுதல் பொருத்தமாகுமா?

## வள்ளியம்மை திருமணத்தில்

வள்ளியம்மையின் தந்தையான குறவர் கோமான் முருகன் கையில் வள்ளியம்மையின் கரத்தை வைத்து, 'என் தவப்பயனால் வந்த வள்ளியம்மையை விருப்போடு இன்று உனக்குக் கொடுத்தேன், கொள்க,' என்று தாரை வார்த்தான். நாரதர் இத்திருமணப் புரோகிதனாக இருந்து வேத விதிப்படி எரிவளர்த்துப் பிற சடங்குகளைச் செய்து முடித்தான் (செ. 199 - 200). இத் திருமணத்திலும் தாலி சூட்டப்படாமை கவனிக்கத்தக்கது.

## தெய்வயானையம்மை திருமணத்தில்

தெய்வயானையம்மை இந்திரன் மகள். அவள் பலவகை ஆடை அணிகளால் திருமணக்கோலம் செய்துகொண்டு மணப்பந்தலுக்கு வந்தாள். (1) இந்திரன் முருகனுக்குப் பாத பூசை செய்தான்' (2) பின்னர் இந்திரன், மணமகள் கையை முருகன் கையில் வைத்து, 'இவளை 'உனக்குத் தந்தேன்' என்று தாரைவார்த்தான்; முருகன் ஏற்றான். (3) பிறகு நான்முகன் தன் கருத்தினால் ஆக்கிக் கரத்தினால் அளித்த **மங்கல நாணை** முருகன் தெய்வயானைக்கு அணிந்தான் என்று ஒரு செய்யுள் கூறுகின்றன.

"செங்கம லத்திறை சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்ட
**மங்கல நாணை** மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கோர் நறுந்தொடை சூழ்ந்தான்."
(செ 247)

திருமணத்தின்போது மங்கல நாண் கட்டப்பட்டதாக வந்துள்ள முதற்குறிப்பு இதுதான். இம்மங்கல

நாண் நான்முகன் தன் மனத்தால் படைத்தது. இந்நூலாசிரியர் சிவபெருமான் திருமணத்திலும், வள்ளியம்மை திருமணத்திலும் மங்கல நாண் குறிப்பிடவில்லை. அங்ஙனமிருக்க, அதே ஆசிரியர் தெய்வயானையம்மை திருமணத்தில் மட்டும் மங்கல நாண் கூறுதல் வியப்பாக இருக்கிறது அன்றோ? இவர் பாடியுள்ள நூல் முறைப்படி பார்த்தால், தெய்வயானையம்மை திருமணம் முதலில் நடைபெற்றதாகவும், பின்னரே வள்ளியம்மை திருமணம் நடைபெற்றதாகவும் அறிகின்றோம். முதல் திருமணத்தில் மங்கல நாணைக் குறித்த ஆசிரியர், இரண்டாம் திருமணத்தில் குறியாதது வியப்பும் திகைப்பும் தருகின்றது. வள்ளியம்மை குறவர் மகள் ஆதலாலும், தமிழச்சிக்கு மங்கல நாண் கூறுவது மரபன்று என்ற கருத்தாலும் சிவாச்சாரியார் கூருது விட்டனரோ? இந்நூலில் வந்துள்ள மூன்று திருமணங்களில் இரண்டில் மங்கல நாணைக் குறியாத ஆசிரியர், மூன்ரும் திருமணத்தில் மட்டும் அதனைக் குறித்திருப்பாரோ? என்னும் ஐயம் தோன்றுகிறது. மங்கலநாணைக் குறிக்கும் இச்செய்யுள் பிற்பட்டவர்சேர்த்த இடைச் செருகலாக இருக்கலாமோ? என்று எண்ணவும் தூண்டுகிறது. உண்மை எதுவாயினும் ஆகுக! சிவபெருமானுகிய தந்தை தான் செய்து கொண்ட திருமணத்தில் உமாதேவிக்கு மங்கல நாண் கட்டியதாக ஆசிரியர் கூறவில்லை. அவ்வாசிரியரே சிவபெருமான் மகனுகிய முருகன் வள்ளியம்மையை மணந்தபோது மங்கல நாணை மணமகள் கழுத்தில் கட்டியதாகக் கூறவில்லை. உமாதேவி மலையரசன் மகள்; வள்ளியம்மையும் குறிஞ்சிநில

மகள் ; இருவரும் குறிஞ்சிநில மகளிர் ஆதலின், மங்கல நாண் அணியும் வழக்கம் அற்றவர் என்று ஆசிரியர் கருதினர் போலும்! இந்திரன் மகளாகிய தெய்வயானைக்கு மட்டும் மங்கல நாண் குறிப்பிடு தலையும், அது நான்முகன் மனத்திஞல் செய்தது என்பதையும் நோக்க, மங்கல நாண் அணிதல் தேவர்களிடை இத்திருமணத்தின் போதுதான் தோற்றமெடுத்தது போலும்! சுருங்கக்கூறின், இச்செய்யுள் சிவாச்சாரியார் பாடியதா? இடைச் செருகலா ? தான் தெய்வயானைக்கு மங்கல நாண் பூட்டியது உண்மைதானு? – என்பவற்றை அவ்வம் மையை மணந்துகொண்ட முருகன்தான் கூறுதல் வேண்டும்.

கந்தபுராணம் திருக்குற்ருலப் படலத்தில் அகத் தியன், சிவபெருமான் எழுந்தருளிய குற்ருலவள நகரை அடைந்த செய்தி ஒரு பாடலில் குறிப்பிடப் படுகிறது. அச்செய்யுளில், சிவபெருமான், திருப் பாற்கடலைக் கடைந்த காலத்தில் தோன்றிய ஆல காலம் என்னும் கொடிய நஞ்சினை உண்டு பிரமன் முதலான தேவர்தம் மனைவிமார்களின் பொற்ருலி யைக் காப்பாற்றினன் என்பது வருகிறது. அச் செய்யுள் :

செற்ருல முயிரனைத்து முண்டிடவே
  நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள்
பற்ருலங் கதுநுகர்ந்து நான்முகனே
  முதலோர்தம் பாவை மார்கள்
பொற்ருலி தனையளித்தோன் புகழ்போற்றி
  முகின்மேனிப் புத்தேள் வைகும்
குற்ருல மாவதொரு வளநகரைக்
  குறுமுனிவன் குறுகி னுைல். (பாடல், 1.)

திருப்பாற்கடல் கடையப்பட்டது எக்காலத்தில் என்பது வரலாற்ருராய்ச்சிக்கு எட்டாத ஒன்ருகும். இந்நிலையில், சங்க காலத்திற்கு மிக முற்பட்ட தென்று ஐயத்திற்கு இடமின்றிக் கருதப்படும் நிகழ்ச்சியில் தம்கால வழக்கிலிருந்த பொற்ருலியைப் பிரமன் முதலிய தேவர்களின் மனைவிமார்க்கும் கச்சியப்ப சிவாச்சாரியார் கட்டி மகிழ்கின்ருர் என்பது கவனிக்கத்தக்கது.

### கலிங்கத்துப்பரணி

(1) கி பி. 11-ஆம் நூற்ருண்டில், முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் சயங்கொண்டாரால் பாடப்பெற்ற கலிங்கத்துப்பரணியில் 'கைப் பிடித்தலே' (பாணிக்கிரகணம்) திருமணத்தின் சிறப்புச் சடங்காக ஆளப்பட்டுள்ளமை பின்வரும் செய்யுளால் உணரலாம்:

"அருமறையி னெறிகாட்ட அயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கும்
உரிமையினிற் கைப்பிடித்த உபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே" (தாழிசை. 2)

(2) சிறுவர் அணியும் ஐம்படைத்தாலி இரண்டு இடங்களில் (தாழிசை - 149, 240) வந்துள்ளது. இத் தாலி இன்னது என்பது முதற் கட்டுரையிலேயே விளக்கப்பட்டது.

### தக்கயாகப்பரணி

இந்நூல் கி. பி. 12-ஆம் நூற்ருண்டில் செய்யப் பட்டது; விக்கிரம சோழன், இரண்டாம் குலோத் துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவர் காலத்திலும் வர்ழ்ந்த ஒட்டக்கூத்தர்

பாடினது. வீரபத்திரர் ஏவிய பூதங்கள் தக்கன் யாகத்தை அழித்துச் செய்த ஆரவாரங்கள் பல; அவற்றை விரித்துக் கூறும் தாழிசைகள் பல. அவற்றுள் ஒன்று, இப்பூதங்கள் தக்கன் பெண் மக்களின் தாலிகளை வாரிவிட்டன என்னும் செய்தியைக் குறிக்கின்றது:

"மைய லான்மிகுந் தக்கன் மக்களாம்
தைய லாரையும் தாலி வாரியே."

(தாழிசை-503)

இத் தாலி தக்கன் மகளிருடைய மணத்தாலியா, அல்லது அக நானூற்று 7-ஆம் செய்யுளில் கண்டவாறு சிறுவயதில் அணிந்துகொண்ட தாலியா என்பது இது பாடப்பெற்ற இடங்கொண்டு உறுதியாகக் கூறமுடியவில்லை. இதற்கு உரை கண்ட உரையாசிரியரும் இத் தாலி பற்றிய விளக்கம் தரவில்லை. இதனைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களும் இச்சொல்பற்றி ஒன்றும் குறிக்கவில்லை.

மேலும், தக்கன் மனித இனத்தைத் தோற்றுவித்த பிரஜாபதிகளுள் ஒருவன். அவன் எத்துணை ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தான் என்பதை வரலாறு கொண்டு கூறுதல் இயலாது. இங்ஙனம் மிகப் பழைய காலத்தில் வாழ்ந்தவனாக வடமொழி நூல் கொண்டு உணரப்படும் தக்கனைப் பற்றிய வரலாற்றில், அவன் மகளிர் 'தாலி' அணிந்திருந்தனர் என்று கூத்தர் பாடியிருத்தல், தம் கால வழக்கை நினைவிற்கொண்டே ஆகும் என்பதை வரலாற்று உணர்ச்சியுடைய அறிஞர் எளிதில் அறியக்கூடும்.

## தமிழர் திருமணத்தில் தாலி

## 5. இடைக்காலம் - III

[கி. பி. 300 - 1600]

### பெரிய புராணத்தில்

இது கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் முற்பாதியில் செய்யப்பட்டது. இதன் ஆசிரியர் சோழப் பேரரசின் முதலமைச்சரும் பல்கலைப் புலவரும் வரலாற்றுணர்ச்சி மிக்கவரும் பரம வைதிகருமான *சேக்கிழார்* ஆவர். இவர் கி. பி. 12-ஆம் நூற்றுண்டினராயினும், இவரால் பெரிய புராணத்தில் பாடப்பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களும் வாழ்ந்த காலம் ஏறத்தாழக் கி. பி. 400-900 எனக் கொள்ளலாம். எனவே, தமக்குப் பல நூற்றுண்டுகட்கு முற்பட்ட நாயன்மார் வரலாறுகளை இவ்வாசிரியர் பாடினுர் என்பது நினைவில் இருத்தத் தக்கது. அப்பர் காலத்துப் பல்லவ மன்னன், சிறுத்தொண்டர் காலத்து வாதாபிப் படையெடுப்பு, நெடுமாறன் - சாளுக்கியன் போர் முதலிய வரலாற்றுச் சிறப்புடைய செய்திகளையெல்லாம் வரலாற்றுணர்ச்சியோடு பாடிய இப்புலவர் பெருமான், தாலி பற்றிய செய்தியில் மட்டும் தவறி விட்டனர் என்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டும் நிலையில் இருக்கின்ருேம்.

சுந்தரர் திருமணங்கள் இரண்டும், சம்பந்தர் திருமணம் ஒன்றும் இப் புராணத்தில் கூறப்பட்

டுள்ளன. இவற்றுள், குருக்கள் மரபில் வந்த சுந்தரர் திருமணங்கள் இரண்டும் காதல் திருமணங்கள் ; ஸ்மார்த்த பிராமணராகிய சம்மந்தர் திருமணம் வைதிக முறையில் அமைந்தது. சேக்கிழார் இத் திருமணத்தைப் பல பாக்களில் விரித்துள்ளார். பெண்ணின் தந்தையார் சம்பந்தரின் பாதங்களை விளக்குதல், தாரை வார்த்துத் தருதல், மறை ஒலி பொங்குதல், மங்கல வாழ்த்து நடைபெறல், பொரி அட்டுதல், சம்பந்தர் மணமகளைக் கைப்பிடித்துத் தீவலம் வருதல் என்பனவே (செ. 1233 - 1242) குறிக்கப்பட்டுள்ளன. எனவே, சம்பந்தர் திருமணத்திலும் கைப்பிடித்தலே (பாணிக்கிரகணம்) சிறப்புடைச் சடங்காக இருந்தமை தெளிவாதல் காண்க.

## மங்கலநூல்-தாலி

குங்குலியக் கலய நாயனர் புராணத்தில், பொருள் இன்மையால் அவர் மனைவியார் தமது மங்கல நூலில் கோக்கப்பட்டிருந்த தாலியைக் கழற்றிக் கணவரிடம் கொடுத்து நெல்வாங்கி வரச் சொன்னர் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

> " கோதில் மங்கல நூல் தாலி
> கொடுத்து 'நெற்கொள்ளும்' என்ருர்." (செ. 9.)

இவ்வரியில் 'மங்கல நூல்' என வந்திருத்தல் கவனிக்கத்தக்கது. இவ்வரிக்கு உரை விளக்கம் செய்யப்போந்த சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,

" மங்கலநூல் - மங்கலத்துடன் வருவதாலும், சுமங்கலத்துவமாகிய தன்மை காட்டும் அடையாள

மாதலானும், இவ்வாறு கூறியபடியாம். மணகளின் கழுத்தில் மணமகன் மங்கல நூல் அணிவதுவே மணச்சடங்குகளில் இன்றியமையாப் பகுதி. நூலு டன் *தாலியும் பிறவும் கோத்தணியும் பிற்கால வழக்கு* நூல் வழக்குக்கு மாறுபட்டதென்ப ................ மங்கல நூல் மட்டுமே சுமங்கலிகட்கு இன்றியமை யாத தென்பதும், பெருங்கேடு வருங்கால் மங்கல நூலிற் கோத்த பொற்ருலியையும் வேறு பிரித்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாமென்பதும் அறநூல் விதியாமாதலின், இங்கு மனைவியர் மங்கல நூலைமட்டும் அணிந்துகொண்டு, தாலியை நூலி னின்றும் பிரித்து எடுத்து நெற்கொள்ளக் கொடுத் தனர். 'கோதில் மங்கலநூல்' என்ற இதனுல், இச்செயலால் மங்கலத்துக்கிழுக்கின்று என்பதும் குறிப்பு. சுமங்கலித்துவத்தை நூலே குறிப்பதாம் என்பது, அம்பொன்மணி நூல் தாங்கா •தனைத் துயிர்க்கும் அருள்தாங்கி (திருநா. புரா. 34) என்ற தனுலும் அறிக," என்று கூறியிருத்தல் கவனிக் கத்தக்கது. இந்த மேற்கோளினையும், விளக்கத் தினையும் காண, சேக்கிழார் காலமாகிய கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் முற்பாதியில், தமிழர் திரும ணத்தின்போது மங்கலநூல் கட்டுதல் வழக்கிலி லிருந்தது என்பதும், அந்நூலில் தாலி என்னும் ஓர் அணி கோக்கப்பட்டிருந்தது என்பதும், ஐயத் திற்குச் சிறிதும் இடமின்றித் தெளிவாகத் தெரி யும் உண்மைகளாகும். கந்தபுராணத்திற் கூறிய படி, நான்முகன் மனத்தால் மங்கல நாணைப் படைத் தது முதல், அந் நான்முகனுல் படைக்கப்பட்ட மக்களும் மங்கலநூல் அணிதலை மேற்கொண்டனர் போலும்! சுருங்கக் கூறின், கந்த புராணத்தில்

மங்கல நாண் வெளிப்படையாகக் கூறப்பட்டிருத்தலும், அதனை அடுத்துச் செய்யப்பட்ட பெரிய புராணத்தில் மங்கல நூலோடு தாலியும் சேர்த்துக் கூறப்பட்டிருத்தலும் மங்கல நாண் வளர்ச்சியை நன்கு உணர்த்துவனவாம்.

## சேக்கிழார் செய்த 'கால வழு'

சேக்கிழார் கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆனால் அவரால் பாடப்பட்ட குங்குலியக்கலய நாயனார் அப்பர்-சம்பந்தர் காலத்தவர்; அஃதாவது, கி. பி. 7-ஆம் நூற்றாண்டினர். இதனால் இந்நாயனார் சேக்கிழாருக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவர் என்பது தெளிவு. கி. பி. 6 முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையில் தோன்றிய தமிழ் நூல்களில் மணமகன் திருமணத்தின்போது மணமகளுக்கு மங்கல நாண் பூட்டியதாகவோ அல்லது தாலி அணிவித்ததாகவோ யாண்டும் கூறப்படவில்லை என்பது முன்னரே எடுத்துக்காட்டப்பட்டது. எனவே, கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குங்குலியக்கலயர் தமது மனைவிக்குத் திருமணத்தின்போது மங்கல நாண் பூட்டினார், அதில் தாலி இருந்தது என்று, அவருக்கு ஐந்நூறு ஆண்டுகள் கழித்து வந்த சேக்கிழார் கூறுதல், நாயனார் கால வழக்கிற்கு மாறுபட்டதாகும். அங்ஙனமே இந்நாயனாரோடு வாழ்ந்தவர் என்று அவரே (சேக்கிழாரே) கூறும் அப்பரது தமக்கையாரும் 'நூல் தாங்காது' வாழ்ந்தனர் என்று கூறியிருத்தலும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வழக்கிற்கு மாறுபட்டதாகும். இங்ஙனம் பெரும் புலவராகிய சேக்கிழார் தம் கால வழக்கை முன்னோர் வாழ்வில்

ஏற்றிக் கூறியிருத்தல், 'யானைக்கும் அடி சறுக்கும்' என்னும் பழமொழிப்படி நேர்ந்த 'காலவழு'வே யாகும். அப்பர், சம்பந்தர், குங்குலியக்கலையர் மூவரும் ஒருகாலத்தவர். சம்பந்தர் திருமணத்தை மிகவிரிவாகக்கூறிய சேக்கிழார் அத்திருமணத்தில் மங்கல நூலைக் குறிக்கவில்லை. சம்பந்தர் பிராமணர். குங்குலியக்கலையரும் பிராமணர். ஒரு பிராமண நாயனர் திருமணத்தில் மங்கல நூல் கூருத சேக்கிழார், அதே காலத்தில் மற்ருெரு பிராமண நாயனுரின் மனைவியார் மங்கல நூலும் தாலியும் தரித்திருந்தார் என்று கூறுதல் பொருத்தமுடைய தாகுமா? அக்கால வழக்கிற்கு ஏற்றதாக இருக்க முடியுமா? எனவே, இது பெரும்புலவர் ஒரோவழித் தவறிச் செய்யும் 'காலவழு' என்று கொள்ளுதலே பொருத்தமாகும்.

கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் முற் பகுதியில் வாழ்ந்த இராஜராஜ சோழன் காலத்தவரான நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திரு வந்தாதியில், 'குங்குலியக்கலயர் தமது மனைவியின் தாலியைக் கொடுத்துக் குங்குலியம் வாங்கினுர்' என்று கூறியுள்ளார். சேக்கிழாருக்கு முற்பட வாழ்ந்த இந்நம்பி, 'காதலிதாலி' என்று குறித் தனரே தவிர, சேக்கிழார் கூறுவதுபோல 'மங்கல நூல் தாலி' என்று குறிக்கவில்லை என்பது இங்குக் கூர்ந்து கவனிக்கத்தக்கது. அத்தாலி மணத்தின் போது கட்டப்பட்டதா? அல்லது அகநானூற்று ஏழாம் செய்யுளில் கண்டபடி மணத்திற்கு முன்னரே அம்மனைவியார் அணிந்துகொண்டிருந்த தாலியா என்பது நம்பியின் வாக்கைக்கொண்டு துணிந்து கூற இயலாது என்பதும் இங்கு அறியத்தகும்.

உண்மை எதுவாயினும், சேக்கிழார் குங்குலியக் கலயர் புராணத்திலும், திருநாவுக்கரசர் புராணத்திலும் 'மங்கல நூல்' என்றும், 'தாலி' என்றும் கூறியிருத்தல், (மணத்தின்போது கட்டப்பட்டதாலி எனப் பொருள்படின்), அவர் செய்த **காலவழு** (Anachronism) என்று கூறுதலே ஏற்புடையதாகும்.

**கம்ப ராமாயணத்தில்**

கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் பாடிய இராமன் வரலாறு நிகழ்ந்த காலம் ஏறத்தாழக் கி. மு. 600-க்கு முற்பட்ட தென்பது அறிஞர் கருத்து. கம்பர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. எனவே, கம்பர் இராமாயண நிகழ்ச்சிக்குக் குறைந்தது 1800-ஆண்டுகள் பிற்பட்டவராவர். இப் பெரும் புலவர், இராமன் சீதையை மணந்து கொண்டதை ஒன்பது செய்யுட்களில் (கடிமணப் படலம், செ, 86-94) கூறியுள்ளார். அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள்-1. சீதையும் இராமனும் மணத்தவிசில் ஏறியிருத்தல், 2. சனகன் சீதையை இராமனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தல், 3. அப்பொழுது வாழ்த்தொலி முதலியன ஒலித்தல், 4. தேவர் முதலியோர் பூமாரி முதலியன பொழிதல், 5. இராமன் ஓமஞ் செய்து சீதையைப் பாணிக்கிரகணஞ் செய்தல், 6. சீதை இராமனுடன் தீவலம் வருதல், 7. சீதையும் இராமனும் தீவலம் வந்தபின் அம்மி மிதித்து அருந்ததி காணுதல், 8. இராமன் பெரியோரை வணங்கிச் சீதையோடு தன் மாளிகை புகுதல், 9. பலவகை மங்கல வொலி எழுதல்.

கல்வியிற் பெரியவராகிய கம்பர் இராம காதையை 10,500 பாடல்களில் விரிவாகப் பாடியவர்

அங்ஙனமிருந்தும் அவர் சீதையின் திருமணத்தில் மங்கல நூலேயோ தாலியையோ குறியாமை இட நெருக்கம் கருதி அன்று என்பது தெளிவாகும். ஆகவே, இராமன் வாழ்ந்த இதிகாச காலத்தில் திருமணத்தின்போது மங்கல நாண் கட்டப்படா மையே காரணமாகக்கொண்டு, வான்மீகி இராமா யணத்திலும் அஃது இன்மையால், அதனைச் சீதை யின் திருமணத்திற் கூருது விடுவித்தார் என்று கோடலே பொருந்தும், ஆயினும், 'யானைக்கும் அடி சறுக்கும்' என்ற முதுமொழிப்படி, (Homer sometimes Nods): கிரேக்கப் பெரும்புலவரான ஹோமரும் சில சமயங்களில் தலையாட்டங்கொள்வர் என்னும் கிரேக்க முதுமொழிப்படி), பல இடங்களில் மங்கல நாணைக் குறிப்பிட்டுள்ளார்.

## கழுத்து நாண் முதலியன

1. கைகேயியைச் சபிக்க நின்ற தசரதன் கூறி யதாகக் கீழ்வரும் அடியைக் கம்பநாடர் பாடி யுள்ளார்.

> "நின் கழுத்தின் நாண் உன்மகற்குக் காப்பின்
> நாணும் என்ருன்" (நகர்நீங்குபடலம், 49.)

இங்குக் 'கழுத்து நாண்' என்பது மங்கல நூலைக் குறித்தது. "நான் இறந்த பின்பு நீ அறுக்கும் மங்கல நூல் உன் மகனுக்குக் காப்புநாண் ஆகுக" என்பது இதன் பொருள், இராமன் திருமணத்தில் கழுத்து நாண் கூருத கம்பர், அவன் தந்தை மணந்த கைகேயிக்குக் கழுத்து நாண் இருந்ததாகக் கூறுதல் விந்தையன்ருே? மைந்தன் காலத்தில் இல்லாத மங்கல நாண். அவன் தந்தை காலத்தில்

இருந்தது என்பது எங்ஙனம் பொருந்தும்? ஆகவே, பெரும் புலவரான சேக்கிழார் போலவே, இப்புலவர் பெருமானும் கால உணர்ச்சியைமறந்து, ஒரோவழித் தம் காலவழக்கை ஏற்றிக் கூறினுர் என்று கூறுதலே பொருத்தமுடையது, இவ்வாறு செய்தல் 'கால வழு' (Anachronism) என்பது முன்பே கூறப்பட்டதன்றே?

2. மேலும், சுந்தர காண்டத்தின் காட்சிப் படலத்தில் கம்பர் 'மங்கலத்தாலி' என்னும் சொல்லை எடுத்தாள்கிருர், திரிசடை தான் கண்ட கனவில் தோன்றிய தீய நிமித்தங்களைச் சீதைக்குக் கூறினுள். இராக்கத மகளிர் கழுத்திலணிந்துள்ள மங்கலத் தாலிகள், பற்றியிழுப்பார் எவரும் இல்லாமலே, அம் மகளிர் கொங்கைகளின் மேல் அற்று விழுந்தன. இதனை ஓர் உற்பாதமாகத் திரிசடை கூறிய செய்யுள் வருமாறு :

"மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்கினர் எவரு மன்றியே
கொங்கையின் வீழ்ந்தன குறித்த வாற்றினல்
இங்கிதன் அற்புதம் இன்னும் கேட்டியால்"
(காட்சி. செ, 48)

கல்வியிற் சிறந்த கம்பர் பெருமான் 'மங்கலத்தாலி' என்று குறித்திருத்தல் கூர்ந்து கவனிக்கத்தக்கது. சங்க காலம் முதல் தம் காலம் வரையிலும் வாழ்ந்த தமிழ் மாதர், முன்பு கூறப்பட்ட புலிப்பல் தாலி, பின்தாலி, மாணிக்கத்தாலி முதலிய தாலிகளை அவரவர் தகுதிக் கேற்ப எக்காலத்தும் கழுத்தில் அணிந்து வந்தனர் என்பது நன்கு அறிந்ததே, அவற்றினின்றும் வேறுபடுத்திக்காட்ட - திருமணத்

தின் போது தம் காலத்தில் கட்டப்பட்ட சிறப்பு அணி என்பதைத் தெளிவுறக்காட்ட - 'மங்கலத் தாலி' என்று கூறினர் எனக் கொள்ளுதல் பொருந்தும். முன் கூறப்பெற்ற பலவகைத் தாலிகள் 'மங்கலம்' என்னும் அடைமொழி பெருது வந்திருத்தலும் நோக்கத்தக்கது.

3. இக்கம்பரே சுந்தர காண்டத்தில் பிணிவீட்டு படலத்தில் 'மங்கல நாண்' என்னும் பொருளில் 'திரு' என்னும் சொல்லை ஆண்டுள்ளார். அநுமனல் கொல்லப்பட்ட அரக்கர் மனைவியர், "மலைபோன்ற மிக்க வலிமையுடைய எம் உயிர் போன்ற அன்புடைய கணவரை இதுவரையிலும் பிரிந்திலோம்; இன்றுமுதல் பிரிவதானேம்; இனி அப்பிரிவுக்காக ஏங்காமல் அப்பிரிவை விளைத்தவனை இவன் அழியும்படி இவன் தலைமீது ஏறி இருந்தே திருவினை வாங்குவோம்," என்று சொல்லிப் புலம்பினர்,

"ஓங்கலம் பெருவலி உயிரின் அன்பரை
நீங்கலம் இன்ருெடு நீங்கி ஞம்இனி
ஏங்கலம் இவன்சிரத் திருந்த லால்திரு
வாங்கலம் என்றழு மாத ரார்பலர்." (செய். 5)

இராவணன் வேதங்களில் வல்லவன் ஆதலாலும், சப்தரிஷிகளில் ஒருவரான புலத்திய ரிஷியின் மரபினன் ஆதலாலும், அவனல் ஆளப்பட்ட நாட்டில் வேதத்தில் கூறப்படாததும், வசிட்டன் போன்ற ரிஷிகளால் குறிக்கப்படாததுமான மங்கல நாண் வழக்கில் இருந்தது என்று கொள்ளுதல் பொருத்தமற்றது.

ஆயினும், கம்ப ராமாயணத்திற்கு முற்பட்ட எந்த நூலிலும் கூறப்படாத மங்கல நாணைக் குறிக்

கும் 'திரு' என்னும் சொல்லைக் கம்பர் மட்டும் முதன் முதலில் எடுத்தாளக் காரணம் யாது? சோழர் காலத்தில் இச்சொல் மங்கல நாணைக் குறித்து வழங்கியது என்பது கல்வெட்டால் அறியக் கிடக்கிறது. ......... "திரு ஒன்று உள்படப் பட்டைக் காறை (S. I. I. 2, 157) என்பதனுல் அறியப்படும். எனவே, கந்தபுராணத்தில் கூறப் படும் 'மங்கல நாண்' என்னும் வழக்கும், சேக்கிழார் காலத்தில் 'மங்கல நூல்' என்னும் வழக்கும், கம்பர் காலத்தில் 'கழுத்து நாண்,' 'திரு' என்னும் வழக்குகளும் மங்கலக் கயிற்றைக் குறிக்கவே யெழுந் தன என்பது தெரிகின்றது. மங்கல நாணைக் கட்டுதல் என்னும் பொருளில் 'திருப்பூட்டுதல்' என்று கூறுதல் இன்னும் தமிழரிடை வழக்கில் இருந்து வருவது கவனிக்கத்தக்கது.

## நம்பி அகப்பொருள்

இவ்விலக்கண நூல் கி. பி. 12-ஆம் நூற்ருண் டின் பிற்பாதியில் செய்யப்பட்டது என்பது அறிஞர் கருத்து. இதன்கண்,

"தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினும் கிழவோன்
அந்தணர் சான்ருேர் முன்னிட் டருங்கலம்
தந்து வரைதல் தகுதி யென்ப" (சூ. 198)

என்னும் சூத்திரம் காணப்படுகின்றது. தொல் காப்பிய உரையாசிரியர்களும் பிறநூல் உரையாசி ரியர்களும் வாழ்ந்த காலம் கி. பி. 12-முதல் 14வரை என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இஃது உண்மை யாயின், புறநானூற்று உரையாசிரியர் 'இழை'

என்பதற்கு 'அருங்கலம்' என்று, இறையனார் அகப்பொருள் உரைகொண்டு அல்லது இந்நம்பியகப்பொருள் சூத்திரம் கொண்டு உரை கூறியிருக்கலாம் என்று கொள்ளுதல் பொருந்தும். இப்பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலும் நடைபெற்றனவாக நூல்களில் காணப்படும் திருமணங்களில் 'மங்கல நாண்' கட்டப்பட்டது அல்லது தாலிகோத்த மங்கல நாண் அணிவிக்கப்பட்டது என்பது வாராமையாலும், "அருங்கலம் தந்து வரைதல் தகுதி யென்ப" என்று நம்பியகப்பொருள் கூறுதலாலும், நம்பியின் காலம்வரையிலும் 'அருங்கலம்' என்பதே மணத்திற்குரிய சிறப்பு நகையாக இருந்திருக்கலாம் என்று கொள்ளுதல் தவறாகாது. அவ்வருங்கலம் புறநானூற்றில் கண்ட 'தொடி' யாக இருக்கலாம்; கல் இழைத்துச் செய்யப்பட்ட 'இழை' என்னும் சிறப்பணியாக இருக்கலாம்; அல்லது வேறு எவ்வகை அணியாகவும் இருக்கலாம்.

தமிழர் இனங்களுள் வல்லம்பர் இனம் என்பது ஒன்று. இவ்வல்லம்பர் திருமணத்தில் மணமகன் உடன் பிறந்தவள் திருமணத்தன்று மணமகள் வீட்டிற்குச் சென்று, அவள் அதுவரையிலும் கழுத்தில் அணிந்திருந்த கறுப்பு மணிகளையும் பொன்மணிகளையும் கொண்ட கயிற்றினை நீக்கி விட்டுத் தான் மண அணியாகக் கொண்டுசென்ற தாலியோடு கூடிய மங்கல நாணை அவள் கழுத்தில் கட்டுதல் இன்றும் வழக்கமாக இருக்கின்றது. இதனை உளங்கொண்டு, சிந்தாமணியில் கூறப்படும் கோவிந்தையார் திருமணநாளில் அதற்கு முன் அவள் அணிந்திருந்த பசும்பொன் தோட்டையும் மணிகள் பதித்த குழையையும் நீக்கிவிட்டு அவளுக்கு

*மங்கலக் கடிப்பு* (கடிப்பு-காதணி) அணிவித்தனர் என்னும் செய்தியை நோக்க, கோவிந்தையார் திருமணத்தில் இம்மங்கலக் கடிப்பே ‘அருங்கல மாக’க் கருதப்பட்டதாகலாம் என்று கொள்ளுதல் தவருகாது. அக்கடிப்பு ‘மங்கலம்’ என்னும் அடை யோடு வந்திருத்தலும் இக்கருத்தை அரண் செய்வ தாகக் கொள்ளலாம்.

இராவணனுல் தூக்கிச்செல்லப்பட்ட சீதை தன் நகைகளைக் கழற்றி வானர வீரர்களுக்கு முன் எறிந்துவிட்டாள். ஆனல் சூளாமணி ஒன்றை மட்டும் அவள் எவருக்கும் தெரியாமல் வைத்துக் கொண்டாள். அதனையே இராமன் மகிழும்படி அநுமன் மூலமாக அனுப்பினுள் என்பதை நோக்க, அவ்வணியை அவள் ‘அருங்கலமாக’க் கருதினுள் என்று கொள்ளுதல் குற்றமாகாது. இது போன்ற சிறப்பு அணியே அருங்கலம் என்பது. அது ஈகை அரியது.

**தஞ்சை வாணன் கோவை**

இச்செய்யுள் நூல் கி.பி. 13-ஆம் நூற்றுண்டில் பொய்யாமொழிப் புலவரால் செய்யப்பட்டது என்று அறிஞர் கருதுகின்றனர். இந்நூற் செய்யுட்கள், நம்பியகப்பொருள் இலக்கண நூல் துறைகளுக்கு ஏற்றவையாக அமைந்திருத்தலால், அவ்விலக் கணத்திலேயே இடம் பெற்றுள்ளன. ‘தன்மனை வரைதல்’ என்னும் தலைப்பில், தோழி, ‘நீ எம் தலை வியைக் கூடி உன் சுற்றத்தார் முன்னர் நீ பொன் புனைந்தது யான் முன்னரே அறிந்து அன்னைக்குக்

கூறினேன்' என்று மணமகளை நோக்கிக் கூறினாள் என்னும் செய்தி காணப்படுகிறது.

> " ... ... ... ... .... ... ... எங்கள்
> பொன்னைப் புணர்ந்துநுங் கேள்முன்னர்
> நீபொன் புனைந்ததுவே."

இச்செய்யுளடியில் வந்துள்ள 'பொன்' என்னும் சொல் மேற்கூறப்பட்ட அருங்கல அணியைக் குறிக்கின்றதா? அல்லது பெய்யாமொழிப்புலவர் காலத்தில் வழக்கிற்கு வந்துவிட்ட மங்கல நாணைக் குறிக்கின்றதா? என்பதைத் திண்ணமாகக் கூறுதற்கில்லை. 'பொன்' என்னும் சொல் பண்டைய இலக்கியங்களில் மங்கல நாண் என்னும் பொருளில் ஆளப்படவில்லை. கம்பர் 'திரு' என்று மங்கல நாணைக் குறித்தவாறே, அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த பொய்யாமொழிப் புலவர் மங்கல நாணைக் குறிக்கவே 'பொன்' என்னும் சொல்லை வழங்கினரோ? உண்மை யாதெனப் புலப்படவில்லை. ஆயினும், கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றி, இக் கோவைக்கு உரையெழுதிய சொக்கப்ப நாவலர் என்பவர் இவ்விடத்தில், 'பொன் புனைந்தது-திருப் பூட்டியது,' என்று கூறியுள்ளார். கம்பர் 'திரு' என்று சொன்னதும், 18-ஆம் நூற்றாண்டினரான இவ்வுரையாசிரியர் 'திருப்பூட்டியது' என்று சொன்னதும், இன்றைய வழக்கில் 'திருப்பூட்டுதல்' என்பது மங்கல நாண் கட்டுதல் என்னும் பொருளில் வழங்கப்படுதலும் நோக்க, 'திரு' என்னும் சொல் கம்பர் காலமுதல் இன்றளவும் மங்கல நாணுக்குப் பெயராக வழங்கி வருகின்றது என்னும் உண்மையை அறியலாம். ஆனால், மேலே சொல்லப் பட்ட 'பொன்' என்பது மங்கல நாண்தான் என்று

அறுதியிட்டுக் கூறமுடியாது என்பது கவனிக்கத் தக்கது.

நம்பியகப்பொருளில் 'வரைதல்' என்னும் தலைப்பில் மணமுடித்த செய்தியைக் கூறுமிடத்தில், 'மணமகன் திருமாலை ஒத்தான்; மணமகள் திருமகளை ஒத்தாள்' என்று மணமக்களைப் பாராட்டும் முறையில் ஒரு செய்யுள் அமைந்துள்ளது. அதனடியில் மேற்சொன்ன கோவை உரையாசிரியர், "உடன்போய்த் தன் ஊரின் கண்ணே வரைதலும், மீண்டு வந்து தன் மனையின் கண்ணே வரைதலும், அந்தணர் சான்றோர் முன்னிட்டுத் தாய், தமர் அறிய மணச் சடங்கின் முறையே முடியாமையால், அவை இரண்டும் மணமாகா; அஃது என்னை எனின், உலகியலில் தாய் தமர் அறியாது, மணச்சடங்கும் இன்றி, ஒருவன் உரிமை கருதித் தாலி கட்டும் மணம், 'மணம்' என்று உலகின்கண் உள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டும் மணச்சடங்குடனே மணமுடிப்பர்; ஆதலால் அந்தணர் முதலாயினரை முன்னிட்டு அவன் மனையில் மணச்சடங்குடனே முடித்தலின் இதுவே மணமாயினவாறு உணர்க," என்று கூறியுள்ளார். இவ்வுரையில், "உரிமை கருதித் தாலிகட்டும் மணம் மணமாகாது" என்ற வாக்கியத்தில் காணப்படும் 'தாலி கட்டுதல்' என்பது, முன்னர்க் கூறப்பெற்ற இலக்கியங்களிற் காணப்படாமையின், இவ்வுரையாசிரியர் காலத்தும் அவருக்குச் சிறிது முற்பட்டதுமான வழக்கமாக இருத்தல்கூடும் எனக்கருதுதல் பொருந்துவதாகும்.

## 6. இடைக் காலம் - IV

(கி. பி. 300 - 1600)

**நம்பி திருவிளையாடல்**

மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவியாடல்களை இரண்டு பெரும்புலவர் கள் இருவேறு நூற்றாண்டுகளில் பாடியுள்ளனர். பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர் பாடியது ஒன்று ; பரஞ்சோதி முனிவர் பாடியது மற்றொன்று. முன்னவர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வர் என்பதும், பின்னவர் கி. பி. 16-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்தவர் என்பதும் ஆராய்ச்சியாளர் கருத்து. இங்கு முதலில் 13-ஆம் நூற்றாண்டின ரான நம்பி திருவிளையாடலில் கூறப்பட்டுள்ள திரு மணச் செய்திகளைக் காண்போம் :

(1) மதுரையை ஆண்டுவந்த தடாதகைப் பிராட்டியாரைச் சிவபெருமான் மணந்துகொண்ட தைக்கூறும் 'மணஞ் செய்த திருவிளையாடலில்,' "வேதவிதிப்படி மன்றல் செய்தான்" (செ. 25) என்பது கூறப்பட்டுள்ளது; வேறு விவரங்களில்லை.

(2) விருத்த குமார பாலரான திருவிளையாட லில் பிராமணர் ஒருவர் தம் மகளை வேதவிதிப்படி மணம் செய்வித்துத் தாரைவார்த்துக் கொடுத்தார் என்பது (செ. 5-7) குறிக்கப்பட்டுள்ளது.

(3) பழியஞ்சின திருவிளையாடலில்,

"நன்னெறிக் கன்னி மாதை
நயந்துகைப் பிடியா முன்னம்" (செ. 23)

மணமகளை மாடு முட்டிக் கொன்றது என்பது கூறப்பட்டுள்ளது.

(4) மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலில்,

"மங்கல நாணி ழந்த
மடந்தையோர் மதிநி னைந்து" (செ. 6)

என்பது காணப்படுகிறது.

(5) சான்றழைத்த திருவிளையாடலில்,

"விரைவின் வந்தித் தையலையும்
கைப்பிடித்துத் தனங்கைக் கொள்ளே" (செ. 3)

என்பது கூறப்பட்டுள்ளது.

"கன்னி மாதினைக் கைப்பிடி என்றனர்" (செ. 20). இங்ஙனம் கைப்பிடித்து மணந்த இரண்டாம் மனைவிக்கும் முதல் மனைவிக்கும் மனவருத்தம் ஏற்பட்டது. அப்பொழுது முதல் மனைவி, ஞானசம்பந்தரால் பிரயாண வழியில் மணம் செய்விக்கப் பெற்ற இரண்டாம் மனைவியை நோக்கி, "ஆங்கது கேட்டு விரைவின்வந் தேடி யார்மக ளார்கொலென் கணவன் ஓங்கிய விதியில் கைப்பிடித் தவளோ ஒண்பொருள் பரத்தையர் அனைய" (செ. 28) என்று ஏசினாள்.

இங்குக் கூறப்பெற்ற திருமணங்கள் அனைத்திலும் வேத விதிப்படி பெண்ணின் தந்தை தன் மகளைத் தாரைவார்த்துக் கொடுத்தலும், மணமகன் மணமகளைக் கைப்பிடித்தலுமே (பாணிக்கிரகணம்) திருமணத்தின் அறிகுறியாகக் கூறப்பட்டுள்ளனவே தவிர, தாலி பற்றிய பேச்சு வாராமை

நோக்கத்தக்கது. மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலில், வணிகனது தங்கை "மங்கல நாண் இழந்த மடந்தை" என்ற தொடரால் குறிக்கப்படுகின்றாள். முன்னர்க் கூறிய திருமணங்களுள் ஒன்றிலேனும் குறிக்கப்படாத 'மங்கல நாண்' இங்கு ஒருத்திக்கு மட்டும் எவ்வாறு வந்தது என்பதை அறிஞர் சிந்தித்தல் வேண்டும். நூலாசிரியர், மங்கல நாண் திருமணத்தின்போது கட்டப்பட்ட காலத்தவர் (13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்). திருவிளையாடல் நிகழ்ச்சிகள் 13-ஆம் நூற்றாண்டிற்கு மிக முற்பட்டவை. இங்குக் குறிக்கப்பெற்ற சான்றழைத்த திருவிளையாடல் சம்பந்தர் வாழ்ந்த கி பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இவ்வாறு தமக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகளுள் ஒன்றான மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலில் வரும் வணிகப் பெண், 'மங்கல நாண் இழந்தவள்' என்று 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசிரியர் கூறுதல், முன்னர்க் கூறப்பெற்ற காலவழுவைச் (Anachronism) சாரும். நடுவுநிலை வழுவாத நல்லறிஞர் இவற்றைக் கூர்த்த மதியுடன் ஆராயின், உண்மை தெளிவாகும்.

## பரஞ்சோதி திருவிளையாடல்

பரஞ்சோதி முனிவர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டினர் என்பது அறிஞர் கருத்து. இவர் மதுரையில் தங்கியிருந்தே மிக விரிந்த முறையில் திருவிளையாடல் புராணத்தைப் பாடி அழியாப் புகழ் பெற்றவர். முன் சொன்ன நம்பி திருவிளையாடல் 1753 செய்யுட்களைக் கொண்டது. ஆயின், இப்பரஞ்சோதி திருவிளையாடல் 3363 செய்யுட்களைக் கொண்டது.

இதனுல் பரஞ்சோதியார் நம்பியைவிட விரிவாக நூல் பாடியுள்ளமை தெளிவாகும். இந்நூலில் மூன்று திருமணங்கள் குறிக்கப்பட்டுள்ளன. 1. அவற்றுள் முதல் திருமணம் சிவபெருமானுக்கும் தடாதகைப் பிராட்டியாருக்கும் நடைபெற்றது. இதனை ஆசிரியர் 14 பாடல்களில் (செ. 176-189) விளக்கியுள்ளார். இத் திருமணத்தில், (1) திருமால், மணமகனுன சிவபெருமானுக்குப் பாதபூசை செய்தல், (2) சிவபெருமான் கையில் தடாதகைப் பிராட்டியின் கையை வைத்துத் தாரை வார்த்தல், (3) முனிவர் மங்கையரும், நாமகளும், இலக்குமியும் மங்களம் பாடுதல், (4) பிரமன் வேள்வி செய்தல், (5) நான்மறைகள் ஆர்ப்ப, வாத்தியங்கள் ஒலிக்கச் சிவபெருமான் மங்கல நாணைக் கழுத்தில் பூட்டித் தடாதகைப் பிராட்டியாரின் திருக்கரங்களைப் பிடித்தல் என்பன கூறப்பட்டுள்ளன.

2. விருத்த குமார பாலரான படலத்தில் பிராமணர் ஒருவர் தம் மகளை மணமகனுக்குத் தாரை வார்த்துத் தருதல் (செ. 8–9) என்பது கூறப்பட்டுள்ளது.

3. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலத்தில், வணிகன் ஞானசம்பந்தரால் வழியில் மணம் செய்விக்கப்பெற்ற இரண்டாம் மனைவியை அவனது முதல் மனைவி கடிந்து பேசும்பொழுது

> "... ... ... ... ... ... யாவர் காணச்
> செந்தழல் சான்ருய் எங்கோன் கடிமணம் செய்துவந்த
> கொந்தவிழ் கோதைநீ ?" (செ. 37)

என்று கூறியதாக ஆசிரியர் குறிக்கின்ருர். இதி

லிருந்து எரி சாட்சியாகத் திருமணம் செய்தலே பண்டை வழக்கம் என்பது பெறப்படும்.

இம்மூன்று திருமணங்களுள் ஒன்று கடவுளேப் பற்றியது; ஏனைய இரண்டும் மனிதரைப் பற்றியவை. ***மனிதர் திருமணங்களில் மங்கல நாண் அல்லது தாலி பற்றிய பேச்சில்லே;*** சிவபெருமான் திருமணத்தில் மட்டும் மங்கலநாண் ஆசிரியரால் குறிக்கப்பெற்றது. இங்ஙனம் பரஞ்சோதி முனிவர் தம் கால வழக்கினை இறைவன் திருமணத்தில் ஏற்றிக் கூறியிருத்தல், முன்பு கூறப்பெற்ற காலவழுவின் பாற்படும். ஏறத்தாழக் கி. பி. 16 அல்லது 18-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த (கிழக்கிந்திய கம்பெனியார் காலத்தில் வான்கோழியைப் பற்றிப் பாடிய) ஔவையார், "*பொற்ருலி யோடெவையும் போம்*" என்று பாடியதனல், அவரது காலத்தில் பலரிடமேனும் மங்கல நாணிற் கோக்கப்பட்ட தாலியே வாழ்வரசித் தன்மையைக் குறிக்கலாயிற்று என்பது நன்கு தெளிவாகும்.

**காலவழு**

(1) திருமணத்தின்போது மங்கல நாண் அணியப்பட்டது என்பதை முதன் முதலில் தெளிவாக எடுத்துக் கூறியவர் கந்தபுராண ஆசிரியர். அவர் தாம் கூறிய மூன்று திருமணங்களுள் இரண்டில் மங்கல நாண் கூருது, ஒன்றில் மட்டும் மங்கல நாணைக் குறித்தமை நோக்கத் தக்கது. அத்திருமணமும் முருகன் செய்துகொண்ட திருமணம் என்பது நினைவில் இருத்தத்தக்கது.

2. சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டியதாகப் பரஞ்சோதி

முனிவர் பாடியுள்ளார். ஆனால் இதே செய்தியை இவருக்கு மூன்று நூற்றாண்டுகட்கு முன் பாடிய நம்பி கூறாது விட்டமை நோக்கத்தக்கது. மேற் கூறப்பெற்ற இரண்டு தெய்வங்களின் திருமணங் களில்தான் மங்கல நாண் கூறப்பெற்றதே தவிர, இப்பதினாறும் நூற்றாண்டு வரையில் நடைபெற்ற மனிதர் திருமணங்களில் — திருமண நிகழ்ச்சி களைப் புலவர் கூறியுள்ள இடங்களில்-யான் அறிந்த வரையில்-மங்கல நாண் பூட்டியதாகக் கூறாமை ஊன்றி நோக்கத்தக்கது.

(3) நாயன்மார் திருமணச் சடங்குகளில் மங்கல நாணைக் குறியாத சேக்கிழார், தனிப்பட்ட இரண்டு இடங்களில் 'மங்கல நூல் தாலி' என்றும், 'அம்பொன்மணி நூல் தாங்காது' என்றும் கூறி யுள்ளார். இவற்றில் வரும் மங்கலநூல் என்பதும் நூல் என்பதும் அவர்க்கு முற்பட்ட நம்பியாண்டார் நம்பி கூறாதன என்பதும் ஊன்றிநோக்கத்தக்கது. நோக்கவே, இவை சேக்கிழார் காலத்தனவாகும் என்பது பெறப்படும்.

(4) இங்ஙனமே இராமாயணத்தில் சீதையின் திருமணத்தில் மங்கல நாணைக் குறியாத கம்பர் பெருமான், அவள் மாமியாரான கைகேயிக்குக் கழுத்து நாணைக் கூறுதலும், அதே காலத்தில் வாழ்ந்த அரக்க மாதர் மங்கல நாணாகிய 'திரு'ப் பூட்டியிருந்தனர் என்று கூறுதலும் 'மங்கலத்தாலி' அணிந்திருந்தனர் எனக் கூறுதலும் 'காலவழு' வின் பாற்படும்.

## ஆங்கில நூல்களில் காலவழு

இங்ஙனம் முற்கால நிகழ்ச்சிகளில் தம் காலச் செய்திகளை ஏற்றிக் கூறுதல் என்பது ஆங்கிலப் பெரும் புலவர்களிடமும் காணக்கிடக்கும் கால வழுவாகும்.

(1) மில்ட்டன் ( Milton ) என்னும் பெரும் புலவர் இயற்றிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்னும் நூலில் சாத்தானும் அவனைப் பின்பற்றின வரும் ஒருபுறமாகவும், மெஸ்ஸியாவும் அத்தெய்வத் தின் துணைத்தேவதைகளும் மற்றொரு புறமாகவும் நின்று போர்செய்தபோது இருதிறத்தாரும் துப்பாக்கி, பீரங்கிகளைப் (Artillery.) பயன்படுத்தினர் என்று குறிப்பிட்டுள்ளார். இதனைக் கவனித்த ஆங்கிலப் பேராசிரியர்கள், மில்ட்டன் காலத்தில் வழக்கிலிருந்த துப்பாக்கி, பீரங்கிகள், அவை தோன்றியிராத (காலம் இன்னதென்று கூறமுடி யாத) மிகப் பழைய காலத்தில் தேவ அசுரர் போரில் பயன்படுத்தப்பட்டன என்று மில்ட்டன் கூறி யிருத்தல் கால வழு (Anachronism) என்று கூறி யுள்ளனர்.

(2) சீசர் என்னும் ரோமானியப் பேரரசன், செனேட் மன்றத்திற்குச் செல்லத் துணிந்தபோது, புரூட்டஸ் என்பவனைப் பார்த்து, "மணி என்ன?" என்று கேட்டான். உடனே புரூட்டஸ், "மணி எட்டு அடித்து விட்டது" என்று பதிலளித்தான். இது உலக மகாகவி என்று புகழ்ப்பெறும், ஷேக்ஸ்பியர் இயற்றியுள்ள நாடகத்தில் (Act. II Sc. II) உள்ளது. சீசர் காலத்தில் மணி அடிக்கும் கடிகாரம் இல்லை. [தமிழ் நாட்டில் சங்ககால

வழக்கில் இருந்த நாழிகை வட்டிலைப் (சிலப்பதி காரம், காதை 5, வரி 49) போன்ற, (Hour glass or sand glass) சீசர் கால வழக்கில் இருந்தது. ] ஆனால் ஷேக்ஸ்பியர் காலத்தில் மணியடிக்கும் கடிகாரம் வழக்கில் இருந்தது. அதனை உளங்கொண்டு ஷேக்ஸ்பியர், தமக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பு சீசர் வாழ்ந்தவன், அவன் காலத்தில் மணியடிக்கும் கடிகாரம் இல்லை என்னும் உண்மையை மறந்தவராய், மேற்கண்டவாறு எழுதிவிட்டார் என்று ஆங்கில நூல் ஆராய்ச்சியாளர் குறித்துள்ளனர். இங்ஙனம் பெரும் புலவர்தம் நூல்களில் சில இடங்களில் 'காலவழு' நேர்தல் இயல்பு. ஆதலின், இவை வருமிடங்களை நீக்கி. உண்மை காண முயல்வதே மேனாட்டறிஞர் கையாண்டு வரும் முறையாகும்.

ஆயின், இலக்கிய ஆய்வுத் திறனோ, நடுவுநிலை உள்ளமோ, எதனினும் உண்மைகாண வேண்டும் என்னும் வேட்கையோ போதிய வளர்ச்சி பெறாத நம்நாட்டில் சாத்திரிய ஆராய்ச்சி என்பது முயற்கொம்பாக இருக்கின்றது.

**முடிவுரை**

இதுகாறும் கண்ட இலக்கியச் சான்றுகளிலிருந்து நாம் அறியும் உண்மை என்ன? (1) இக்காலத்தில் திருமணத்தின்போது மணமகன் மணமகள் கழுத்தில் கட்டும் மங்கல நாணோ அல்லது தாலி கோத்த மங்கல நாணோ சங்ககாலம் முதல் கந்தபுராண காலம் வரையில் (கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முடிய) வழக்கில் இல்லையென்பது தெரிகிறது. (2) மங்கல நூல் அல்லது மங்கல நாண் என்பது. கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து திருமண வழக்கில் இடம் பெற்றிருக்கலாம். அது

கொண்டே கந்தபுராண ஆசிரியர் முதல் முதல் மங்கல நாணைக் குறித்திருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டு. (3) சங்ககாலம் முதல், இயல் பாகவே பெண்கள் கழுத்தில் அணிந்து வந்த பொன்னுலான புலிப்பல் தாலியையோ அல்லது வேறு உருவம் அமைந்த தாலியையோ மங்கல நாணிற் கோத்து அணியும் வழக்கம் கந்தபுராண ஆசிரியர்க்குப் பின்னும் சேக்கிழார்க்கு முன்னும் தோன்றியிருத்தல் வேண்டும். (4) இவ்வாறு மங்கலநாண் அல்லது தாலி கொண்ட மங்கலநாண் ஏறத்தாழக் கி. பி. 11-ஆம் நூற்றுண்டுமுதல் வழக் கிலிருந்த காரணத்தால்தான் கச்சியப்ப சிவாச்சாரி யார் முதல் பரஞ்சோதி முனிவர் ஈருகப் பெரும் புலவர் அனைவரும் 'மங்கலநூல்' என்றும், 'தாலி' என்றும், 'மங்கலநூல் தாலி' என்றும், 'கழுத்து நாண்' என்றும், 'திரு' என்றும் இடவழக்கும் காலவழக்கும் நோக்கிப் பலவாறு பெயரிட்டழைத் தனர் என்பது தெரிகிறது. (5) ஆயினும் அந்த நூற்றுண்டுகளில் தாலியின் வடிவம் எவ் வாறு இருந்தது, அது புலிப்பல் தாலிதானு, அல்லது வேறு உருவம் அமைந்ததா என்பதை அறிய வழியில்லை. (6) மங்கல நூல் வழக்கிற்கு வரு முன், புறநானூற்றில் கண்ட தொடி, இழை போன்ற சிறப்பு அணிகளே மண அணிகளாகக் கருதப்பட்டு வந்தன என்று கருத இடமுண்டு. இந்த ஆறு செய்திகளும் இதுகாறும் கண்ட இலக் கியச் சான்றுகள் கொண்டு காய்தல் உவத்தல் இன்றி நாம் அறியத்தகும் உண்மைகள் ஆகும்.

இனி, மலையாள நாட்டு மண விவரங்களைபற்றி அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

# 7. மலையாளத்தில் தாலிகட்டுக் கல்யாணம்

(கி. பி. 1401 - 1900)

**முன்னுரை**

'மலையாளத்தில் தாலிகட்டுக் கல்யாணம் என்பது பல நூற்றாண்டுகளாக இருப்பதாலும், மலையாளிகள் திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலாலும், அவர்களிடமுள்ள தாலி தமிழரிடத்திலும் இருந்திருத்தல் வேண்டுமல்லவா?' என்று சிலர் கேட்கின்றனர். மலையாளத்தில் நடைபெறும் தாலிகட்டுக் கல்யாணத்தின் வரலாறும் விவரங்களும் அறியாத மக்கள் இக்கேள்வியை மட்டும் கவனித்தால், இது நியாயமான கேள்வியென்று நினைப்பர். ஆதலால், இக்கல்யாணம் பற்றிய விவரங்களை நாம் அறிந்த பின்னரே ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும்.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு முடிய மலையாள நாட்டைப் பார்வையிட்ட பல நாட்டாரும் இந்தத் தாலிகட்டுக் கல்யாணத்தைப்பற்றிய விவரங்களை விரிவாக எழுதியுள்ளனர். அவ்விவரங்களையும் தாம் நேரிற் கண்டனவும், தக்கார் கூறியனவும், மலையாளிகளை சொன்னவையும் ஆகிய செய்திகளையும் தர்ஸ்ட்டன் என்னும் மேனாட்டறிஞர் 50 ஆண்டுகட்குமுன் தாம் எழுதி வெளிப்படுத்திய 'தென்னிந்தியச் சாதிகளும் குடிகளும்' என்னும் தமது பெருநூலில் (ஏழு பாகங்கள்) விரிவாக எழுதியுள்ளார். மலபார்

கெசட்டியரும் கொச்சிநாட்டு வரலாற்று நூலும், திருவாங்கூர் நாட்டு வரலாற்று நூலும் இக்கல்யாணத்தை அறியப் பேருதவி புரிகின்றன. இவையனைத்திலும் காணப்படும் செய்திகளைத் தொகுத்துக் கீழ்வருமாறு கூறலாம் :

## மணம் பற்றிய சுருக்கம்

பழைய வெள்ளி இரண்டணு நாணயம் அளவில் பொன்னுலோ பிற உலோகத்தாலோ செய்யப் பட்டுக் கயிற்றில் கோக்கப்பட்ட ஒன்று இக்கல்யாணத்தில் கட்டப்படுகிறது. அது 'தாலி' எனப் படும். இக்கல்யாணம் பெண் பருவமடைவதற்குமுன்பு செய்யப்படுவது. பெண்ணுக்குத் தாலிகட்டும் ஆண் மகன் பெண்ணின் சாதியாளுக அல்லது உயர்ந்த சாதியாளுக இருப்பான். அவன் பெரும்பாலும் மதிக்கத்தக்க வயதும் தூய்மையும் உடையவனுக இருப்பான். அவன், தாலி கட்டப்படும் பெண்ணின் தாய்க்கே (அத் தாய் பருவம் அடையாததற்கு முன்பு) தாலி கட்டியவனுகவும் இருப்பான். சில தாலிகட்டுக் கல்யாணங்களில் பெண்ணின் தந்தையே தன் மகளுக்குத் தாலிகட்டு வான். சில கல்யாணங்களில் பெண்ணின் தாயே கட்டுவதும் உண்டு; சிலவற்றில் அம்மான் கட்டுவ துண்டு; மற்றும் சிலவற்றில் அம்மான் மனைவி கட்டுவ துண்டு; வேறு உயர் வகுப்புப் பெண்கள் கட்டுவது முண்டு. இங்ஙனம் கட்டுதல் சாதிக்கேற்றவாறு வேறுபடும். ஏழைக் குடும்பங்களில் ஓர் ஈட்டியை மணமகனுக வைத்துப் பெண்ணுக்குத் தாயே தாலி கட்டுதல் உண்டு. ஓர் உருவம் சமைத்து, அதன் முன்னிலையில் பெண்ணின் தாயே தன் பெண்ணுக்

குத் தாலிகட்டுதலும் உண்டு. இவற்றை நோக்க, தாலிகட்டுக் கல்யாணம் ஒரு 'போலி மணவிழா' என்பது நன்கு விளங்கும். இக்கல்யாண காலத்தில் அருச்சுனன் சுபத்திரையைக் கைக்கொண்ட வரலாறு பாடலாகப் பாடப்படுகிறது. அஃதாவது, பெண்ணை வலிந்து கைப்பற்றுதல் என்பது, இங்ஙனம் தாலிகட்டி விடுதல், தாலி கட்டப்பெற்ற பெண், சம்பந்தத்திற்கு (இல்லற வாழ்க்கைக்கு – தாய்மைபெற) த் தகுதியுடையவளாகிருள் எனப் பொருள்படும்.

## பெண்ணுக்குரிய வயது

ஏழு, ஒன்பது, பதினென்று பன்னிரண்டு ஆகிய ஆண்டுகளுள் ஏதேனும் ஒன்றில் பெண்ணுக்குத் தாலிகட்டு நடைபெறும். ஓராண்டு எய்திய பெண்மகவுக்கும் பொருள் முட்டுப்பாடு கருதி இக்கல்யாணம் செய்விக்கப்படுதலும் உண்டு. இது மூன்று அல்லது நான்கு நாட்கள் நடைபெறும்; கடைசி நாளில் பெண்ணின் கழுத்தில் தாலி அணியப்படும். சில கல்யாணங்களில் முதல் நாளிலேயே தாலி கட்டப்படும்.

## கல்யாணத்திற்குப்பின்

இக்கல்யாணம் நடந்தபின் தாலியைப் பெண் கழுத்திலேயே அணிந்துகொண்டிருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அவள் தன் விருப்பம்போல அணிந்து கொள்ளலாம்; அல்லது நீக்கி விடலாம்; இந்தத்தாலிக்கும் அவள் எதிர்காலத்தில் கணவனுகக் கொள்ளும் ஒருவனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தாலி கட்டியவன், கல்யாணச் சடங்குகள்

முடிந்தவுடன் பெண்ணோடு பேசாமலும் திரும்பிப் பாராமலும் சென்றுவிடுவான். இங்ஙனம் மாப் பிள்ளையாக இருந்து தாலி கட்டியதற்கு அவனுக் குப் பெண் வீட்டாரால் எட்டு ரூபாய் அல்லது பத்து ரூபாய் தரப்படும். தாலி கட்டுக் கல்யாணம் முடிந்த வுடன் பெண்ணின் தாய் மணமகன் கையில் இரண்டு துணிகளைக் கொடுப்பாள். மணமகன் அவற்றுள் ஒரு துணியைக் கையில் எடுத்து அதி லிருந்து ஒரு சிறிய நூலைப் பிரித்து அதனை அறுப் பான்; பின்பு எழுந்து சென்றுவிடுவான். இவ் வாறு நூலினை அறுத்துப்போடுதல், அவனுக்கும் அப்பெண்ணுக்கும் வாழ்க்கைத் தொடர்பு இல்லை என்பதற்கு அடையாளமாகும். ஆனால், தாலி கட்டியவன் தன் சாதியானாக இருந்தால், அவன் இறந்தபின் அவள் உண்மை மனைவியைப்போலக் கருமாதிவரைத் தீட்டுப்பட்டவள் ஆகின்றாள். இந்த ஓர் உறவே அவ்விருவருக்கும் உண்டு (மல பார் கெசட்டியர், பக். 102 - 103, 174).

## தேவர்—கட்டுக் கல்யாணம்

வாரியர் என்பவர் கோவில் 'வேலைகளைக் கவ னிப்பவர். ஆண்களேயன்றிப் பெண்களும் கோவில் வேலைகளில் ஈடுபட்டிருப்பர். கொச்சி நாட்டு வாரியருள் தேவர்-கட்டுக் கல்யாணம் என்பது நடைபெறுகிறது. இதில் தாலி (மாத்ரா) கோவி லுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பூசிக்கப்பட்டுக் குருக்களால் கோவிலில் நிற்கும் பெண்ணுக்குமுன் கொண்டுவந்து வைக்கப்படும். அதனைப் பெண் ணின் தாய் அல்லது பெண்ணைச் சேர்ந்த வேறொரு பெண்மணி அல்லது ஒரு பெரிய மனிதன் எடுத்துப்

பெண்ணுக்குக் கட்டுதல் வழக்கம். இங்ஙனம் தேவருக்குமுன் அவர் இல்லத்தில் பணி செய்யும் உரிமை பெற்றவள் கட்டிக்கொள்ளுதல் தேவர்–கட்டுக் கல்யாணம் எனப்படும். இங்ஙனம் பருவமடைவதற்குமுன் இக்கல்யாணம் செய்யாத பெண் கோவில் வேலைக்கு உரியவள் ஆகமாட்டாள்; கோவில் வாயிலாக அவளுக்கு விடப்பட்டுள்ள மானியத்தையும் அநுபவிக்கமுடியாது. தேவர்-கட்டுக் கல்யாணம் செய்யாத வாரியர் பெண்கள் பருவமடைந்தபின் கோவிலுக்குள் வழிபாடு செய்யவும் விடப்படுவதில்லை. இக்கல்யாணத்தில் தாலி கட்டுவோன் ஆண்மகனாக இருந்தால் அவனால் கட்டப்பட்ட மாத்ரா, (தாலி) (அவள் வயதுவந்து கணவனோடு வாழும்பொழுதும்)அவன் இறக்கும் வரையில் பெண்ணின் கழுத்தில் இருக்கும். அவன் இறந்த பிறகே நீக்கப்படும். அத் தாலிக்கும் உண்மைக் கணவனுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. (இச்செய்தி எங்கள் கல்லூரித் துணைத்தலைவர் உயர் திரு. வாரியர் அவர்கள் அன்போடு கூறியதாகும்.)

## உண்மைத் திருமணம்

இக்கல்யாணத்திற்கும் சம்பந்தத்திற்கும் (உண்மைத் திருமணத்திற்கும்) வேறுபாடு உண்டு. பின்னது முன்னது நடந்த பின்னரே நடைபெறும். இவ்வுண்மைத் திருமணம் மணமகன் மணமகளுக்கு ஆடை கொடுத்தல் ஒன்றையே சிறப்பாகக்கொண்டது. பின்னர் மணவிருந்து நடைபெறும். விருந்துக்குப்பின் இருவரும் கணவனும் மனைவியுமாக வாழ்க்கை நடத்துவர். இங்ஙனம் நடைபெறும் உண்மைத் திருமணம் மலையாள நாட்டில் பல்வேறு

வகுப்பினரிடைப் புட (வை) முறி, வஸ்திரதானம், உளம் பொறுக்குக, விடாரம் கயறுக எனப் பலவாறு பெயர்பெறும். சில வகுப்பாரிடம் உண்மைத் திருமணத்தின்போது, முதலில் தாலிகட்டுக் கல்யாணமும் பின்பு உண்மைத் திருமணமும் இக்காலத்தில் சேர்த்து நடத்தப்படுகின்றன. (மலபார் கெசட்டியர்-பக். 175-176).

## சாட்சிகள் கூற்று

மலபார் திருமணச் சட்ட விசாரணைக்குழு 1896 - ஆம் ஆண்டு இக்கல்யாண முறையைப் பற்றிப் பல சாட்சிகளை அழைத்து விசாரித்தது. அப்பொழுது சாட்சி கூறியவருள் பெரும்பாலோர், இஃது உண்மைத் திருமணமன்று என்றனர்; இது போலி மணம் என்றும், பொருளற்ற விழா என்றும் இகழ்ச்சிக்குரிய ஏமாற்றுதல் என்றும், கொடிய பழக்கம் என்றும், வீண் செலவுமுறை என்றும், வாழ்வில் கடனை ஏற்படுத்திவைக்கும் ஒரு முறை என்றும் குறிப்பிட்டுள்ளனர் (தர்ஸ்டன், 5 - பக்கம். 326).

## இக்கல்யாணத்தின் பழைமை

இந்தத் தாலிகட்டுக் கல்யாணம்பற்றிய விவரங்கள் 15 - ஆம் நூற்றூண்டில் அப்துற் ரசாக், நிக்கோலோ கொன்ட்டி என்பவராலும், பர்போசா முதலிய 16 - ஆம் நூற்றூண்டு அறிஞர்களாலும், பிரார்ப்-டி - லேவல், பி. டி. வல்லே என்ற 17 - ஆம் நூற்றூண்டு அறிஞர்களாலும், 18 - ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த ஹாமில்ட்டன் என்பவராலும், 19-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த புச்சானன் முதலியோராலும்

நன்கு கவனித்து எழுதப்பட்டுள்ளன. இது பற்றிய விவரங்களைச் சுருக்கமாக அறிய விரும்புவோர் மலபார் கெசட்டியரைப் படித்தறியலாம்; விரிவாக அறிய விரும்புவோர் தர்ஸ்ட்டன் எழுதிய நூல்களைப் படித்துணரலாம்.

## முடிவுரை

தாலிகட்டுக் கல்யாணம் இந்நாட்டில் எப்படித் தோன்றியது, எதற்காகத் தோன்றியது, அதனால் விளைந்த நன்மை - தீமைகள் என்ன என்பன நமது ஆராய்ச்சிக்கு உரியன அல்ல. தாலிகட்டுக் கல்யாணத்தில் பெண்ணின் தந்தைமுதல் பணத்திற்கு அமர்த்தப்படும் ஆள்வரையில் எவர் வேண்டுமாயினும் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டலாம் என்பதிலிருந்தும், கட்டுபவனுக்கும் கட்டப்படுபவளுக்கும் கணவன் - மனைவி உறவு இல்லை என்பதிலிருந்தும், இது வேறு - உண்மைத் திருமணம் வேறு என்பதிலிருந்தும், இது தவறு என்பதை அறிஞர்பலர் சட்ட விசாரணைக் குழுவின் முன் கூறியதிலிருந்தும், இன்று இக்கல்யாண முறை நீக்கப்பட்டுவருவதிலிருந்தும், இது ஒருவன் ஒருத்தி இல்லற வாழ்க்கைக்குப் பயனற்றது என்பதிலிருந்தும்,/இதற்கும் தமிழ் நாட்டில் நாம் நடத்தும் உண்மைத் திருமணத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்பது நன்கு அறியப்படும். மேலும், மலையாளிகள் அனைவரும்மேற்கொள்ளும் உண்மைத் திருமணத்தில் தாலி கட்டப்படுதல் இல்லை என்பதும் இங்கு அறியத்தகும்./ மேலும், அதே மலையாள நாட்டில் வாழும் செருமான், முக்குவன், புலையன், பறையன், பணியன், குறும்பன், நாயாடி, குறிச்சி

யான், கரிம்பளன், மலையன், மலசன், காடன், வேட்டுவன், மாவிலோன், அருநடன் முதலியோர் தாலிகட்டுக் கல்யாணம் செய்யாதவர் என்பதும், தாலியையே அறியாதவர் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கன (மலபார் கெசட்டியர்-பக்கம். 133). எனவே, மலையாள நாட்டு உண்மைத் திருமணத்தில் இல்லாமல், போலிக் கல்யாணத்தில் மட்டும் கட்டப்படும் தாலியைக்காட்டி, அதனால் தமிழரிடம் திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் தொன்றுதொட்டே இருந்து வந்தது என்று கூறுதல் பொருத்தமாகாது.

## 8. கி. பி. 19-ஆம் நூற்றாண்டுச் செய்திகள்

### முன்னுரை

ஏறத்தாழ 50 ஆண்டுகட்கு முன்பு தர்ஸ்டன் என்னும் பேரறிஞர் "தென்னிந்தியச் சாதிகளும் குடிகளும்" என்னும் பெயரில் ஏழு பெரிய நூல்களை வெளியிட்டனர். அவற்றுள் தென்னிந்தியாவில் வாழும் எல்லாச் சாதியார் பற்றிய விவரங்களும் குடிகள் பற்றிய விவரங்களும் இடம் பெற்றுள்ளன. 50 ஆண்டுகட்குமுன் விசாரித்து எழுதப்பட்ட விவரங்கள் ஆதலால், இந்நூல்களில் காணப்படும் சில சடங்குகள் இக்காலச்சடங்குகளோடு மாறுபட்டனவாக இருக்கலாம்; அக்காலத்தில் தாலிகட்டும் வழக்கம் இல்லை என்று இந்நூல்களில் குறிக்கப்பட்ட சாதியார் சிலர் இன்று தாலிகட்டும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கலாம். வளரும் சமுதாயத்தில் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு. இக் கட்டுரையில் குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் அனைத்தும் 50 ஆண்டுகட்கு முன் தர்ஸ்டனால் குறிக்கப்பட்டவை (19-ஆம் நூற்றாண்டுச் செய்திகள்) என்பதை நினைவில் இருத்துதல் வேண்டும். இந்த முன்னுரையோடு கீழ்வரும் விவரங்களைக் காண்போம்.

### திராவிட இனத்தவர்

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு, தொதவர்மொழி, கோட்டார்மொழி, கொண்டர்மொழி, கோயிமொழி முதலியன திராவிடமொழி

களென்றும், இம்மொழிகளைப் பேசும் மக்கள் பல் லாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஒரே இனத்தவராக வாழ்ந்தனர் என்றும் மொழி இலக்கண ஆராய்ச்சி வல்லார் அறைவர். இவற்றுள் முதலிற் கூறப் பெற்ற ஆறு மொழிகளைப் பேசுவோர் நாகரிகம் பெற்றவர் என்றும், பின்னவை நான்கையும் பேசு வோர் மலைகளில் வாழும் அநாகரிகர் என்றும் அவ் வாராய்ச்சியாளரே கூறுவர். மொழி ஆராய்ச்சிக்கு இம்மக்கள் பேசும் மொழிகளைப் பயன்படுத்துவது போலவே, திருமண ஆராய்ச்சியிலும் இம்மக்கள் கையாளும் சடங்குகளை ஆராய்தல் தவருகாது அல்லவா ?

***தொதவர்***, ***கோட்டர்*** என்பவர் நீலகிரியில் வாழும் மக்கள். இவர்கள் திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் இல்லாதவர். இவர்களோடு அம் மலையில் வாழும் ***படகரும்*** தாலி கட்டாதவர், கோதாவிரி மாவட்டத்து மலைகளில் வாழும் ***கோயி களும்*** தாலி கட்டாதவர்கள். கஞ்சம், விசாகப்பட்டி னம் மாவட்டங்களிலுள்ள மலைவாழ் ***கொண்டர்*** என்பவரும், அவர் கிளையினரான ***சவரர்*** என்ப வரும், திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் இல்லாதவர் என்பது இங்கு அறியத்தகும்.

இவர்களுள் நீலகிரியில் வாழும் கோட்டர் மனைவி, கணவன் இறந்தபின், தான் அதுவரையில் அணிந்திருந்த ***பித்தளைக் காப்பை*** மங்கல நீக்கத் திற்கு அறிகுறியாக உடைப்பது ***வழக்கம்*** என்பதும் இங்கு அறிய வேண்டுவதாகும்,

## முதுவர்

மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் **முதுவர்** என்னும் வகுப்பார், சில நூற்றுண்டுகட்கு முன் நடைபெற்ற அயலார் படையெடுப்பின்போது, மதுரையிலிருந்து இம் மலைநாட்டுப் பகுதிகளுக்கு ஓடிவந்துவிட்டதாகக் கூறுவர். இவர்கள் கோவை, மதுரை, மலையாள மாவட்டங்களிலுள்ள மலைகளிலும், திருவாங்கூர் நாட்டிலுள்ள மலைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடையே திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குக் **காதணிகளையும் பித்தளைக்காப்பையும்**, ஒரு புடைவையையும், சீப்பையும் கொடுப்பது வழக்கம். அவன் இறந்த பிறகு அம்மணமகள், அவனால் கொடுக்கப் பட்டுத் தான் அதுவரையில் அணிந்துவந்த **காதணிகளையும் பித்தளைக் காப்பையும் நீக்கிவிடுதல்** இன்றளவும் இருந்துவரும் வழக்கமாகும். (இக் காலக் கோட்டர் மனைவி வளையலை உடைத்தலும், முதுவர் மனைவி வளையலை நீக்கலும், சங்ககாலக் கண்ணகி வளையலை உடைத்ததும், வெளிமான் மனைவியர் வளையலை நீக்கியதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.)

"நீங்கள் தாலிகட்டுவது வழக்கமில்லையா?" என்று கேள்விகேட்கப்பட்ட பொழுது, அம்முதுவர், 'திருமணத்தின்போது தாலிகட்டத்தொடங்கினோம். தாலி கட்டப்பட்ட மணப் பெண்கள் அகாலத்தில் இறந்துவிட்டார்கள்; இவ்வாறு தாலி கட்டப்பட்ட பெண்கள் அகாலத்தில் இறந்தது கண்டு தாலி கட்டுதல் நிறுத்தப்பட்டுவிட்டது," என்று பதில் கூறினர், (தர்ஸ்ட்டன்-5-பக். 93). இக்கூற்றிலிருந்து

திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் முதுவரிடம் தொன்று தொட்டு இருந்ததில்லை என்பதும், இடைக்காலத்தில் அச்சடங்கைத் திருமணத்தில் நுழைத்தனர் என்பதும், தாலி கட்டப்பெற்ற மணப்பெண்கள் அகாலத்தில் இறந்துபட்டதால் புதிதாக நுழைக்கப்பட்ட அச்சடங்கு கைவிடப்பட்டது என்பதும் தெளிவாகின்றன அல்லவா ? இவர்கள் மணமுறையும் முற்கூறப்பெற்ற மலைவாணர் மணமுறைகளும் அகப்பொருள் நூல்களில் கூறப்படும் களவு-உடன் போக்கு முதலிய முறைகளிலேயே தொடங்கி முடிகின்றன என்பதும் இங்கு அறியத்தகும். இங்குக் கூறப்பட்ட முதுவர் மதுரையிலுள்ள மீனாட்சி, சொக்கர், பழனியாண்டவர் ஆகிய மூவரையும் சிறப்புக் கடவுளராக வழிபடும் தமிழராவர் என்பதும் கவனிக்கத்தகும்.

## வேறு பழங்குடிகள்

இக்கால நாகரிகம் எட்டிப்பாராத பழங்குடிகள் பல இந்நாட்டில் இன்றும் உண்டு. (1) தெலுங்கு நாட்டிலுள்ள ஒட்டர், ஏனாதிகள் முதலிய சாதியாரிடத்துத் தாலி கட்டும் வழக்கம் இல்லை; (2) மலையாள நாட்டிலுள்ள செருமார், முக்குவர், பலியர், வலையர், புலையர், பறையர், நாயாடிகள், பணியர், மலக்கர், கரிம்பளர், மலையர், மலசர், காடர், வேட்டுவர், மாவிலோர், அருநடர் முதலியோரிடத்தும் திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் இல்லை; (3) கன்னட நாட்டிலுள்ள காப்பிலியர், கொரகர், காடு குறும்பர், மொகயர், கார்விகள் முதலிய சாதியாரிடமும் தாலிகட்டும் வழக்கம் இல்லை; (4) துளு நாட்டிலுள்ள பாணர், ஓடாரி

என்னும் சாதியாரிடமும் தாலிகட்டும் வழக்கம் இல்லை.

## தமிழகத்தில்

(1) அகம்படியர் என்பவர் அரசரின் மெய்க் காப்பாளராக இருந்த வீரமரபினர் (மலபார் கெசட்டியர், பக். 157). அவருள் பலர் மங்கல நாண் மட்டுமே அணிவது வழக்கம். சிலர் தாலி கட்டுதலை மேற்கொண்டுள்ளனர். (2) கள்ளரும் வீரத்தமிழினத்தார். இவருட் சிலர் கறுப்புக் கயிறு மட்டுமே உக்கழுத்தில் கட்டுவர்; மற்றும் சிலர் மூன்று பவளம் மட்டுமே கறுப்புக் கயிற்றில் கோத்துக்கட்டுதல் மரபு; மற்றும் ஒரு சார் கள்ளர் மரபினர் சிறிய நான்கண வடிவில் அமைந்த காசினைத் தாலியாகக் கட்டுதல் மரபு; கள்ளர் மரபினர் சிலர் முக்கோண வடிவில் அமைந்த அணி ஒன்றனைத் தாலியாகக் கட்டுவர். (3) மறவர் வீரம் செறிந்த தமிழ் இனத்தவர். அவருள் பலவகைத் திருமணங்கள் 50 ஆண்டுகட்கு முன் நடைபெற்று வந்தன. அவற்றுள் மணமகள் வீட்டிலேயே மணமகன் உடன் பிறந்தவள் சென்று தாலிகட்டி, மணமகன் வீட்டிற்கு அழைத்து வருதல் வழக்கம்; சிலர் பொன் தாலிக்குப் பதிலாக, இந்திரன் தலையை உணர்த்தும் ஒரு நகையைத் தலைமயிரில் அல்லது பட்டுக்கயிற்றில் கோத்துக்கட்டுதல் மரபு; மணப் பந்தலிலேயே நாத்தி தாலியைக் கட்டுதல் உண்டு; இந்தத்தாலி கருப்புப் பட்டுக் கயிற்றில் கோக்கப் பட்டது. இது பல திருமணங்களில் கடனாக வாங்கிக் கட்டப்படுவது. ஆதலால் திருமணத்திற்குப் பிறகு இது நீக்கப்பட்டுத் தங்க மணிகள் கோத்த கயிறு

கட்டப்படும். சில திருமணங்களில் மணமகனே தாலிகட்டுதல் உண்டு. வேறுசில திருமணங்களில் தாலி பெண்வீட்டிற்கு அனுப்பப்படும். அது கட்டப் பெற்று, மணமகள் கணவன் வீட்டில் கொண்டு வந்து விடப்படுவாள். இரண்டு மூன்று பிள்ளைகள் பிறந்த பிறகு, இம்மணமக்கட்குப் பலரறியத் திருமணம் நடைபெறும். அப்பொழுது கட்டப்படும் தாலி, 'கட்டுதாலி' எனப்படும் (புத்தகம் 5, பக் 35, 40)

இம்முக்குலத்தார் திருமணங்களில் நாத்தி தாலி கட்டுதலும், மணமகன் தாலி கட்டுதலும், சிலர் தங்கள் மரபிற்கேற்ற முறைப்படி மணத்தினை நடத்தலும், சிலர் புராணமுறைப்படி நடத்தலும் வழக்கம் என்பதைத் தர்ஸ்ட்டன் நன்கு விளக்கியுள்ளார். இவருள்ளும் மங்கலநாண் மட்டுமே கட்டுவோர் உண்டு; காசுபோன்ற தாலிகட்டுவோர் உண்டு; இந்திரன் தலைபோன்ற அணியைக் கட்டுவோரும் உண்டு என்பன தெளிவாகின்றன.

(4) கொங்கு வேளாளருள் அவரினத்துப் புரோகிதரான அருமைக்காரரே தாலிகட்டுதல் வழக்கம். (5) கோலியர் வகுப்பில் இருவகை மணங்கள் உண்டு; சிறிய திருமணத்தில் நாத்தியும், பெரிய திருமணத்தில் மணமகனும் தாலி கட்டுதல் வழக்கம்; (6) கோட்டை வேளாளருள் நாத்தியே தாலி கட்டுதல் மரபு. (7) மலையாள க்ஷத்திரியருள் ஆரியப் பட்டர் தாலி கட்டுவார்; (8) பெல்லாரி மாவட்டத்திலுள்ள குறுபர் இனத்தில் புரோகிதரே தாலி கட்டுவார்; (9) சில மட்பாண்டத் தொழிலாளருள் நாத்தியே தாலிகட்டுவாள். (10) மாதிக

ருள் தாய் மாமனே பொட்டுக்கட்டுதல் வழக்கம். (11) நம்பூதிரி பிராமணருள் **பெண்ணின் தந்தையே** மகளுக்குத் தாலி கட்டுதல் மரபு. (12) நகரத்தாருள் அம்மரபில் முதியவரும் ஒழுக்கத்தால் சிறந்தவரும் நல்வாழ்வு வாழ்ந்தவருமான ஒருவரும் பெண்ணின் நாத்தியும் சேர்ந்து தாலி கட்டுதல் மரபு. (13) பள்ளருள் நாத்தி கட்டுதல் உண்டு; சில திருமணங்களில் கணவனே கட்டுதல் வழக்கம். (14) வயநாட்டுப் பனியருள் நாத்தி கட்டுவாள்; அவள் இல்லையெனில், அவள் உறவினளான வேறொருத்தி கட்டுவாள். (15) பட்டினவர் திருமணத்தில் மணமகனே தாலி கட்டுதல் வழக்கம்; மறுமணத்தில் மணமகளோ அல்லது அவனைச் சார்ந்த பெண்ணோ 'நடுவீட்டுத் தாலி' கட்டுவாள். (16) உப்பிலியர் திருமணத்தில் மணமகன் தாலி கட்டுதல் உண்டு; சில திருமணங்களில் நாத்தி கட்டுதல் உண்டு; சில திருமணங்களில் சீர்காரி கட்டுதலும் உண்டு. (17) கோவை ஊராளியர் திருமணத்தில் மணமகனைச் சார்ந்த ஒருத்தி மணமகளுக்குப் பொட்டுக் கட்டுதல் வழக்கம். (18) வலையருள் நாத்தி தாலிகட்டுவாள். (19) வல்லம்பருள் நாத்தியே தாலி கட்டுவாள். (20) சலவைத் தொழிலாளருள் பெரும்பாலும் நாத்தி தாலி கட்டுதல் மரபு. (21) குறும்பருள் நாத்தியே கட்டுதல் வழக்கம்.

தமிழ் உப்பிலியருள் கணவன் இறந்த பிறகும் விதவைகள், தானாக விழும் வரையில் தாலியை அணிவது வழக்கம் (7-பக். 239). **வலையருள் விதவை தாலி நீக்குவது இல்லை.** அவள் மறுமணம் செய்ய

விரும்பினுல்தான் முதல் கணவன் கட்டிய தாலி நீக்கப்படும் (7-பக்கம். 276).

## தாலிக்குப் பதிலாக

(1) மலையாளிகளுள் ஈழுவர், காணிகர் முதலிய சில சாதியார் 'மின்னு' என்னும் அணியைத் திருமணத்தின்போது அணிகின்றனர். (2) காப்பிலியர் கரிய கண்ணுடி வளையல்களை அணிகின்றனர். (3) கொண்டர் இனத்தவர் பித்தளைக் காது வளையங்களை அணிவர். (4) குறவருள் ஒரு சாரர் கரிய மணிகள் கோத்த கயிற்றைக் கட்டுவர். (5) கன்னட நாட்டிலுள்ள கார்வி என்னும் பரதவர் பொன் மணி ஒன்று (தாரை மணி) கழுத்தில் கட்டிப் பெண்ணைப் பந்தலுக்கு அழைத்து வருவர். (6) பழனிமலைத் தொடரில் வாழும் குன்னுவர் பெண்ணின் வலக்கையில் வெள்ளிக் காப்பு அணிவர். (7) குருவிக்காரர் கரிய மணிகள் கோத்த கயிறு ஒன்றினைக் கழுத்தில் கட்டுவர். (8) மறவருட்சிலர் பொன் மணிகள் கோத்த நூல்கயிற்றைக் கட்டுவர். (9) முதுவர் காதணியும் காப்பும் அணிவர். (10) தெலுங்க நாட்டுப் பெரும்பாலான சாதியார் பொட்டுக் கட்டுவர். (11) மலையாள நாட்டு வாரியர் என்பவர் மத்தளம் அல்லது பறை வடிவில் உள்ள '*மாத்ரா*' என்னும் அணியைக் கட்டுவர். (12) மலையாளச் சலவைத் தொழிலாளர் 'உந்து மின்னு' அல்லது 'புளியிலை மின்னு' என்னும் அணியைக் கட்டுவர். (13) வயநாட்டுச் செட்டிகள் மணமகள் மேற்கையில் தொடி அணிவிப்பர்; இதுவே மணத்தில் சிறப்புச் சடங்கு. (14) மலையாள வேட்டுவருள் மண அணியாக மோதிரம் அணிவித்தல் மரபு.

(15) அஜப்பக் கவுண்டர் கறுப்புக் கண்ணுடி வளையலையே ஐம்பதாண்டுகட்கு முன்வரை மண அணியாகக் கொண்டிருந்தனர். (தாலி இல்லை)
(16) ஒக்கலியருள் ஒரு சாரார் தாலி கட்டுவதில்லை; பிறிதொரு சாரார் தாலி கட்டுகின்றனர். கணவன் இறந்த அன்றே மனைவி அவனது புதை குழியில் தன் கைவளையல்களை உடைத்துப் போடுவாள்.

இவ்விவரங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? இன்றுள்ள *தாலிக்குப் பதிலாக* (1) மின்னு, (2) கரிய கண்ணுடி வளையல்கள், (3) பித்தளைக் காது வளையங்கள், (4) கரிய மணிகள் கோத்த கயிறு, (5) பொன்மணி ஒன்றே கோத்த கயிறு, (6) வலக்கையில் வெள்ளிக்காப்பு, (7) காதணியும் காப்பும், (8) மத்தள வடிவில் அல்லது பறை வடிவில் அமைந்த 'மாத்ரா' என்பது, (9) தொடி அல்லது வளையல், (10) பித்தளை மோதிரம் கோக்கப்பட்ட கயிறு, (11) தலைமயிரில் அல்லது பட்டு நூலில் இந்திரன் தலையைக் காட்டும் அணி விசேடம், (12) 'உந்து மின்னு' அல்லது 'புளியிலை மின்னு' முதலியன திருமணத்திற்குரிய சிறப்பு அணிகளாகக் கருதப்படுகின்றன என்னும் உண்மையை அறிகின்றோம்.

## தாலி கட்டுவோர் யார் யார்?

(1) தர்ஸ்டன் கூறியுள்ள ஒவ்வொரு சாதியார் திருமணச் சடங்குகளையும் கூர்ந்து கவனிக்கும் பொழுது, பெரும்பாலான திருமணங்களில் பெண் வீட்டிலேயே *நாத்தி* பெண்ணுக்குத் தாலி கட்டுதல் வழக்கமாக இருந்தது என்பதும், பின்பு அவ்வுரிமை மணமகனுக்கே விடப்பட்டது என்பதும் தெரிகின்

றன. சில திருமணங்களில் நாத்தி அல்லது மண மகன் தாலி கட்டுவதாக அறிகிறோம். (2) நாத்தி இல்லாத பொழுது மணமகளைச் சேர்ந்த **வேறொரு பெண்மணி** தாலி கட்டுவாள். (3) பெண்ணுக்குத் **தாய் மாமன்** கட்டுவதும் உண்டு. (4) **தாய் மாமன் மனைவி** கட்டுதலும் வழக்கம். (5) **கணவன்** கட்டுவதும் உண்டு. (6) கணவனின் **பிரதிநிதியான ஆண்** கட்டுவதும் உண்டு. (7) கணவனின் **பிரதிநிதியான பெண்மணி** கட்டுதலும் உண்டு. (8) மணமகளின் **தந்தையே** கட்டுவதும் உண்டு. (9) **குடும்பத் தலைவன்** அல்லது இனத்தலைவன் கட்டுவது வழக்கம். (10) **புரோகிதன்** கட்டுதலும் மரபு.

## பிராமணரும் தாலியும்

பிராமணர் திருமணங்களில் மணமகன் தாலி கட்டும்பொழுது மணமகளை நோக்கி, "பெண்ணே! சமயச் சிறப்பு அடைவதற்கே நான் இந்தத் தாலியைக் கட்டுகின்றேன்", என்று சொல்லிக் கொண்டே பெண்ணின் கழுத்தில் தாலிகட்டுதல் வழக்கம். இங்ஙனம் மணமகன் சொல்லுவது வேத காலத்து வாக்கியமன்று. இங்ஙனம் தாலிகட்டும் சடங்கு, திருமணச் சடங்குகளை விரித்துக்கூறும் க்ரிஹ்ய சூத்திரங்களில் (Grihya Sutras) இடம்பெற வில்லை என்பது கவனிக்கத்தக்கது (தர்ஸ்ட்டன் I–பக். 285). இதனால், பிராமணருள்ளும் தாலி கட்டும் வழக்கம் மிகப் பிற்பட வந்தது என்பதும், அப்போது சொல்லப்படும் வாக்கியம் முன்னோர் வகுத்த க்ரிஹ்ய சூத்திரங்களில் இல்லாதது என்பதும் தெளிவாகும்.

## இவ்வாராய்ச்சியால் போந்த உண்மைகள் யாவை?

இத்துணைக் கட்டுரைகளினும் வெளிவந்த விவரங்களால் அறியப்படும் உண்மைகள் யாவை? (1) இலக்கிய ஆராய்ச்சியிலிருந்து, (சங்க காலமுதல் கி.பி. 10-ஆம் நூற்றுண்டு முடியத் தோன்றிய நூல்களில் தமிழர் திருமணத்தின்போது தாலி கட்டியதற்குச் சான்றில்லை; தொடி (வளையல்), இழை, பொன் (இறையனூர் களவியல்), மங்கலக் கடிப்பு (காதணி) போன்ற அணி விசேடங்களே மங்கல அணியாகக் கருதப்பட்டு வந்தன என்னும் உண்மையை அறிகின்றோம். (2) கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் தோன்றிய கந்தபுராண காலத்திலிருந்து தமிழர் திருமணத்தில் மங்கலநாண் கட்டுதலும், தாலிகோத்த மங்கல நாண் கட்டுதலும் வழக்கில் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது கந்த புராணம், பெரிய புராணம், தக்கையாகப் பரணி, கம்பராமாயணம், நம்பி திருவிளையாடல், பரஞ்சோதி திருவிளையாடல் இவற்ருல் அறியப்படுகிறது. (3) கி. பி. 15-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 20-ஆம் நூற்றுண்டு வரை மலையாள நாட்டில் வழக்கில் இருந்துவந்த தாலிகட்டுக் கல்யாணத்தில் (போலித் திருமணத்தில்) மட்டுமே பருவமடையாத பெண்ணுக்குத் தாலி கட்டப்பட்டது; ஆனல், பலவகைப் பட்ட உண்மைத் திருமணங்களில் தாலி கட்டும் வழக்கமே இல்லை; ஐம்பது ஆண்டுகட்கு முன்வரை அங்குத் தாய்மைக்குத் தகுதியுடையவள் என்பதைக் குறிக்கவே பெண்ணுக்குத் தாலிகட்டப்பட்டு வந்தது என்பதும், ஒருவன் **மனைவி என்பதைக் குறிப்பதற்கு அது கட்டப்படவில்லை** என்பதும் அறியத் தக்கன. (4) நம்மிடம் இன்று வழக்கில் இல்லாத

எண்ணிறந்த அருந்தமிழ்ச் சொற்களை வழக்கிலே பெற்றுள்ள மலையாளிகளிடம் ஒருவன் ஒருத்தியோடு வாழ இசையும் உண்மைத் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (5) திராவிட இனத்தைச் சேர்ந்த தொதவர், கோட்டர், கொண்டர், கோயிகள் முதலியோரிடத்தும் இன்றளவும் தாலிகட்டும் வழக்கம் இல்லை யென்பது நினைவில் இருத்தத்தக்கது. (6) மதுரை மாவட்டத்திலிருந்து சில நூற்றாண்டுகட்கு முன் அயலார் படையெடுப்பின் காரணமாகப் பல மலைப்பகுதிகளிலும் குடியேறி வாழும் முதுவரிடமும் தாலிகட்டும் வழக்கம் இல்லை ; காதணியும் காப்புமே மணவணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (7) ஊராளிகள் போன்ற ஒரே வகுப்பினரிடம் இடத்திற்கேற்பத் தாலிகட்டுதலும் சட்டாமையும் இருத்தலை நோக்க, தாலிகட்டும் வழக்கம் அம்மரபினரிடம் பண்டு தொட்டே வழக்கில் இருந்ததில்லை என்பது நன்கு விளங்கும். (8) கணவன் இறந்தும், உப்பிலியர், வலையர் இனத்தாருள் பலர் தாலியை நீக்காதிருத்தலும் காண, தாலிபற்றிய சிறப்பு (வாழ்வரசிக்குரிய அடையாளம்) கருதப்படவில்லை என்பது தெளிவு. (9) ஒரே வகுப்பினரிடை நடைபெறும் திருமணங்களில் ஒரு சாரர் கயிறுமட்டும் கட்டுதலும், சிலர் பவளம் முதலிய மணிகளைக் கோத்துக் கட்டுதலும், மேலும் சிலர் இக்காலத் தாலிகட்டுதலும் நோக்க, இந்தத் தாலிகட்டு முறையில் குறிப்பிட்ட ஒரு நியதி முதலில் தோன்றவில்லை என்பதும், அவரவர் இடத்திற்கு அல்லது பழக்க வழக்கத்திற்கு ஏற்ப இம்முறையை மேற்கொண்டனர் என்பதும், இவையே இவற்றின் பழைமையை வற்

புறுத்தவில்லை என்பதும் தெளிவாகும். (10) மண மகள் கழுத்தில் அவளது தந்தை, நாத்தி அல்லது அவளைச் சேர்ந்த வேறொருத்தி, மணமகன், அல்லது அவன் பிரதிநிதி (பெண் அல்லது ஆண்), புரோகி தன், குடும்பத் தலைவன் அல்லது இனத்தலைவன் தாலி கட்டிவரும் வழக்கம் இருத்தலை நோக்க, இச் சடங்கு இச்சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு முறை பற்றி உண்டானதன்று என்பதும், புதியதாகத் தோன்றிய ஒன்று என்பதும் தெளிவுறும்.

## ஆராய்ச்சி தேவை

தந்தையே மகளுக்குத் தாலி கட்டுதல் எவ் வாறு வந்தது? மலையாளத்தில் பெண்கள் பருவ மடைவதற்கு முன்பே தாலி கட்டவேண்டிய வற் புறுத்தல் எப்படி வந்தது? மணமகன் ஒழிந்த மற் றையோர் கட்ட வேண்டிய தேவை எங்ஙனம் வந் தது? இவை மிகவும் சிக்கலான கேள்விகள். இந் நாட்டின்மீது படையெடுத்த அயலார் மணமாகாத பெண்களைக் கவர்வர் என்ற அச்சத்தால் இஃது ஏற் பட்டிருக்கலாம் என்று அறிஞர் கூறுதல் வழக்கம். அத்தகைய துன்ப நிலையில் திருமணம் பேசி முடிப் பதற்குப் போதிய அவகாசமில்லாமையால், தம்மகள் மணமானவள் என்பதை உணர்த்தத் தந்தையே மகளுக்குத் தாலி கட்டும் அவசரமான துன்ப நிலை ஏற்பட்டிருக்கலாம்; அவ்வாறே பருவமடையாத பெண்களுக்கு ஒருவனே தாலி கட்டுக் கல்யாணம் செய்யும் தேவை ஏற்பட்டிருக்கலாம். இத்தேவை பற்றிய வரலாறு மறக்கப்பட்ட பிற்காலத்தில், ‘தேவை’ வழக்கமாக மாறிவிட்டிருக்கலாம். இங்குக் கூறப்பட்ட காரணமேயன்றி, இன்று புலப்படாத

வேறு காரணங்களும் இருக்கலாம். உண்மை இதுதான் என்று துணிந்துகூற இன்று சான்றுகள் கிடைத்தல் அரிது; ஆயினும் சான்று காண முயல்வது நல்லது.

## முடிவுரை

இன்று தமிழரிடையே திருமணத்தின்போது கட்டப்படும் தாலி பல்வேறு வகையில் அமைந்துள்ளது. சில தாலிகள் புலிப்பல் போன்று உள்ளன; பழைய வெள்ளி இரண்டணு வடிவில் சில காணப்படுகின்றன; அவற்றின்மீது பிறையும் பிறையின் மேல் நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளன. 'மின்னு' என்பது ஒரு வகைத் தாலி; இந்திரன் தலைபோன்றது ஒருவகைத் தாலி; சிறிய பொட்டு ஒருவகையினது; முக்கோண வடிவில் அமைந்த அணிவிசேடம் ஒரு வகை. இவை அவரவர் வசதிக்கேற்பவும், இடத்திற்கேற்பவும், பழக்க வழக்கத்திற்கு ஏற்பவும் அமைந்தனவாகலாம். உயர் வகுப்பாரைப் பார்த்து மற்ற வகுப்பார் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுவதைப் போலவே சில வகுப்பார் தாலி கட்டுதலையும் மேற்கொண்டுள்ளனர் என்பது தெரிகின்றது.

இங்ஙனம் தாலி பல உருவில் அமைந்திருத்தலும், அது உண்மை மணத்திற்கு முன்னும், மணத்தின்போதும், மணத்திற்குப் பின்னும் எனப் பல சந்தர்ப்பங்களில் கட்டப்படுதலும், அதனைக் கணவன் மட்டுமே அல்லாமல் நாத்தி முதலிய பலர் கட்டுதலும், பாண்டிய நாட்டிலிருந்து ஓடிய முதுவர் "தாலி கட்டிய பெண்கள் அகாலத்தில் இறந்து

விட்டதால் அதனை நிறுத்தி விட்டோம்" என்று கூறுதலும் கவனிக்க, இப்பழக்கம் இந்நாட்டுச் சான்றோரால் தொன்று தொட்டு ஏற்படுத்தப்பட்டதன்று என்பதும், எங்ஙனமோ இடைக்காலத்தில் தோன்றி அவரவரவர் பழக்கத்திற்கேற்ப இடம்பெற்றது என்பதும் நடுவுநிலையிலிருந்து காண்பார்க்கு நன்கு புலனாகும்.

உண்மை எதுவாயினும், தாலி என்பது தமிழர்க்கே உரியது. அது மங்கல நாண் வருவதற்கு முன் பெண்கள் கழுத்தில் புலிப்பல் தாலியாகவும், வேறு உருவிலமைந்த தாலியாகவும் இருந்திருத்தல் வேண்டும். மங்கல நாண் வந்த பிறகு அந்தத்தாலி 'மங்கலத் தாலி' யாக மாற்றம் பெற்றுவிட்டது என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

இனி 'தாலி' என்னும் சொற்பொருளை ஆராய்வோம்.

## 9. தாலி-சொற்பொருள் ஆராச்சி

**முன்னுரை**

புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும், பின்னர்த் தோன்றிய இலக்கியங்களிலும் குறிக்கப் பட்டுள்ள *தாலி* என்னும் சொல் சங்க காலத்திற்கும் முற்பட்ட பழமையுடையது என்பது தெரிகிறது. இச்சொல் தோன்றிய காலத்து இலக்கியம் நமக்குக் கிடைக்காமையால், இஃது இன்ன பொருளைத்தான் குறித்தது என்று இப்போது துணிந்து கூறுதற் கில்லை. ஆயினும், இச்சொல் வந்துள்ள புற நானூறு முதலிய இலக்கியங்களில் இருந்தேனும் இஃது இன்ன பொருளைக் குறித்திருத்தல் வேண் டும் என்று ஆராய்ச்சி நிகழ்த்தி முடிவுக்கு வருதலே முறையாகும். அந்த முறைபற்றி, இலக்கியம், இலக்கணம், நிகண்டு, வரலாறு, மொழிநூல், வழக்காறு இவற்றின் துணையைக்கொண்டு இச்சொற்பொருளை ஆராய முற்படுவோம்.

### I

எந்நாட்டிலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல் என்னும் நால்வகை நிலப்பாகுபாடு உண்டு என்பதை 'நானிலம்' என்ற தொடரே நன்குணர்த் தும். இந்நானிலத்துள்ளும் மலைநிலமாகிய குறிஞ் சியே மக்கள் வாழ்வு தொடங்கிய முதலிடம் என்பது வரலாறு கண்ட உண்மை. 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' என்னும் பிற்காலப் பாடலும் மலை

நிலத்தில்மக்கள் வாழ்வுதொடங்கிய உண்மையையே வலியுறுத்தும். மலைவாழ் மக்களாகிய குறவர் அல்லது வேட்டுவர் விலங்கினங்களை வேட்டையாடி வாழ்வு நடத்திவந்தனர். மலைவாழ் விலங்கினங்களுள் வலிமையினும் கொடுமையினும் மிக்கது புலியேயாகும். எனவே, அதனை வேட்டையாடிக் கொல்வது வீரச்செயலாகக் கருதப்படல் இயல்பேயன்றோ? இங்ஙனம் புலியோடு பொருது வென்ற வீரத் தமிழ் மகன், தான் புலியை வென்று கொன்றதை வழிவழி நினைவு கூர்தற் பொருட்டும், பல்லோர் பாராட்டுதற் பொருட்டும், தான் கொன்ற புலியின் பற்களை அழகு செய்து நூலிற் கோத்துத் தானும் அணிந்ததோடன்றி, தன்பால் அன்புகொண்ட தன் மனைவி மக்களுக்கும் அணிந்து மகிழ்ந்தான். அக்காலப் பெண்கள் தாங்கள் இயல்பாகவே அணிந்திருந்த மணிவடத்தில் இப்புலிப் பற்களையும் கோத்து அணிதல் மரபு. இதனை,

> "புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
> கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே"

என்னும் அகநானூற்று (செய். 7) அடிகளால் உணரலாம்.

இவ்வணி விசேடம் ஏனை நில மக்களது பாராட்டுக்கும் நாளடைவில் உரியதாயிற்று. ஆகவே, அவர்கள் புலிப்பல் போன்ற பொன்னணிகளை அணியலாயினர். அங்ஙனம் அணியுங்கால், இது 'புலிப்பல் தாலி' என்பது விளங்கும்படி அங்காந்த வாயுடன் பல்லும் நாவும் தெரியும்படி அமைந்த புலிமுக வடிவில் அவ்வணியைச் செய்து கயிற்றில்

கோத்துக் கழுத்தில் அணிந்தனர். இவ்வணியைச் சிறுவர் சிறுமியர்க்கு அரைஞாணில் கோத்து அணிதல் இக்காலத்திலும் சிற்றூர்களில் காணலாம்.

பெரிய புராணம் முதலான பிற்கால நூல்களில் மங்கல நாணில் கோத்த சிறப்பணியாகத் தாலி வழங்கலாயிற்று. ஆயின், அந்தத் தாலி எவ்வடிவினது என்பது விளக்கமாகக் கூறப்படவில்லை. ஆனால், இன்றுள்ள தமிழினத்தார் பலருள்ளும் புலிப்பல் வடிவு அமைந்த தாலியே பெருவழக்குடையதாக இருந்து வருகிறது. இதனை நோக்க, குறிஞ்சி நிலத்தில் தோன்றிய வீரச் சின்னமே, ஏனைய நிலத்தமிழரிடத்து மணத்தாலியாக மாற்றங் கொண்டது என்று ஊகிக்க இடமுண்டு.

'*தால்*' என்னும் சொல் நாவைக் குறிக்கும். '*தாலி*' என்பது தாலத்தை அதாவது நாவை, 'உடையது (வாய்) எனப் பொருள்படும். எனவே '*தாலி*' என்பது புலியின் அங்காந்த வாய் வடிவில் செய்த ஆபரணத்தைக் குறிப்பதாயிற்று. அங்காந்தவாய் எனவே, பல்லும் நாவும் வெளிப்பட்டே தீரும். பற்களின் வளைந்த வடிவத்தையும் சில தாலிகளில் காண்கின்றோம். புலியின் காதுகள் என்று சொல்லத்தகும் துளைகளில்தான் நாணினைக் கோத்து அந்நாணினை அணிவது மரபாயிற்று. இங்ஙனம் முதலில் தோற்றமெடுத்த அங்காந்த வாயுடன் கூடிய தாலி, அதன் வரலாறு மறைந்த பிற்காலத்தில், புலியின் அங்காந்த வாய் மறைந்து, புலிப்பல் அளவிலேயே செய்து அணியப்படலாயிற்று என்று ஊகிக்கலாம்.

## II

தமிழ் இலக்கணத்தில் எழுத்துப்போலி என்றொரு பகுதி உண்டு. ஓர் எழுத்து இருக்கவேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து நின்றாலும் சொற்பொருள் வேறுபடாத நிலையே அவ்விலக்கணமாகும். உதாரணம் :

I (1) ஞண்டு—நண்டு
ஞான்—நான்
ஞமலி—நமலி
ஞமிர்தல்—நிமிர்தல்

(2) இலைஞ்சி—இலஞ்சி
நிலையம்—நிலயம்
பழைமை—பழமை
அரைசன்—அரசன்

(3) பந்தல்—பந்தர்
வண்டு—வண்டர்
குளம்—குளன்
வைத்த—வைச்ச

இவ்வாறே மெல்லெழுத்து முதல் மொழிகள் வல்லெழுத்து முதல் மொழிகளாவதையும் காணலாம். உதாரணம் :

II ஞாய்—தாய்
நகநக—தகதக
ஞாங்கர்—பாங்கர்
ஞரேலென—சரேலென
நேடுதல்—தேடுதல்
நூக்கு—தூக்கு

மொழியிடையிலுள்ள மெல்லெழுத்தும் வல்லெழுத்தாவதைப் பல உதாரணங்களில் காணலாம்.

### 1II சிவந்த எருது—சிவத்த எருது நந்து—நத்தை

மொழிக்கு முதலில் வரும் ஞகரம் நகரமாவதை ஞண்டு—நண்டு முதலான பல உதாரணங்களால் கண்டோம். ஞகரம் ச, ப, த முதலரன வல்லினமாவதை ஞாய்—தாய் முதலான உதராணங்களில் கண்டோம்.

ஞாய் - தாய் எனத் திரிவதுபோலவே, 'ஞால்' என்பது '*தால்*' எனத் திரிதல் கூடும். உலகத்தைக் குறிக்கும் 'ஞாலம்' என்ற சொல் 'தாலம்' எனத் திரிந்து பிற்கால இலக்கியங்களில் இடம் பெற்றிருத்தல் காண்கின்ரேும். "*தாலம்* முறைமையிற் பரிந்து காத்தான்" (36-1) என்பது நம்பி திருவிளையாடல், "தாலம் பதிஞலும்" (நாட்டு. 9) என்பது அரிச்சந்திர புராணம். ஞாலம் என்ற சொல்லின் பகுதி 'ஞால்' என்பதாகும். ஞால்-தொங்குதல் என்று பொருள்படும். ஞாலம் - அந்தரத்தில் தொங்கும் உலகம். 'ஞால்' என்பதன் திரிபாகிய 'தால்' என்பதும் தொங்குதல் என்ற அப்பொருளேயே உணர்த்துவதாகல் வேண்டும். தால் + இ = *தாலி - தொங்கு தலையுடையது.* எனவே, 'தாலி' என்பது கழுத்தில் அணியும் கயிற்றில் தொங்கும் நகையைக் குறிப்பதாகும். இக்காலத்து 'அட்டிகை' என்று சொல்லப்படும் அணியில் தொங்கும் பதக்கம் போலக் கழுத்து நாணில் தொங்கும் காரணம்பற்றி (தொங்குவது

என்னும் பொருளில்) 'தாலி' என்னும் பெயர் வந்திருத்தல் கூடும்.

தாலியிற் பல உண்டு: ஐம்படைத்தாலி, புலிப்பற்றுலி, ஆமைத்தாலி முதலியன. தாலி என்பது பொதுப்பெயர். அப்பெயர் அடையோடு சார்ந்து வரும்பொழுதுதான் ஓரணியைக் குறிக்கும். அதாவது, ஐம்படைகளைப் பொன்னுல் செய்து கழுத்துநாணில் தொங்கவிடின், அவ்வணி ஐம்படைத் தாலியாகும்; புலிப்பல்லைக் கோத்துத் தொங்கவிடின், அவ்வணி புலிப்பல் தாலியாகும்; ஆமையுருவம் அமைந்த அணியைக் கோத்துத் தொங்கவிடின் அவ்வணி ஆமைத்தாலியாகும். எனவே, 'தாலி' என்பது 'தொங்கும் நகை' என்னும் ஒன்றைக் குறிக்குமேயன்றி, அவ்வணி கோக்கப் பெற்ற நூலையோ அல்லது சரட்டையையோ அல்லது தனியொரு பொருளையோ குறிக்காது. தாலி என்பது தொங்கும் ஒரு பொருள். தொங்கும் அப்பொருளின் வடிவிற்கேற்ப அந்தத்தாலி அடைமொழி சேர்த்து ஐம்படைத்தாலி என்பதுபோல வழங்கப்படும்.

அடைமொழியின்றி வரும் 'தாலி' என்னும் சொல் எப்பொருளைக் குறிக்கும் என்று கேட்பர் சிலர். பொற்றுலி என்பதில் உள்ள 'பொன்' என்னும் அடையை நீக்கியபின் எஞ்சிநிற்கும் 'தாலி' எதைக் குறிக்கும்? பொன்னின்றித் தாலி எங்கே? தாமரையில் வெண்டாமரை எனவும், செந்தாமரை எனவும் இருவகை உண்டு. வெண்மை, செம்மை என்ற அடைகளை நீக்கியபின் நிற்கும் தாமரை என்ற சொல் எப்பொருளைக் குறிக்கும்?

தாமரை என்ற பொதுச்சொல் அடையடுத்து நின்றே ஒரு குறிப்பிட்ட பொருளை உணர்த்தும் என்க. அணி என்பது பொது. அது கழுத்தணி, காதணி, மூக்கணி, கையணி முதலான பலவற்றையும் குறிக்கும். கழுத்து, காது, மூக்கு முதலான அடைகளை நீக்கியபின் நிற்கும் ‘அணி’ என்பது எதனைக் குறிக்கும்? எனவே, ‘அணி’ என்பது அடையோடு நின்றே ஒரு குறிப்பிட்ட பொருளை உணர்த்துவதாகும். ‘தாமரை’ என்பது ஒரு மலர் என்றும், ‘அணி’ என்பது ஒரு நகை என்றும் பொருள்படுவது போலவே, ‘தாலி’ என்பதும் ‘தொங்கும் ஒரு பொருள்’ என்றே பொருள்படும் எனக்கொள்க. ஆகவே, தாலி என்னும் பொதுச் சொல்லும் அடையடுத்து நின்றே ஒரு குறிப்பிட்ட பொருளை உணர்த்தும்.

ஆனல், பிற்காலத்தில் தாலி என்பது அடைமொழியின்றியே மங்கலநாணில் கோக்கப்பெற்றுத் தொங்கும் அணிவிசேடத்தைக் காரண இடுகுறியாய் நின்று குறிப்பதாயிற்று. காற்றில் ஆடுகின்ற கொடி, வெளியில் உலரும் ஆடை, பட்டம் ஆகிய அனைத்தும் காற்றில் ஆடுகின்ற காரணத்தால் ‘காற்ருடி’ என்னும் பெயருக்குரியவாயினும், பட்டம் ஒன்றையே காற்ருடி என வழங்குகின்ருேம். அதுபோலவே, கழுத்து நாணில் தொங்கவிடும் அணிகள் பலவற்றிற்கும் தாலி (தொங்குவது) என்னும் காரணப்பெயர் உரியதாயினும், இந்நாளில் அப்பெயர் (தாலி) மங்கல நாணில் கோத்துத் தொங்கவிடப்படும் மணவணியையே குறிக்கலாயிற்று என்று கொள்ளுதல் பொருத்தமாகும்

## III

'தாலி' என்பது பனைக்கு ஒரு பெயர். இது பெரியாழ்வார் பாசுரத்தால் அறியப்படும். கண்ண பிரான் பனங்குருத்தால் செய்யப்பட்ட 'தாலிக் கொழுந்து' என்னும் அணியைத் தன் இளம்பருவத்தில் கழுத்தில் அணிந்து விளையாடினன் என்பதை,

" தாலிக் கொழுந்தைத் தடங் கழுத்திற் பூண்டு"
(திவ். 2-6-1)

என்று அவ்வாழ்வார் குறிப்பிடுகின்றார். ஈண்டுத் 'தாலிக்கொழுந்து'-பனங்கொழுந்து என்று உரைகாரரும் கூறுவர். இக்காலத்தும் பனையோலைக் கொழுந்தைப் பதக்கம்போல அழகுறப் பின்னி அதனைக் கயிற்றிலோ, அவ்வோலைக் கிழிப்பிலோ கோத்துத் தொங்கவிட்டுக் கழுத்தில் அணிந்து மகிழ்தல் சில சிற்றூர்ச் சிறுரிடம் காணலாம். பனையைக் குறிக்கும் 'தாலி' என்னும் இச்சொல், நானூறு ஆண்டுகட்குமுன் 'தாளி' என மருவினமை மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டால் அறியப்படும். லகரம் ளகரமாக மாறி வழங்குதலை, மதில்-மதிள், செதில்-செதிள் முதலான உதாரணங்களால் அறியலாம். இவை போலவே 'தாலி' என்னும் சொல் 'தாளி' எனப் பிற்காலத்தில் மாறியிருத்தல் கூடும்.

தால், தாலம் என்பனவும் பனையைக் குறிக்கும் சொற்களாகும். "சூழொளித் தாலும் யாழும் ஏந்தி" (அழற்படு. வரி. 81) என்பது சிலப்பதிகாரம். பனையைக் குறிக்கும் 'தால்' என்னும் சொல் முதலாகு பெயராய் அதன் கொழுந்தையும் குறிக்

கும். பனையோலைக் கொழுந்தால் செய்யப்பட்ட அணி ' தாலி ' எனப் பண்டை மக்களால் குறிக்கப் பட்டது எனக் கொள்ளினும் தவருகாது. பண்டை மக்களுக்கு ஒரு காலத்தில் பனையோலையே காதணி யாக இருந்தது. அதனுல் காதணி, ' ஓலை ' என்ற பெயரால் அக்காலத்து வழங்கப்பெற்றது. பனை யோலைக்குப் பதிலாகக் காதில் அணியப்படும் பொன்னணிகளும் அவ் ' ஓலை ' என்னும் பெய ரையே பிற்காலத்தில் பெறுவனவாயின. 'தோடு' என்பதும் பனையோலையைக் குறிப்பதே. பனை யோலைக்குப் பதிலாகக் காதில் அணியப்படும் பொன்னணிகட்கும் பிற்காலத்தில் 'தோடு' என் னும் அப்பெயரே வழங்கப்படுதல் காண்கின்ரேம். இவை போலவே, பனங்குருத்து (தாலி) கொண்டு செய்யப்பட்ட அணியை (தாலியைக்) குறித்த 'தாலி' என்னும் சொல், பிற்றை நாட்களில் பொன்னுல் செய்து கழுத்தில் அணியப்பட்ட நகையைக் குறிக்கலாயிற்று எனக்கோடலே இது காறும் கூறப்பெற்ற சான்றுகளால் ஏற்புடைய தாகும்.

இறைவனது படைப்பில் தோன்றிய ஓரறி வுயிர், அவனருளால் படிப்படியாக வளர்ச்சியுற்று ஆறறிவு உயிர் ஆயினமை போலவே, தமிழ்நாட்டு வளரும் சமுதாயத்தில் அணிகளும் ஓலையில்தொடங் கிப் படிப்படியாக வளர்ச்சியுற்று விலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்ற பொன்னணிகளான உண்மையையும், அவ்வாருகிய வழியும், அவை பழம்பெயரையே விடாமல் கொண்டுள்ள இயல் பினையும் இவ்வாராய்ச்சி நமக்குப் புலப்படுத்தல் காணலாம்.

## முடிவுரை

வளரும் சமுதாயத்தில், இன்றுள்ள சடங்குகளும் பழக்கவழக்கங்களும் மாருமல், மறையாமல், புதியனவாகத் தோன்ருமல் பல நூற்ருண்டுகளாக அப்படியே இருந்துவருகின்றன என்று சமுதாய வளர்ச்சியை உணர்ந்த எவரும் கூருர். ஒருசில பழக்கவழக்கங்களும் சடங்குகளும் நாளடைவில் மறைதல் உண்டு; **மாறி** இடம்பெறல் உண்டு; புதியனவாகத் தோன்றுதலும் உண்டு. 'ஒன்று மற்ெருன்ருக **மாறுதல்**' என்ற நியதிப்படி (Evolution), பழங்காழத்தில் சாதாரணமாக அணியப்பட்டுவந்த புலிப்பல்தாலி போன்ற தாலிவகைகள், ஏறத்தாழக் கி. பி. 11-ஆம் நூற்ருண்டு முதல் தமிழகத்தில் திருமணத்திற்குரிய சிறப்பு அணியாக **மாறிவிட்டன** என்னும் உண்மையை இவ்வாராய்ச்சி நன்குணர்த்தும்.

தாலிபற்றிய உண்மை வரலாற்றை அறிவதற்கே இதுகாறும் இவ்வாராய்ச்சி நிகழ்த்தப்பட்டது. இக்காலத் திருமணங்களில் தாலி கட்டப்படுதல் தவறு என்பதை வற்புறுத்தவோ. கட்டியிருப்போர் அது பயனற்றது என்று நினைப்பதற்கோ, இனி அது கட்டப்படவேண்டுவதில்லை என்பதை வற்புறுத்தவோ இவ்வாராய்ச்சி எழுந்ததன்று என்பதைத் தமிழ் மக்கள் அறிய வேண்டுகிறேன்.